# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி
# தொலைநெறி தொடர்கல்வி இயக்ககம்
# பி.ஏ., தமிழ் (இரண்டாம் ஆண்டு)

உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அலகு 1 | 1 |
| 2. | அலகு 2 | 18 |
| 3. | அலகு 3 | 51 |
| 4. | அலகு 4 | 65 |
| 5. | அலகு 5 | 78 |


## அலகு 1

### தமிழின் பெருமை

தமிழ் என்ற சொல் தொல்காப்பியத்தில் "தமிழ் என் கிளவியும் அதனோ ரற்றே" என்று நூற்பாவில் காணப்படுகிறது.

"தமிழ் என்ற சொல் மொழி, தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ்ரசர் போன்ற பொருள்களைத் தந்தது. 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்பது பிங்கலத்தை நிகண்டு கூறும் பொருள்" என்கிறார் ச. வே. சுப்பிரமணியன் (தமிழ் இலக்கிய வரலாறு ப. 15)

கன்னித்தமிழ், கட்டழகுத் தமிழ், கவினுறு தமிழ், காலங்காலமாய் நிலைத்து நிற்கும் தமிழ், கற்கண்டுத் தமிழ் என்றும் இளமையாய் இனித்து இருக்கும் தமிழ், முத்தமிழ், முத்துத்தமிழ், முத்தான தமிழ், மூவேந்தர் வளர்த்த தமிழ். என்றெல்லாம் பாராட்டப்படுகின்ற தமிழ் காலத்தால் பழமையானது.

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த தமிழ்க்குடி"

என்று கூறும் அடிகளிலிருந்து தமிழின் பழமையை அறிய முடிகிறது. 2500 ஆண்டுகளுக்கு முன் உள்ள தொல்காப்பியத்தில்

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல் உலகத்து"

என்று வரும் அடிகளால் தமிழின் தொன்மையை அறியலாம்.

அடியார்க்கு நல்லார்

"வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம் என்று
இந்நான்கு எல்லை தமிழது வழக்கே"

என்று கூறுவதிலிருந்து தமிழின் தொன்மையும், அது வழங்கப்பட்ட எல்லைகளையும் அறியமுடிகிறது. ஒரு மொழியில் பழங்காலத்திலேயே என்று கூறுவதிலிருந்து தமிழின் சிறந்த இலக்கிய இலக்கணங்கள் தோன்றியிருக்குமானால், அம்மொழி பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். எனவே மனித நாகரிகம் தோன்றும் போதே தமிழும் தோன்றியிருக்க வேண்டும் எனலாம்.

திருஞான சம்பந்தர் தமிழின் பெருமையைத் தாம் உணர்ந்ததால் உலகிற்கும் உணர்த்தினார். அவர் பயன் கொண்ட தமிழுக்குரிய அடைமொழிகளாக அருந்தமிழ், ஆரா அருந்தமிழ், இசைமலி தமிழ், இன்தமிழ், இன்புறுந்தமிழ் போன்று 48 அடைமொழிகள் தந்து தமிழின் பெருமையை உணர்த்துகிறார்.

### தமிழின் தொன்மை

தமிழ மொழியானது சங்கங்கள் பல கண்டு வளர்ந்த சங்கத்தமிழ் என்கிற பெருமையை உடையது. தமிழ்ப் புலவர்கள் கூடிப் பழங்காலத்தில் தமிழை வளர்த்தார்கள். இதனால் சங்கம்

வைத்து இலக்கண, இலக்கியங்கள் படைத்த சிறப்பு உலகின் வேறு எம்மொழிக்கும் இல்லை என்று கூறலாம். இவ்வகையில் தமிழ் மொழி பெருமை பெறுகிறது.

**தமிழின் இனிமை**

தீந்தமிழ், தேன்தமிழ், என்றுமுள்ள இனிய தமிழ். இந்தத் தமிழ் நம் இனிமையான உயிரை வளர்க்கும் அருமருந்து. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் பாரதியார்.

"தமிழுக்கு அமுதென்று பேர்"

என்றார் புரட்சிகவிஞர் பாரதிதாசன்.

"தமிழ் தித்திக்கும் தெள்ளமுதென்றும், மனதால் உண்ணப்படும் தேன் என்றும்"

தமிழ் விடுதூது கூறுகிறது.

**தமிழ் இலக்கிய வடிவங்கள்**

தமிழ் இலக்கியம் தொடங்கிய காலத்தில் அகவல், கலிப்பா, பரிபாடல் என்னும் செய்யுள் வடிவங்கள் சிறப்புப் பெற்றிருந்தன. சங்க இலக்கியங்கள் பெரும்பான்மையும், ஆசிரியப்பாவால் அமைந்தன. பழங்காலத்தில் உரைநடையும் நான்கு நான்கு சீரகளாக அமைய எழுதப்பட்டது. சிலம்பில் காணும் உரை நடையில் இந்த அமைப்பை அறிய முடிகிறது. அகவலும் வெண்பா வடிவங்களும் இன்றுவரை போற்றப்பட்டு வருகின்றன. பண்ணத்தி என்கிற வடிவமானது இசைப்பாடலிலிருந்து இலக்கியப்பாட்டிற்குக் கொள்ளப்பட்ட வடிவமாகும். கம்பன், சேக்கிழார், கச்சியப்பர், தொடங்கி இன்று வரை விருத்தப்பாக்களால் மிகுதியான இலக்கியங்கள் தோன்றின. நாட்டுப்புற வடிவங்களாகிய காவடிச் சிந்து, கண்ணி, கும்மி போன்ற வடிவங்கள் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றின.

**தமிழ் இலக்கிய வகைகள்**

தமிழின் இலக்கிய வகைகளை ஒன்பது வகையாகப் பிரிக்கலாம். அவை,

| | | | |
|---|---|---|---|
| 1. | திணை இலக்கியம் | - | அகம், புறம் |
| 2. | நீதி இலக்கியம் | - | |
| 3. | காப்பிய இலக்கியம் | - | முற்காலம், இடைக்காலம் |
| 4. | பக்தி இலக்கியம் | - | சைவம், வைணவம் |
| 5. | சிற்றிலக்கியம் | - | |
| 6. | தத்துவ இலக்கியம் | - | சித்தர் பாடல்கள், சாத்திர நூல்கள் மெய்ப்பொருள்விளக்க நூல்கள் |
| 7. | உரை இலக்கியம் | - | இலக்கண உரை, இலக்கிய உரை, சாத்திர உரை, மணிப்பிரவாளம். இக்கால உரை |
| 8. | இசை நாடக இலக்கியம் | - | நாடக வடிவம், தேவாரம், திருப்புகழ், தாயுமானவர் பாடல்கள், வள்ளலார் பாடல்கள், குறம், குறவஞ்சி, பள்ளுவகை, கீர்த்தனை நாடகங்கள், தெருக்கூத்து, மேடை நாடகங்கள் |
| 9. | மறுமலர்ச்சி இலக்கியம் | - | தமிழ்ப்புலவர்கள், கவிதை, கதை, கட்டுரை, நாடகம், அறிவியல், ஆய்வியல், மொழியியல், நாட்டுப்புறவியல், சித்த மருத்துவம். |

**தமிழ் இலக்கிய வரலாற்றுக் கல்வி**

வரலாறு என்பது பொது நிலையில் மன்னர் வரலாறு, நாட்டு வரலாறு, மனித சமுதாயத்தின் நாகரிகத்தின் வரலாறு என்று பல நிலைகளில் அமையலாம். இவற்றைப் பொறுத்தே இலக்கிய வரலாறு அமைகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலங்கள் இன்னும் தெளிவாக வரையறுக்கப்

பெறவில்லை. இலக்கிய வரலாற்றுக் கல்வியைப் பருந்துப் பார்வை என்கிற நிலையில் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

1. சங்ககாலம் - கிமு 500 - கிபி 250
   (முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களும் சேர்ந்து)
2. சங்கம் மருவிய காலம் - கிபி 250 - கிபி 600 வரை
   (களப்பிரர்கள் காலம்)
3. பல்லவர் காலம் - கிபி 600 - கிபி 850 வரை
4. சோழர் காலம் - கிபி 850 - கிபி 1350 வரை
5. நாயக்கர் காலம் - கிபி 1350 - கிபி 1750 வரை
6. ஐரோப்பியர் காலம் - கிபி 1750 - கிபி 1947 வரை
7. தற்காலம் - கிபி 1947 முதல் இன்று வரை

தமிழக வரலாற்றுத் திருப்புமுனை அடிப்படையில்

இதன் அடிப்படையில் வரலாற்றுக் கல்வியைப் பார்ப்பதுண்டு

1. தன்னரசுக் காலம் - கிமு 1000 - கிபி 250 வரை
2. முதல் வேற்றரசுக் காலம் - கிபி 250 - 900
3. தமிழரசு எழுச்சிக் காலம் - கிபி 575 - 1300
4. இரண்டாம் வேற்றரசுக் காலம் - கிபி 1310 - 1750
5. ஐரோப்பியர் ஆட்சிக்காலம் - கிபி 1800 - 1947
6. உரிமையரசுக் காலம் - கிபி 1947 முதல்

கா. சுப்பிரமணிய பிள்ளையின் காலப்பகுப்பு

1. மாணிக்கவாசகர் காலம்
2. ஆழ்வார்கள் காலம்
3. சைவக் காப்பியக் காலம்
4. உரையாசிரியர்கள் காலம்

எம். எஸ் பூரணலிங்கம் பிள்ளையின் பகுப்பு

ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்று நூலை எழுதியுள்ளார் பூரணலிங்கம்பிள்ளை அதில்

1. Classical – செவ்வியல் இலக்கியக் காலம்
2. The age of Buddhists and Jains – புத்த சமணக் காலம்
3. The age of Religious Revival – சமய மறுமலர்ச்சிக் காலம்
4. The age of Literary Revival – இலக்கிய மறுமலர்ச்சிக் காலம்
5. The age of Muts and matam – மடங்களின் காலம்
6. The age of European Culture – ஐரோப்பியப் பண்பாட்டுச் செல்வாக்குக் காலம்

என்று அவர் பகுத்துள்ளார்.

முனைவர் ஆ. வேலுப்பிள்ளையின் பகுப்பு

தமிழ் இலக்கியத்தில் "காலமும் கருத்தும்" என்ற நூலில் (1969)

1. இயற்கை நெறிக் காலம் (சங்க காலம்)
2. அறநெறிக் காலம் (நீதி நூற் காலம்)
3. சமய நெறிக் கலம் (புத்த,சமண, சைவ, வைணவ நூற்கள் தோன்றிய காலம்)
4. தத்துவநெறிக்காலம் (சைவ சித்தாந்தம், சித்தர்கள் தோன்றிய காலம்)
5. அறிவியல் நெறிக்காலம் (ஐரோப்பியச் செல்வாக்குடன் விளங்கும் தற்காலம்)

பாடநூல்கள் என்ற வகையில் டாக்டர். மு.வ. தமிழண்ணல், சி. பாலசுப்பிரமணியன், எம்மார் அடைக்கலசாமி, மது. ச. விமலானந்தம் பேராசிரியர் துரைராசன் போன்றவர்கள் இலக்கிய வரலாற்று நூல்கள் படைத்துள்ளனர். இன்று வரை நாம் தமிழ் இலக்கிய வரலாறு பகுப்பு முறையில் பலவிதமான மாற்றங்களைக் கண்டு வருகிறோம்.

## தொல்காப்பியம்

தமிழில் இன்று கிடைக்கின்ற நூல்களுள் முதல் நூல், முதன்மையான நூல் தொல்காப்பியம். "ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியரின்" தொல்காப்பியம் காலத்தால் பழமையான ஓர் இலக்கண நூல் ஆகும். இது எழுத்து, சொல், பொருள் பற்றிய இலக்கணங்களை விரிவாகத் தருகிறது. யாப்பு பற்றியும் அணி பற்றியும் உள்ள செய்திகளைப் பொருள் இலக்கணத்திற்குள் உள்ளடக்கியது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூல் என்று அறிஞர்கள் கூறுவர். இதன் சிறப்பு குறித்து நாவலர் சோம சுந்தர பாரதியார்.

"தமிழில் மட்டுமன்று உலகில் நிலவும் பல மொழிகளில் பாராட்டப்பெறும் எல்லா இலக்கணங்களிலும் இல்லாத இயல் வளமும் எழிலும் பயனும் பண்பும் வாய்த்தது. வேறெந்த மொழி நூலுக்கும் இல்லாத பழமையும் பெருமையும் அழகும் அருமையும் அமைந்தது" என்று எடுத்துரைக்கின்றார்.

தொல் + காப்பு + இயம் எனப்பிரித்துப் பழமையைக் காத்து இயம்பும் நூல் என்று கொள்வது மேலும் பொருந்தும் என்கிறார் ச. வே. சுப்பிரமணியன்.

### தொல்காப்பிய அரங்கேற்றம்

காப்பியக் குடியில் பிறந்த தொல்காப்பியர் இந்நூலை இயற்றினார் என்பர். தொல்காப்பியர் குறித்துப் பல புனைகதைகள் வழங்குகின்றன. நிலத்திரு திருவின் பாண்டிய மன்னனின் அவையில் தமிழ்ச் சான்றோராகிய அதங் கோட்டாசானின் முன்பாகத் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்பதைப் பாயிரத்தின் மூலமாகவே அறிய முடிகிறது.

### நூல் அமைப்பு

தொல்காப்பியமானது எழுத்து, சொல், பொருள், என்ற மூன்று பிரிவினைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் ஒன்பது இயல்களைக் கொண்டது. மொத்தம் 27 இயல்கள்.

எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களையும்
சொல்லதிகாரம் 463 நூற்பாக்களையும்
பொருளதிகாரம் 664 நூற்பாக்களையும்
மொத்தம் 1610 நூற்பாக்களையும் கொண்ட நூல் இது என்பர்.
இளம்பூரணர் உரைப்படி 1585 நூற்பாக்கள்

### தொல்காப்பியத்தின் தனிச்சிறப்புக்கள்

மிகப் பழங்காலத்தே தமிழ் எழுத்துக்கள் வகைப்பட்டிருந்தன என்ற பெருமையை,

" எழுத்தெனப் படுப
அகரம் முதல்
னகரம் இறுவாய் முப்ப..து என்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே"

என்கிற தொல் நூற்பாவின் வழி உணர முடிகிறது.

### எழுத்ததிகாரம்

தமிழில் எழுத்துக்கள் எவ்வாறு பிறக்கின்றன. அவற்றின் மாத்திரை அளவு என்ன, சார்பெழுத்துக்களின் தன்மை போன்ற தமிழ் ஒலிகளைப் பற்றி விரிவாகக் கூறுவது எழுத்ததிகாரம் ஆகும். எழுத்ததிகாரத்தில் நூன்மரபு முதலாகக் குற்றியலுகரப் புணரியல் ஈறாக ஒன்பது இயல்களாக உள்ளன.

### சொல்லதிகாரம்

உயர்திணை, அ..றிணை, இவற்றைக் கூறி இவற்றின் அடிப்படையில் சொற்கள் பிறப்பதை விளக்குவது சொல்லதிகாரம். சொற்கள், சொற்றொடர்களின் அமைப்பை இது விளக்கிக் காட்டுகிறது. சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம் முதலாக எச்சவியல் ஈறாக ஒன்பது இயல்கள் உள்ளன.

### பொருளதிகாரம்

தமிழின் உயிர்நாடி, முதுகெலும்பு, பொருளதிகாரம். வேறு எந்த மொழிக்கும் இல்லாத இலக்கணம் பொருளிலக்கணம். பொருளதிகாரம் என்பது தமிழ் இலக்கியத்தை ஆராய்வது. எழுத்ததிகாரம்

483 நூற்பாக்களையும், சொல் 463, பொருள் 664 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. அகத்திணை இயல் முதலாக மரபியல் வரை 9 இயல்களைக் கொண்டது பொருளதிகாரம். உலக உயிர்களின் பகுப்பினை மரபியலில் தெளிவாகக் கூறுகிறார். "ஏறக்குறைய 1600 சூத்திரங்கள் அமைந்துள்ள தொல்காப்பியத்தில் இந்த மூன்றாம் பகுதி 650 சூத்திரங்கள் கொண்டது ஆகும்" என்கிறார் டாக்டர் மு. வரதராசனார்.

**தொல்காப்பியர் காட்டும் நிலப் பாகுபாடு**

தொல்காப்பியர் தமிழகத்தின் நில அமைப்பைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வகைப்படுத்திக் காட்டியுள்ளார். அந்தத் திணைச் சிறப்புக்களை முதல், கரு, உரி எனப் பொருளாக்கிப் பிரித்துள்ளார். பொழுதுகளைக் கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில், முதுவேனில் எனப் பிரித்துள்ளார்.

**தமிழர் கண்ட வாழ்வு**

காதலும், வீரமும் இரு கண்களாகப் போற்றப்பட்டன. காதலில் களவு, கற்பு என்ற இரு பிரிவினைக் கூறி தமிழர் நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

| | அகத்திணை | புறத்திணை |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | வெட்சி |
| 2. | முல்லை | வஞ்சி |
| 3. | மருதம் | உழிஞை |
| 4. | நெய்தல் | தும்பை |
| 5 | பாலை | வாகை |
| 6 | பெருந்திணை | காஞ்சி |
| 7. | கைக்கிளை | பாடாண் |

என முறையே அகத்தையும் புறத்தையும் தொடர்புபடுத்துகிறார் இவர். இங்கு ஒருமைப்பாடு அமைகிறது. தமிழரின் பழங்கால வாழ்க்கை முறை, தொழில், பண்பாடு, நாகரிகம், ஆட்சிச்சிறப்பு போர்முறை, கல்வி, கலைகள், ஆகியவற்றை அறியப் பொருளதிகாரம் உதவி புரிகிறது. தொல்காப்பியம் வழியில் நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப் பொருள் முதலியன இலக்கண நூல்களும் பல திறனாய்வு நூல்களும் தோன்றன. ஐந்தாயிரம் ஆண்டுத்தமிழ் இலக்கியங்களின் பிழிவு, சாரம், தொல்காப்பியமாகும்.

## சங்க இலக்கிய உண்மைகள்

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமைக்குரிய தமிழ்நாட்டில் கிமு 300 முதல் கிபி 250 வரையிருந்த கடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களே "சங்க இலக்கியம்" எனப்படும்.

**சங்கம்**

சங்கம் என்பது அறிஞர், அறவோர் பலர் கூடி அமைக்கும் அமைப்பு. மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்கிறது இறையார் களவியல் உரை. மதுரையிலும், கபாடபுரத்திலும் இருந்த முதலிரண்டு சங்கங்கள் அழிந்துவிட்டன. மூன்றாம் தமிழ்ச் சங்கம் மதுரையில் இருந்ததாகக் கருதப்படுகிறது.

1. சங்கம் என்ற சொல் தமிழில்லை
2. மூன்று சங்கங்கள் இருந்தமை பற்றிய முழுமையான செய்திகளைக் கூறுவது இறையனார் களவியல் உரை
3. மேலும் தொல்காப்பியர் சகர எழுத்து மொழிக்கு முதலில் வராது என்று குறிப்பிட்டுள்ள காலத்தில் சங்கம் என்ற சொல் அமைந்திருக்குமா?
4. சங்கம் என்ற சொல் அவை, புணர், கூட்டு தொகை, கழகம், குழு என்பது போன்ற சொற்களாகும்.
5. ஆனால் சங்கு, சமழ்ப்பு, கூட்டு என்ற சொற்கள் பரிபாடலில் பதிற்றுப்பத்தில் காணப்படுகின்றன.

சான்று

தந்து கள்வன் சமழ்ப்பு முகம்காண்மின் - பரிபாடல் 20

மன்பதை சவட்டும் கூற்றம் என்ப - பதிற்றுப் பத்து 84

சங்கம் இருந்தமைக்கான இலக்கியச் சான்றுகள்.

" 1 நிலந்திரு திருவின் பாண்டியன் அவையத்து
தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி"

என்கிறது தொல்காப்பியப்பாயிரம். மாங்குடி மருதன் என்ற புலவன் தலைவனாக இருந்து புலவர் பலர் கூடி ஆய்ந்தனர் என்பதை,

"2. ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை"

என்கிற புறம் 72வது பாடல் விளக்குகிறது.

"3. தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல"

என்கிற மதுரைக் காஞ்சி வரிகள் பாண்டியன் புலவர்களை அழைத்து மகிழ்ந்ததைக் காட்டுகின்றன.

பிற்கால இலக்கியச் சான்றுகள்

1. "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்" என்கிறது நாவுக்கரசர் தேவாரம்.
2. சங்கத் தமிழ் மூன்றும் தா - ஔவையார்
3. சங்கத் தமிழ் மாலை - ஆண்டாள் திருப்பாவை
4. தென்தமிழ் நாட்டகன் பொதியில்
திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்
சின்னமனூர்ச் செப்பேடு தரும் செய்தி
"மாபாரதம் தமிழ்ப்படுத்தும்
மதுராபுரிச் சங்கம் வைத்தும்"

என்கிறது சின்னமனூர்ச் செப்பேடு. இவ்வாறு சங்கம் இருந்தது என்பதற்குரிய சான்றுகளைக் காண்கிறோம்.

## எட்டுத் தொகை:

சங்க இலக்கியப் பாடல்கள் அகம், புறம் என்ற இரு பெரும் பிரிவுகளில் அடங்குகின்றன. சங்கப் பாடல்களில் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் என இரு பிரிவுகள் காணப்படுகின்றன. அகப்பாடல்கள் காதலைப் பாடுவன. புறப்பாடல்கள் வீரம், வெற்றி, கொடை, போன்ற பிற பண்புகளையும் அக வாழ்வுக்கு அப்பாற்பட்ட தன்மைகளையும் எடுத்துக்காட்டுவன.

" நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை"

என்கிற வெண்பாவானது எட்டுத் தொகை நூல்கள் எவை எவை என எடுத்துரைக்கின்றது.

### ஐங்குறுநூறு

இந்நூலில் திணைக்கு நூறு பாடல்கள் வீதம் ஐந்து திணைக்கு ஐந்நூறு பாடல்கள் உள்ளன. பாடல்கள் பத்துப் பத்தாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. 3-6அடி வரை அளவுடைய குறைந்த அடிகளைக் கொண்டமையால் இது ஐங்குறுநூறு என்று பெயர் பெற்றது.

மருதம் - ஓரம் போகியார்
நெய்தல் - அம்மூவனார்
குறிஞ்சி - கபிலர்
பாலை - ஓதலாந்தையார்
முல்லை - பேயனார்

ஆகிய ஐந்து புலவர்களும் ஐங்குருநூற்றுப் பாடல்களைப் பாடியவர்கள் ஆவர். பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

இந்நூலைத் தொகுத்தவர் - புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.

தொகுப்பித்தவர் - யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறையாவார்

அகச் செய்திகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஐங்குருநூறு நூற்றுப் பாடல்களில் சொற்சுவை, பொருட்சுவை, ஆகியவை அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இதோ ஒரு பாடல்:

வாழியாதன் வாழியவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
வென வேட்டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணருரன் வாழ்க
பாணனும் வாழ்க வென வேட்டேமே

தலைவன் நெறி தவறி வாழ்ந்த காலத்தில், நீங்கள் என்னைப் பற்றி யாது நினைத்தீர்கள்? என வினவினாள் தலைவி.

அப்போது தோழி தலைவனுக்குத் தலைவியின் மாண்பினை எடுத்துக் கூறுகிறாள்.

நறுமண மலர்களுடைய காஞ்சியையும் புலால் நாறும் சிறுமீனையும் பெற்ற ஊரினன் தலைவன் இதனால் உயர்குணம் மிக்க தலைவலியையும் இழிகுணம் படைத்த பரத்தையையும் ஒன்றாக் கருதும் தலைவன் என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

**குறுந்தொகை**

"நல்ல குறுந்தொகை" என்னும் அடைமொழியினைப் பெற்றுள்ள சிறப்பினை உடையது இந்நூல்.

இந்நூல் 402 பாடல்களைக் கொண்டது. 4-8 அடி வரை உடையது. 205 புலவர்கள் பாடியுள்ளனர். 307, 391 ஆகிய இரு பாடல்களும் 9 அடிகளை உடையன.

தொகுப்பித்தவர் - பூரிக்கோ

வ. சுப. மாணிக்கம் "தமிழ்க்காதல்" என்ற நூலில் குறுந்தொகையில் முதல் கருவை விட உரிப் பொருளுக்கே சிறப்பிடம் தரப்படுகிறது. என்று கூறுகிறார்.

பாடல் வரிகளால் பெயர் பெற்ற புலவர்கள்

குறுந்தொகையில் பாடிய புலவர்களில் இயற்பெயர் தெரியாத அணிலாடு முன்றிலார், குப்பைக் கோழியார், தேய்ப்புரிப் பழங்கயிற்றினார். செம்புலப் பெயனீரார், வெள்ளிலவினார், விட்ட குதிரையார், கயமனார் போன்ற புலவர்கள் தாங்கள் பாடிய பாடல்களின் வரிகளால் பெயர் பெற்றவர்கள் ஆவர்.

ஊழ்வினையால் தலைவியும் தலைவனும் தம்முள் காதல் கொண்டனர். நாட்கள் பல சென்றன. தலைவன் தலைவியிடம் கூறும் கருத்து.

" யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறுந்தொகை 40)

"உன் தந்தை, தாயும், என் தந்தை, தாயும் எவ்வகையில் உறவினர் என்பதை அறியாத நிலையில் செம்மண் நிலத்தில் பெய்த மழை நீரானது அம்மண்ணுடன் கலந்து செந்நிறமாகிச் செல்வது போல நம் அன்புடைய நெஞ்சக் காதல் ஒரு நாளும் பிரியாதன்றோ" என்று கூறுகிறான் குறுந்தொகைத் தலைவன்

**குறுந்தொகைப் பாடலின் சிறப்புக்கள்**

1 வரலாற்றுச் செய்திகள் அதிகம் காணப்படுவது.
2 விலங்கு, பறவைகளின் இனிய வாழ்க்கை ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது
3 மக்களின் பண்பாட்டுச் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது.

ஆகியவை குறுந்தொகைப் பாடல்களில் காணப்படும் சிறப்புக்களாகும்.

**நற்றிணை**

இந்நூலில் 400 பாடல்கள் உள்ளன. 275 புலவர்கள் பாடியுள்ளனர். கடவுள் வாழ்த்து பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி இதனைத் தொகுக்கச் செய்தார்.

9-12 அடி வரையறை கொண்ட பாடல்கள் இவை. அக உணர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

சொல்லழகு, பொருளழகு, உவமை நயம் இயற்கை வனப்பு ஆகியவை அமையக் கபிலர் பாடிய பாடல் ஒன்றினை ஆராயலாம்.

தலைவன் பிரிவால் தலைவி அடையும் இன்னல்களைத் தோழி கூற தலைவியானவள், தன் தலைவன் தன்னிடம் பேரன்பு கொண்டவன். ஒரு பொழுதும் பிரியமாட்டான் எனக் கூறுகிறாள்.

" நின்ற சொல்லர் நீடு தோன்றினியர்
என்றும் என்தோள் பிரியறிவரே
தாமரைத் தண்தாதாதி மீமிசைக்
சாந்தின் தொடுத்த தீந்தோள் போலப்
புரைமன்றப்புரையோர் கேண்மை
நீரின்று அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நந்நயந்து அருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறியலரே" (நற்றிணை 1)

**அகநானூறு**

அகம் + நானூறு எனப் பிரிக்க வேண்டும். இது அகம் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்ற நூலாகும். அகம் என்பது உள்ளம், மனம் எனப் பொருள் பெறும்.

400 பாடல்களைக் கொண்டது.
145 புலவர்கள் பாடியுள்ளனர்.
13-31 அடி வரையறை கொண்டது,
தொகுத்தவர் - உருத்திரசன்மர்.
தொகுப்பித்தவர் - பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதி

**அகநானூற்றில் பாடலின் வியத்தகு தனிச்சிறப்பு**

1. களிற்று யானை நிரை 1-120 பாடல்கள்
2. மணிமிடை பவளம் 121-300 பாடல்கள்
3. நித்திலக் கோவை 301-400 பாடல்கள்

பாலைத் திணைப் பாடல்கள் - 1,3,5,7,9, என 200
குறிஞ்சித் திணைப் பாடல்கள் - 2,8,12,18, என 80
முல்லைத் திணைப் பாடல்கள் - 4,14,24,34, என 40
மருதத் திணைப் பாடல்கள் - 6,16,26,36, என 40
நெய்தல் தணைப் பாடல்கள் - 10,20,30,40, என 40
அகநானூற்றை "நெடுந்தொகை" எனவும் அழைப்பர்.

**அகநானூறு தரும் இயற்கை எழில்**

மலையில் காணும் இயற்கை எழிலைக் கபிலர் ஓர் ஆடரங்கமாகக் கற்பனை செய்கிறார்.

" மலைப்பூஞ் சாரல் உண்டு யாழாக
இன்பம் இமிழிசை கேட்டுக் களி சிறந்து
மந்தி நல்லவை மருள் வரை நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும் மயில்
நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்"

இப்பாடலில்,

மூங்கில் வழி வரும் ஓசை - குழலிசையாகவும்
அருவி ஒலி - முழவொலியாகவும்
மான்களின் குரல் - பெருவங்கி
வண்டின் ரீங்காரம் - யாழோசை
ஆடும் மயில் - ஆடும் விறலி
மந்திகள் - காண்போர்

என வருகிறது. பல வரலாற்றுச் செய்திகளும் அகநானூற்றுப் பாடல்கள் வழி உணர்த்தப்படுகின்றன.

**கலித்தொகை**

1. காலத்தால் பிந்தியது கலித்தொகை
2. 150 கலிப்பாக்களைக் கொண்டது
3. 5 புலவர்கள் பாடினார்
4. தொகுத்தவர் - நல்லந்துவனார்.
5. பாலைக்கலி - பெருங்கடுங்கோ பாடியது - 35 பாடல்கள்
   குறிஞ்சிக்கலி - கபிலர் பாடியது - 29 பாடல்கள்
   முல்லைக்கலி - சோழன் நல்லு ருத்திரன் பாடியது - 17 பாடல்கள்
   நெய்தற்கலி - நல்லந்துவனார் பாடியது 33 பாடல்கள்
6. இப்பாக்கள் நாடகப்போக்கில் அமைந்தவை. பிற்காலத் திறனாய்வாளர்கள் கூறுகிற Dramatic Monologue என்கிற நாடகத் தன்னுரைகள் பல கலித்தொகைப் பாக்களில் அமைந்துள்ளதை அறியலாம்.
7. இசையோடு சொற்சுவை, பொருட்சுவை நிறைந்தது.

**புராண வரலாறுகள்**

கலித்தொகையில்,

1. வடமொழிச் சார்பு மிகுந்துள்ளது.
2. இராவணன் கயிலை மலை பெயர்த்தல்
3. பீமன் துரியோதனனைக் கொன்றது.

போன்ற புராண வரலாற்றுச் செய்திகளும் இடம் பெறுகின்றன.

தலைவன் தலைவியை உடன் போக்காக அழைத்துச் செல்ல, தேடிவந்த செவிலித்தாயிடம் கண்டோர், மலையில் பிறக்கும் சந்தனம், முத்து இசை ஆகியவை பிறக்கின்ற இடங்களுக்குப் பயன்படுத்துவதில்லை. பயன்படுத்துபவர்களுக்கே உதவுகிறது. அதுபோல் தலைவி தலைவனுக்கே பயன்படுவாள் என்கிறார்கள். (கலி : 9)

ஏறு தழுவுதல், தமிழர் விளையாட்டுக்கள், தமிழர் பழக்க வழக்கங்கள் போன்ற செய்திகளும் குறிப்பிடப்படுகின்றன. முத்தமிழ் இன்பத்தை நிறைவாகப் பெறக் கலித்தொகைப் பாடல்கள் துணைபுரிகின்றன.

**எட்டுத்தொகையில் புற இலக்கியங்கள்**

1. பரிபாடல்
2. பதிற்றுப் பத்து
3. புறநானூறு

போன்றவை எட்டுத் தொகையில காணும்புறம் பற்றிய நூல்களாகும்.

**பரிபாடல்:**

இது ஓர் இசைப்பா
70 பாடல்கள் இருந்ததாக தெரிகிறது.
ஆனால் 22 பாடல்கள் கிடைத்தன
6 திருமால் பற்றியவை
8 முருகன் பற்றியவை
8 வையை பற்றயவை
13 புலவர்கள் பாடியுள்ளனர்.

பரிமேலழகர் உரை எழுதியுள்ளார்.

பரிபாடலின் புறம், அகம் ஆகியவற்றைக் கூறுகிறது.

வையைப் பற்றிய பாடல்கள் இலக்கியச் சிறப்பு வாய்ந்தவை

பரிபாடலை அகப்புற இலக்கியம் என்பர்.

பக்குவப்பட்ட நன்மனப் பண்பைக் கீழ்வரும் பாடல் காட்டுகிறது.

யா அம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல. நின்பால்
அருளும் அன்பும் அறனும், மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலி தாரோயே ?

என செவ்வேளிடம் கடுவன் இளவெயினனார் வேண்டுகிறார்.

மதுரை மாநகரைத் தாமரை மலருக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ள நயமும் பாராட்டற்குரியதாகும். அதனை,

" மாயோன்கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொரு புரையும் சீருர் பூவின்
இதழகத்து அனைய தெருவம்இதழகத்து
அரும்பொருட்டு அனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தந்தமிழ்க்குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்"

என்னும் பாடலானது எடுத்துரைக்கின்றது. திருமாலைப் பற்றிய பாடல்கள் அனைத்தும் படித்து இன்புறத்தக்கன.

**பதிற்றுப்பத்து**

பத்து + பத்து என்பது பொருள். புறப்பொருள் நூல், சேரமன்னர் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடியது. சேரமன்னர்களின் வரலாற்றைக் கூறும் வரலாற்றுக் கருவூலம் பதிற்றுப்பத்து. 80 பாடல்களே கிடைக்கப் பெற்றுள்ளன. முதல் பத்தும் கடைசிப் பத்தும் கிடைக்கவில்லை.

| பத்து | பாடிய புலவர்கள் | பாடப்பெற்ற மன்னன் |
|---|---|---|
| 2ம் பத்து | குமட்டூர் கண்ணனார் | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| 3ம் பத்து | பாலைக் கௌதமனார் | பல்யான்ன செல்கெழு குட்டுவன் |
| 4ம் பத்து | காப்பியாற்றுக் காப்பியனார் | களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் |
| 5ம் பத்து | பரணர் | கடற்பிறக் கோட்டிய செங்குட்டுவன் |
| 6ம் பத்து | காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் |
| 7ம் பத்து | கபிலர் | செல்வக் கடுங்கோ வாழியாதன் |
| 8ம் பத்து | அரிசில்கிழார் | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை |
| 9ம் பத்து | பெருங்குன்றூர் கிழார் | இளஞ்சேரலிரும் பொறை |

சேரநாட்டை ஆண்ட மன்னர்கள் தாயமுறை உறவு கொண்ட இரு கிளையினர் என அறியப்படுகின்றனர். ஒருவர் உதியன் சேரலாதன். இவர்கள் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். மற்றொருவர் இடும்பொறை மரபினர். இவர்கள் தொண்டியைத் தலைநகராகக் கொண்டனர்.

பகைவரது பெண்டிரின் கூந்தலை அரிந்து கயிறாகத் திரிந்து யானைகளைக் கட்டி இழுப்பது என்ற அரிய வழக்கம் ஐந்தாம் பத்தில் காணப்படுகிறது. இந்நூல் அகவற்பாவால் ஆனது.

**புறநானூறு**

புறத்திணைப் பற்றிப் பேசும்.

1 400 பாடல்களைக் கொண்டது.
2 160 புலவர்கள் பாடியுள்ளனர்.
3 பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.
4 புறநானூறு புறம் எனவும் புறப்பாட்டு எனவும் வழங்கப் பெறும்
5 வீரத்திற்கு இலக்கணம் கூறும் நூல் இது.

6 ஆசிரியப்பாவால் ஆனது.

7 14 மன்னர்கள் கவி பாடியுள்ளனர்.

8 மன்னர்-புலவர் உறவு, மன்னர்-மக்கள் உறவு, புலவர்-புலவர் உறவு யாவும் இந்நூலில் காணக் கிடைக்கின்றன.

9 பெண்பாற் புலவர்களும் கவித்திறம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்

10 கடையெழு வள்ளல்கள் கொடைமடம் உடையவர்கள்

11 அதியன் ஒளவை, பாரி கபிலர், பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன் இவர்களின் நாட்டின் திறம் அறியப்படுகிறது.

12 பழந்தமிழரின் பண்பாட்டினை அறியமுடிகிறது.

13 வரலாற்று உண்மைகளைக் கூறும் வண்டமிழ்ப் பெட்டகமாக இது விளங்குகிறது.

14 போப் ஐயருக்குத் தமிழின் மீது அன்பு தோன்றக் காரணமான நூல்களில் இதுவும் ஒன்று.

15 புறநானூறு தமிழர்க்குக் கிடைத்த பெருங்கருவூலம் என்றால் மிகையாகாது.

உலக வாழ்வில் எல்லோரும் ஒன்றே என்கிற நினைவு மலர்ந்தால், எல்லோரும் உறவினர் என்ற உணர்வு பிறந்தால் வாழ்க்கை இனிமை நிறைந்ததாய் அமையும் என்பதை.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே (புறம் 192)

பொன்முடியார் போன்ற புலவர்கள் தமிழ் மகனின் வீரம் குறித்தும் கடமை குறித்தும் தெளிவுப்படுத்தியுள்ளனர். மறக்குலப் பெண்ணின் இயல்பு குறித்தும் புலவர்கள் பாடியுள்ளனர். உலக மக்களுக்குரிய கடமைகளாகப் பொன்முடியார் கூறும் பாடல்:

" ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம் 312)

செல்வத்தைப் பகிர்ந்து கொடுத்து இன்பம் பெறவேண்டும். அதுவே அதனால் பெறக்கூடிய பயனாகும் என்பதை.

" செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே"

எனவே புறநானூறு நிலை பெற்ற வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டும் வண்ணக் களஞ்சியமாகும். புறநானூறு தமிழரின் பண்பாட்டுக் கருவூலம். வரலாற்றுப் பெட்டகம். வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் நல்நூல்.

## பத்துப்பாட்டு

சங்க இலக்கியத்தில் நீண்ட நெடும் பாடல்களா அமைந்த பாடல்களின் தொகுப்பு பத்துப்பாட்டு ஆகும்.

1. 100 அடிகளுக்கு மேலுள்ள ஆசிரியப்பாவால் அமைந்த பாடல்கள்பத்தினைப் பத்துப்பாட்டு எனத் தொகுத்தனர்.
2. சிலவற்றில் வஞ்சியடிகள் விரவி வருதலுமுண்டு
3. பழந்தமிழரின் பண்பு, விருந்தோம்பல், அரசர்தம் கொடைச் சிறப்பு, வீரம் முதலியவற்றைக் கூறுவது பத்துப்பாட்டாகும்.
4. ஆற்றுப்படை நூல்கள் -5

அகப்பொருள் பற்றியன -4

புறப்பொருள் பற்றியன -1

" முருகு பொருநாறு பாணிரெண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோல நெடுநெல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து "

பத்துப்பாட்டு முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். பத்துப்பாட்டில் 1, 2, 3, 4, 10, ஆகிய ஐந்தும் ஆற்றுப்படை நூல்கள்

**ஆற்றுப்படை நூல்கள் :**

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்" (தொல் 1037: 3-6)

என்கிற பாடல் ஆற்றுப்படையின் இலக்கணத்தை எடுத்துக் காட்டுகிறது.

பரிசு பெற்ற ஒருவன் பரிசு பெறாத ஒருவனிடம் செல்லும் வழியைக் கூறிப் பரிசில் பெற அனுப்புவது அதாவது ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படை எனப்படும்.

1. **திருமுருகாற்றுப்படை**

திருமுருகாற்றுப்படையில் முருகப் பெருமானிடம் அருள் பெற்ற ஒருவன் முருகப் பெருமானின் அருளைப் பெற மற்றொருவனை ஆற்றுப்படுத்தி அனுப்புவதாக அமைந்துள்ளது.

1. இந்நூலை இயற்றியவர் நக்கீரர்
2. 317 அடிகளைக் கொண்டது
3. " புலவராற்றுப்படை" எனவும் வழங்கப் பெறும்.
4. இந்நூல் ஆறு பகுதிகளைக் கொண்டது.

1. முருகனின் உருவத்தின் சிறப்பு
2. மாலைச் சிறப்பு (முருகனின்)
3. சூரர மகளிர் செயல்கள்
4. சூரபதுமன் அழிதல்
5. மதுரையின் மாண்பு
6. திருப்பரங்குன்றத்தின் இயற்கை வளம்.

ஆகிய பகுதிகளை உடையது.

**இரண்டாம் பகுதி :**

1. முருகனின் யானை இயல்பு
2. ஆறுமுகனின் அருள்
3. பன்னிரு கரங்கள் புரிவன
4. சீரலை வாயில் எழுந்தருளியமை (திருச்செந்தூர்)

**மூன்றாம் பகுதி :**

1. முனிவர் ஒழுக்கம் மகளிர் அழகு திருவாவினன் (பழநி) குடி தோற்றம்

**நான்காம் பகுதி :**

1. வழிபடும் அந்தணர் இயல்பும் வழிபடும் முறையும்
2. திருவேரக இருக்கை (சுவாமி மலை)

**ஐந்தாம் பகுதி :**

1. குன்றக் குரவை நிகழ்ச்சி
2. மகளிர் இயல்பு
3. முருகனின் அருட்செயல்கள்
4. குன்று தோராடல் (திருத்தணி)

**ஆறாம் பகுதி :**

1. முருகன் எழுந்தருளிய இடம்
2. முருகனை வழிபடும் முறைகள்
3. முருகன் அருள்பெறும் வழிகள்
4. பழமுதிர்ச் சோலையின் சிறப்பும் மலையழகும்

**2. பொருநராற்றுப்படை**

1. ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார்
2. 248 அடிகள்
3. பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான்
4. காவிரியின் சிறப்பு பாடினி பற்றிய வருணனை
5. ஒருவரைப் போல் வேடமிட்டுப் பாடுநரைப் பொருநர் என்பர். ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பொருநர் பலவகையினர்.
6. பொருநனுடன் வரும் பாடினியின் அழகு தலைமுடி முதல் பாதம் வரை வருணிக்கப்படுகின்றது.
7. சோழன் கரிகாலன் நரை முடித்து முறை செய்த வரலாறு கூறப்படுகிறது.

பொருநனின் ஆடல், பாடல், இசை மூன்றும் ஒருங்கிணைந்து மகிழ்ச்சி தருவதை "மூவேந்தரும் ஒரே அரசவையில் கூடியிருந்து தோற்றம் போல" என உவமிக்கிறார்.

முரசு முரங்குதானை மூவருங்கூடி
அரசவை இருந்த தோற்றம்போல

தமிழக ஒருமைப்பாட்டில் அவருக்கிருந்த இயல்பான ஆர்வத்தைக் காட்டுகிறது. கரிகாலன் பொருநனுக்குப் பட்டுடை வழங்கி, காலின ஏழடி நடந்து சென்று வழியனுப்பும் வழக்கம் உடையவனாக இருந்தான் என்பதை,

" பால்புரை புரவி நான்குடன் பூட்டிக்
காலின் ஏழடி பின்சென்று"

வழியனுப்புகிறான் என்கிறது பொருநராற்றுப்படை

**3. சிறுபாணாற்றுப்படை**

சிறிய யாழைக் கொண்டு பாடும் பாணனை வழிபடுத்திய பாடல்.

1. 269 அடிகளைக் கொண்டது.
2. ஓய்மா நாட்டு நல்லியக்கோடனை நல்லூர் நத்தத்தனார் பாடியது.
3. குறைந்த அடிகளை உடைய பாணாற்றுப்படை
4. சிறிய யாழை வைத்துப்பாடினர்
5. ஐவகை நில மக்களின் வாழ்வியல் போன்ற செய்திகளையும் இந்நூலில் அறியலாம்
6. மூவேந்தரின் தலைநகரச் சிறப்பு பேசப்படுகிறது.
"இன்குரல் சீறியாழ் இடவையின் தழீஇ" என்கிற வரிகள் சிறிய யாழை உடைய பாணன்.

1. மழை மேகம் போல் எண்ணெய் தடவிக் கனிந்து இருண்ட கூந்தல்
2. கூந்தலைப் போன்று கலாபம் விரிக்கும் மயிலினிடத்தே சென்று ஒளிக்கும் சாயல்
3. ஓடியிளைத்த நாயினது நாப்போன்ற அழகு தோன்றிய அடி
4. அடியுடன் நிலந்தோயும் யானையது துதிக்கைப் போன்ற தொடை

என்பது போன்ற வருணனைகள் இந்நூலில் நிறைந்திருக்கக் காணலாம்.

**4. பெரும்பாணாற்றுப்படை**

பேரியாழை வாசிக்கும் பாணனை வழிபடுத்திய பாடல்

1. 500 அடிகளைக் கொண்டது.
2. கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது.
3. இதனைப் "பாணாறு" என்றும் கூறலாம்

4. இதனை "சமுதாயப் பாட்டு" என்றும் கூறலாம்
5. ஏனெனில் மன்னனுக்குச் சிறிதளவு இடமும் மக்களுக்குப் பேரிடமும் அளிக்கப்படுகிறது.
6. பேரியாழ் வைத்துப் பாடினர்.
7. பழுமரம் தேடும் பறவை போல, கலைமலி புலவர்களும் மக்களும் அவன் நாட்டை நோக்கி அச்சமின்றிச் செல்லலாம்.
8. விலங்கினங்கள் கூட மக்களுக்குத் தீங்கு செய்ய அஞ்சும்
9. இளந்திரையனுடைய வீரமும், புகழும், கொடைச் சிறப்பும் ஆட்சிச் சிறப்பும் விருந்தோம்பல் பண்பில் தமிழர்கள் மேம்பட்டு நின்ற விதமும் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன.
10. அந்தணர் வீட்டில் கிடைக்கும் உணவைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை

"கருடச் சம்பா அரிசிச் சோறு
நறுமணமுள்ள மோர்
மாதுளங்காய்ப் பொறியல்
மாவடு ஊறுகாய் யாவும் அங்கே கிடைக்குமாம்."

11. மோர் விற்கும் ஆய்ச்சியர் நெய்க்கு விலையாகப் பொன்னைப் பெறாமல், எருமைக் கன்றுகளை வாங்கவே விரும்புவர் என்பதை

" நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்"

என்கிற பெரும்பாணாற்றுப்படை வரிகள் விளக்கிக் காட்டுகின்றன. இவ்வாற்றுப்படைக்கு ரா. ராகவையங்கார் ஆராய்ச்சி உரை எழுதியுள்ளார்.

**5. கூத்தாற்றுப்படை (அல்லது) மலைபடு கடாஅம்**

மலையில் பாடுகின்ற ஓசை என்பது பொருள்

1. 583 அடிகள்
2. பாடியவர் பெருங் கௌசிகனார்
3. பாட்டுடைத் தலைவர் நன்னன்சேய் நன்னன்
4. ஆற்றுப்படையில் இதுவே நெடும்பாட்டு
5. மலைபடு கடாஅம் என்ற பெயரும் உண்டு
6. மலையிடத்து உண்டாகும் மதநீர் ஓசை என்ற பொருளில் "மலைபடு கடாஅம்" என்ற தலைப்பினைப் பெற்றுள்ளது.
7. "மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப" என்கிற வரிமலையை யானைக்கு ஒப்புமை காட்டும் தன்மையை விளக்குகின்றது.
8. தமிழர்தம் நாகரிகத்தையும் கலை உணர்கைவும் இந்நூல் உணர்த்துகிறது.

மலைபடு கடாஅம் உணர்த்தும் வேறு பல செய்திகள்

1. கூத்தர் பலவகை வாத்தியங்களுடன் செல்லுதல்
2. வழியின் வளம், வழியின் அருமைகள்
3. விருந்து
4. சிவனைத் தொழுதல்
5. வழிபற்றிய எச்சரிக்கைகள்
6. மலையில் தோன்றும் பல்வேறு ஓசைகள்
7. புதியவர்களுக்காகப் புல்லை முடிந்து கொண்டே போகும் முறை
8. மலைவாழ் மக்கள் உபசரித்தல்

ஆகியவை கூறப்பட்டுள்ளன. இது பொருள் நிலையில் பரிசு பெற்றுவரும் கூத்தன், பெறச் செல்லும் கூத்தனை ஆற்றுப்படுத்தியுள்ளதால் கூத்தராற்றுப்படை எனவும் வழங்கப்பெறும்.

## பத்துப்பாட்டில் காணும் அக இலக்கியங்கள் :

### 1. முல்லைப்பாட்டு

பத்துப்பாடலில் குறைந்த அடிகளையுடையது முல்லைப்பாட்டு

1. 103 அடிகளை உடையது
2. முல்லை ஒழுக்கத்தைப் பற்றிய பாட்டு
3. ஆசிரியர் நப்பூதனார்
4. நெஞ்சாற்றுப்படை என்பாரும் உளர்
5. சிறந்த அக இலக்கியம் ஆகும்.

**காரணம் :**

வினை மேற்சென்று தலைவன் திரும்பும் வரை கற்பு நெறியினின்றும் வழுவாது இல்லத்தில் தலைவி ஆற்றியிருத்தலால் இது முல்லைப்பாட்டு ஆயிற்று. கற்புக்கு - முல்லை அடையாளமாகக் கூறப் பெறும்.

**செய்திகள் :**

1. கார்ப் பருவத்தின் தொடக்கத்தில் மீண்டும் வருவேன் எனக் கூறித் தலைவன் செல்வது.
2. தலைவன் தன் கடமைகளை ஆற்றுவது.
3. தலைவி தனிமைத் துயரில் வாடுவது.

ஆகியவை நன்கு சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன.

போர்களத்தில் பொறுமையுடன் கடமையாற்றும் தலைவன் முதல்நாள் போர் முடிந்த இரவில் போர்க்களத்தில் காயமடைந்தவர்களையும், போர் பற்றிய நிகழ்ச்சிகளையும், நினைத்துப் பார்க்கிறான்.

1. களிறுகளை வெட்டி வீழ்த்தி மரணம் அடைந்த வீரர்கள்
2. பகைவர் அம்பினால் தைத்துப் புலம்பும் குதிரைகள்
3. இரவுப் பொழுதில் நாழிகை வட்டில் காட்டும் நேரத்தை அறிந்து கூறுதல்
4. அரசர்தம் பள்ளியறை மிலேச்சராலும், ஊமையராலும் காவல் காக்கப்பட்டவை
5. பாகர்கள் யானையுடன் பேசிப்பழகும் பான்மை

ஆகிய செய்திகள் எடுத்துரைக்கப்படும் விதத்தினைக் காணலாம்.

" செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் கால
கோடல் குவிமுகை அங்கை அவிழ
தோடு ஆர்தோன்றி குருதி பூப்ப"

என்று முல்லைப்பாட்டில் இயற்கை வருணனை அமைந்துள்ளது.

### குறிஞ்சிப்பாட்டு

1. குறிஞ்சி ஒழுக்கம் பற்றிய முத்துப்பாட்டு குறிஞ்சிப் பாட்டு
2. 261 அடிகளை உடையது.
3. ஆசிரியர் கபிலர் குறிஞ்சி பாடுவதில் வல்லவர்.
4. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்குக் கபிலர் பாடிய பாட்டு இது
5. களவொழுக்கம் பற்றியது
6. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் துறையில் அமைந்தது.
7. தமிழ்நாட்டு 99 வகை மலர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.
8. இன்பத்தமிழ் இலக்கியம்
9. தலைவனது அழகு
10. தலைவி தலைவன் காதலுறவு
11. மாலைக்கால வருணனை
12. இதனைக் காப்பியப்பாட்டு எனலாம்.

13. உளவியல் பாட்டு எனலாம்.
14. நச்சினார்க்கினியார் - பெருங்குறிஞ்சி

என்று கூறுவார்.

முத்து, மணி, பொன் முதலியவற்றால் உருவாக்கப்பட்ட செயல்கலன்கள் உடைந்துவிட்டால் அதனை முன்பு போல் சரிசெய்யலாம். ஆனால் கற்பு நிலை நீங்குமானால் அதனைச் சீர்படுத்த மாமுனிவர்க்கும் கூட எளிய செயல் அன்று என்பதைத் தோழி செவிலிக்குக் கூறுவதாகக் குறிஞ்சிப் பாட்டில் அமைந்துள்ளது.

**பட்டினப்பாலை**

பட்டினம் என்பது சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப் பூம்பட்டினத்தையும், பாலை என்பது பிரிதலும் பரிதல் நிமித்தமுமாகப் பாடப் பெறுவது.

1. கடியலூர் உருத்திரங் கண்ணனார் - ஆசிரியர்
2. பாட்டுடைத் தலைவன் கரிகாலன்
3. 301 அடிகளை உடையது. வஞ்சிப்பா அடிகள் 163, ஆசிரியப்பா அடிகள் 138
4. இது நெஞ்சாற்றுப்படை எனக் கூறப்படுகிறது.
5. காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினைக் காணமுடிகிறது.
6. வாணிகம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.
7. உள்நாட்டு வெளிநாட்டு வாணிகம் சிறப்புற நடந்த விதங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

" நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும் "

என்கிற பட்டினப்பாலைச் செய்யுள் அன்றைய வாணிக நடைமுறையையும் வந்து குவிந்திருந்த பொருட்களின் தன்மையும் எடுத்துக்காட்டுகிறது.

8. தமிழர் தம் வாழ்வு இங்கு கூறப்படுகிறது.
9. நகர்புற நாகரிகம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சோழ நாட்டின் தலைநகரான காவிரிப் பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம் என்ற பிரிவுகளை உடையது.
10. காவிரியின் சிறப்பு, அரசனது ஆட்சி புகழ் போன்றவை விளக்கப்படுகின்றன.
11. சுங்கச்சாவடி இருந்தது,

" தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதும் மிகைகொளாது கொடுப்பதும் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும் "

எனக் கொள்கையோடும் குறிக்கோளோடும் தமிழர்கள் வாணிபம் செய்து வாழ்ந்தனர் என்பதை பட்டினப்பாலையின் அடிகள் உணர்த்துகின்றன.

" முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய ",

என்ற அடிகள் பட்டினம் கிடைத்தாலுங்கூட தலைவியை விட்டுப் பிரியமாட்டேன் என்கிற தலைவனின் ஆழமான அன்பினை எடுத்துக்காட்டுகின்றன.

**நெடுநல்வாடை**

நீண்ட நல்ல வாடை என்பது பொருள்

1. 188 அடிகளைக் கொண்டது
2. சங்ககால நக்கீரார் பாடியது
3. பாண்டிய நெடுஞ்செழியனைப் பற்றியது
4. பத்துப்பாட்டில் தலைசிறந்த பாட்டு

5. "வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகாம்" என்கிற வரியானது புற இலக்கியம் என்பதை உணர்த்தி காட்டினாலும் வ. சுப. மாணிக்கம் போன்ற அறிஞர்கள் இதனை " அக இலக்கியம் " என்றே கூறுகின்றனர்.

**பெயர்க்காரணம் :**

நெடுமை + நன்மை + வாடை. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு நெடுவாடையாக இருக்கிறது. ஆனால் அதே சமயம் பாசறையில் தங்கிக் கடமையாற்றும் தலைவனுக்கு நல்ல வாடையாக, நன்மை தரும் வாடையாக இருக்கிறது. எனவே இது நெடுநல் வாடை ஆயிற்று.

" மடவரல் மகளிர் பிடகை பெய்த
செவ்வியரும்பின் பைங்காற் பித்திகத்து
அவ்விதழ் விழ்பதங்கமழப் பொழுதறிந்து"

என்று கூறுவதிலிருந்து மாலை நேரம் வந்தது என அறிவது. அவர்களுக்கு அன்று மலர்களே கடிகாரமாக விளங்கின என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

1. கூதிர்காலக் குளிரின் கொடுமை
2. அரண்மனை அமைப்பு
3. அரசி துயிலும் கட்டிலின் அழகு, புனையா ஓவியம் போல அரசி இருத்தல்
4. கோப்பெருந் தேவியர் கற்பு
5. அஃறிணை உயிர்களின் நிலை
6. போர்காலத்தில் நள்ளிரவில் பாசறை சென்று புண்பட்ட வீரர்களுக்கு மன்னன் அறுதல் கூறுவது.
7. மலர்கொண்டு பொழுது அறிதல், அரசனுக்கு வெற்றி கிடைக்கட்டும் எனக் கொற்றவை வழிபாடு செய்தல்.
8. மாலைக் காலத்தை மகளிர் கொண்டாடுதல்
9. பள்ளியறைக் காட்சி, யவனர் செய்த பாவை விளக்கும் உடல் வலிமை மிக்க மிலேச்சர் நகரினைக் காவல் காப்பதும் கூறப்படுகின்றன
10. கூதிர்காலத்தில் பயன்படாப் பொருள்கள் போன்ற செய்திகள் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன.

**மதுரைக் காஞ்சி**

பெருகு வளமதுரைக் காஞ்சி எனச் சிறப்பிக்கப் பெற்ற நூல் இது.

1. இது ஒரு புற இலக்கியம் எனலாம்.
2. பத்துப்பாட்டில் மிக நீண்ட அடிகளைக் கொண்டது இது.
3. 782 அடிகளை உடையது.
4. மாங்குடி மருதனார் இதன் ஆசிரியர்
5. பாட்டுடைத் தலைவன் - பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
6. காஞ்சியாகிய நிலையாமையை உணர்த்துவது.

**வேறு செய்திகள் :**

1. பாண்டியன் ஆட்சிச் சிறப்பு
2. வெற்றிச் சிறப்பு
3. கொடைச் சிறப்பு
4. மதுரை நகரச் சிறப்பு
5. மக்களின் இயல்புகள்
6. அரசனின் அறங்கூறு அவையம் அமைத்தில் வரும் பண்பு
7. அங்காடிகளின் விவரங்கள்
8. விடியலில் வேதம் ஓதும் அந்தணர் இயல்பு
9. செங்கோல் ஆட்சியும் நாட்டில் கோள்கள் பிறழாத நிலையும்
10. வீடு பேற்றினை அடைவது.

தெருவின் அழகினைக் கூறும் போது " ஆறகிடந்தன்ன அகன் நெடுந் தெரு" எனக் கூறப்படுகிறது. நிலையாமையைக் கூறும் போது

" திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை யுலகமாண்டு கழிந்தோரே"

என்று எடுத்துச் சொல்லி, நிலை பெறுவனவற்றைச் செய்யுமாறு கூறுகிறார் புலவர்.

" முடி சார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவார் " என்ற பழமொழிப்படி, இந்நூலில் நிலையாமை நன்கு உணர்த்தப்படுகிறது.

மதுரைக் காஞ்சிப் பாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மதுரையை நம் கண்முன் நிறுத்துகிறார். " பாட்டில் பாதி மதுரை நகர் பற்றிப் பேசுவதால் மாநகர் பாட்டு என்றும் கூறலாம் என்கிறார் ச. வே. சுப்பிரமணியன்.

**பயிற்சி வினாக்கள் :**

1. தமிழ் இலக்கியத்தின் பெருமையையும், தொன்மையும் விளக்கு
2. தமிழ் இலக்கிய வடிவங்கள் குறித்து ஒரு குறிப்பு வரைக
3. தமிழ் இலக்கிய வகைகளை விளக்கு
4. தமிழ் இலக்கிய வரலாற்றுக் கல்வி தரும் சிந்தனைகள் யாவை ?
5. தொல்காப்பியத்தின் அமைப்பையும், சிறப்பையும் விளக்கு
6. தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலமே தலைசிறந்த காலம் - இக்கொள்கையை ஆராய்க
7. பாண்டியர்கள் மதுரையில் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தார்கள் என்பதை விளக்கு
8. சங்க இலக்கியம் பற்றி ஒரு கட்டுரை எழுதுக
9. எட்டுத் தொகை நூல்கள் பற்றி விவரி.
10. பத்துப்பாட்டில் ஆற்றுப்படைகள் பற்றி ஒரு கட்டுரை வரைக
11. பத்துப்பாட்டில் காணும் புறநூல்கள் பற்றி விளக்கு
12. பத்துப்பாட்டிலுள்ள அகநூல்கள் பற்றிக் குறிப்பு வரைக
13. எட்டுத் தொகை நூல்களில் அகநூல்கள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

## அலகு 2

### அற இலக்கியம்

வரலாற்றில் இருண்ட காலம் என்றழைக்கப்படுகின்ற களப்பிரர்களின் ஆட்சிக்காலத்தில் மக்களிடம் அமைதியிழந்த நிலை காணப்பட்டது. கொலையும் வெறித்தனமும் நாட்டில் நிலவியதால் மக்களுக்கு நீதிகளையும் நெறிமுறைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் புலவர்களுக்கு ஏற்பட்டது. தமிழின் அகம், புறம் என்ற வாழ்க்கைக் கொள்கை அடிப்படைகள் அறம் நோக்கிச் சென்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நிலையும் ஏற்பட்டது. அதனால் அற இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவற்றைப் பதினெண் கீழ்கணக்கு நூல்கள் என்று குறிப்பிட்டார்கள்.

1 புறம் பற்றியது.
2 அகம் பற்றியது.
11 அறம் பற்றியது.

பதினென் கீழ்கணக்கு நூற்கள் பற்றி,

நாலடி நான்மணிநால் நாற்பது ஐந்திணைமுப்
பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலை யவாம் கீழ்க்கணக்கு

என்கிற பாடல் எடுத்துக்காட்டுகிறது.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் மனித குலம்

பெற்று உள்ளத்தாலும் உடம்பாலும் சிறந்த வாழ்க்கை வாழ்ந்திட வழி வகுப்பது இந்நீதி நூல்களின் நோக்கமாகும்.

நீதி நூல்களின் காலம் சங்கம் மருவிய காலம். தமிழர் சால்பும் உணர்வொழுக்கங்களின் உயர்வும் எடுத்தோதும் ஒளி விளக்கங்களாக நீதி நூல்கள் மிளிர்கின்றன.

**1. திருக்குறள்**

தித்திக்கும் தெள்ளமுதாய், எத்திக்கும் தமிழின் புகழ் பரப்பும் ஏற்றமிகு நூலாகப் பிற நாட்டினரும் போற்றும் பேரறிவுக் கருவூலமாகத் திகழ்கிறது திருக்குறள். தமிழிலக்கியத்தில் மிகக் குறுகிய அடிகளால் ஆன நூல் இதுவே. சமணர், பௌத்தர், சைவர், வைணவர் அனைவரும் எங்கள் நூல் எனப்போற்றும் பெருமைக்குரிய பொதுமையான உலகப் பொதுமறை என்று சிறப்பிக்கப்படுகிற நூல் திருக்குறள். ஒரு நாட்டிற்கோ, ஒரு இனத்திற்கோ உரியது என்கிற குறுகிய சிந்தனை வட்டத்திற்குள் அமையாது, எந்நாட்டவர்க்கும், எக்காலத்திற்கும் எல்லோர்க்கும் பயன்படுகின்ற வாழ்வியல் சிந்தனைகளை வழங்கி நிற்கும் வண்ணக் களஞ்சியமாகத் திகழ்கிறது. "எப்பாவலரும் இயையபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி திருக்குறள்". திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். " தெய்வப்புலவர் திருவள்ளுவன் " என்கிறார் இளம்பூரணர்.

**திருக்குறளின் அமைப்பும் பகுப்பும்**

கற்கண்டு வெல்லத் தமிழில் கனிச்சுவை கலந்து தருவது திருக்குறள்.

133 அதிகாரங்கள், 1330 குறட்பாக்கள்

அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள்

பொருட்பாலில் 70 அதிகாரங்கள்

இன்பத்துப்பாலில் 25 அதிகாரங்களைக் கொண்டு விளங்குகிறது திருக்குறள்.

பாயிரம், இல்லறம், துறவறம், ஊழியியல், அரசியல், அங்கவியல், ஒழியியல், களவு, கற்பு, ஆக 9 இயல்களைக் கொண்டு விளங்குகிறது.

**திருக்குறளின் பெருமைகள்**

ஔவையார் பாராட்டு :

" அணுவைத் துளைத்து ஏழ்கடலை புகட்டிக்
குறுகத் தறித்த குறள் "

நத்தத்தனாரின் பாராட்டு

" ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின் - போய் ஒருத்தர்
வாய்க்கேட்க நூல் உளவோ, மன்னு தமிழ்ப் புலவர்
ஆய்க்கேட்க வீற்று இருக்கலாம் "

**மதுரைத் தமிழ்நாகனாரின் பாராட்டு:**

"எல்லாப் பொருளும் இதன் பாலுள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்"

1. இந்நூல் சிறப்பினை எடுத்தோத "திருவள்ளுவமாலை" எனும் தனி நூலே எழுந்தது போல வேறு எந்நூலுக்கும் ஏற்படவில்லை.
2. பத்துக்கும் மேற்பட்டோர் உரை எழுதியுள்ளனர். பரிமேலழகர் உரை சிறந்ததாகக் கருதப்படுகிறது. பிற்காலத்தில் எழுந்த உரைகள் ஐம்பதுக்கு மேல் இருக்கும்.
3. பின்வந்த இலக்கியங்கள் அனைத்திற்கும் அறிவு ஊற்றாய் விளங்குகிறது இது.
4. 80க்கும் மேற்பட்ட மொழிகளில் இது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
5. "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவன் செய் நூலாமோ?"

**வள்ளுவரின் புலமை**

திருக்குறளைப் படைக்கும் முறையிலும் கூடப் புதுமையைப் புகுத்தியுள்ளார் வள்ளுவர். தமிழ் நெடுங்கணக்கின் ஆரம்ப எழுத்தான அகரத்தில் தொடங்கி இறுதி எழுத்தான னகரத்தில் முடிவது சிறப்பு.

1 அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
2. ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்

அறநூலாகவும் அறிவிலக்கியமாகவும் உணர்விலக்கியமாகவும் குறிக்கோள் இலக்கியமாகவும் திகழ்கின்றது. திருக்குறள் எனலாம். திருக்குறள் என்னும் பேருற்று பிற்கால இலக்கியங்கள் என்னும் கால்வாய்கள் தோறும் சென்று பரந்து செந்தமிழ் இலக்கிய நிலத்தைச் சிறப்பிக்கிறது எனலாம்.

**2. நாலடியார்**

நால் அடி என்பது நான்கு அடிகளையுடையது என்று பொருள். ஆர் சிறப்பு விகுதி.

ஆசிரியர் - சமண முனிவர்கள் 400 பேர் எழுதிய பாடல்கள்

பாடல்கள் - 400

திருக்குறளைப் போலவே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களையும் நாற்பது அதிகாரங்களையும் அதிகாரத்திற்குப் பத்துப்பாடல்கள் வீதம் கொண்டு விளங்குகிறது.

" ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி "

என்கிற பழமொழி நாலடியார் திருக்குறள் இரண்டின் பெருமையை எடுத்துரைக்கிறது. வச்சிரநந்தி போன்ற சங்கத்துப் புலவர்கள் பாடிய தனிப்பாடல்களின் திரட்டே இந்நூல் என்பர் சிலர்.

இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பதுமனார். ஜி. யூ. போப்பையர் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். யாரோடு நட்புக் கொள்ளலாம்? யாரோடு நட்புக்கொள்ளக் கூடாது என்பதை இந்நூல்,

" யானை அனையவர் நட்பு ஓரிஇ, நாய் அனையார்
கேண்மை கெழீஇயக் கொடல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதாக வால்குழைக்கும் நாய் "

என்கிற பாடல் வழி விளக்கிக் காட்டுகிறது.

" நிலையாமை முதலியவற்றை வற்புறுத்தும் பாட்டுகளும் சொல்லோவியங்களாய் இலக்கியச் சுவையோடு அமைந்துள்ள தன்மை இந்நூலின் சிறப்பியல்பாகும்" என்கிறார் டாக்டர் மு. வ. (தமிழ் இலக்கிய வரலாறு ப. 79) நானூறு பாடல்களும் நயமிக்க பாடல்கள்.

**3. நான்மணிக்கடிகை**

ஆசிரியர் - விளம்பி நாகனார்.

இந்நூலில் மிகைப்பாடல்கள் மூன்று உட்பட 104 வெண்பாக்கள் உள்ளன.

நான்கு மணிகளால் கட்டப்பட்டுள்ள மாலையை அணிந்தால் எத்துணை அழகு பெறுமோ அதுபோலவே இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைக் கைக் கொண்டால் வாழ்க்கை அழகு பெறும்.

மணிமணியான கருத்துக்களைத் தந்து நம் பண்பை மாண்புறச் செய்கிறது. நான்மணிக்கடிகை.

அன்னை, தந்தை, குரு, கடவுள், இந்நால்வருள் தாயை மட்டும் ஏன் முதலில் வைத்து கூறுகின்றனர் என்பதற்கு இந்நூல் விளக்கம் அளிக்கிறது.

" கண்ணில் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை மக்களின்
ஒண்மைய வாய்ச்சான்ற பொருளில்லை ஈன்றாளோடு
எண்ணக் கடவுளும் இல் "

ஈன்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய தாயைப் போல வணங்கத்தக்க வேறு தெய்வம் ஏதும் இல்லை.

**4. இன்னா நாற்பது.**

1. ஆசிரியர்-கபிலர். இவர் சங்ககாலக் கபிலர் அல்லர் எனக் கூறுவர். கபிலர் என்ற பெயரில் ஐவர் இருந்ததாகவும் இவர் இரண்டாமவர் என்றும் கூறுவர்.

2. பாடல்கள் - 40 + 1 கடவுள் வாழ்த்துப் பாடல்.
3. இன்னின்ன துன்பம் பயக்கும் எனப்பாடல் ஒன்றுக்கு நான்கு இன்னல் தருகின்ற கருத்துக்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.
4. கள்ளுண்ணாமை, புலாலுண்ணாமை போன்ற செய்திகள் கூறப்படுகின்றன.

" கொடுங்கோல் மறமன்னர் கீழ் வாழ்தல் இன்னா
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா - இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு "

1. அறநெறி பிறழ்ந்து ஆட்சி செய்யும் மன்னரின் நாட்டில் வாழ்வது துன்பம் தரும்.
2. ஆழமான நீண்ட நீர்ப்பரப்பைத் தெப்பமில்லாமல் நீந்திச் சென்றால் துன்பம் தரும்.
3. வன்சொல் கூறுவாரோடு நட்புக் கொண்டிருந்தால் துன்பத்தைத் தரும்.
4. உலகவாழ்வில் வறுமையோடு வாழ்வதும் துன்பத்தையே கொடுக்கும்.

5. இனியவை நாற்பது.

1. ஆசிரியர் - பூதச் சேத்தனார்
2. பாடல்கள் - 40 + 1. 40 பாடல்களில் 36 பாடல்கள் மும்மூன்று இனிய செய்திகளைத் தருகின்றன. நான்கு பாடல் நான்கு நான்கு கருத்துக்களைக் கூறுகின்றன.

1. இன்னின்ன செயல்களைச் செய்தால் வாழ்வில் இனிமை பிறக்கும் எனக் கூறும் நூல்

" ஊனினைத் தின்று ஊனைப் பெருக்காமை "
" கடன்படா வாழ்வு "
" வருவாய்க்கேற்ற செலவு "

போன்றவை இனிதான பண்புகள் என்பது இந்நூலில் நன்குணர்த்தப் பெற்றுள்ளன.

6. திரிகடுகம்

ஆசிரியர் - நல்லாதனார். இவர் திருநெல்வேலி மாவட்டம் திருத்து என்ற ஊரினைச் சேர்ந்தவர் என்கிறார் ச. வே. சுப்பிரமணியன்.

பாடல்கள் - 100 + கடவுள் வாழ்த்து.

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் திரித்துக் கடுகுபோல் ஆக்கி அமைத்த திரிகடுகமாகிய மருந்துப் பொருள்கள் உடல் நோயை நீக்கி சுகம் தருவது போன்று அகத்தில் தோன்றும் அறியாமை நோயை நீக்கி மனத்தைச் செம்மைப்படுத்தும் சிறந்த மூன்று கருத்துக்களைக் கொண்டு திகழ்கிறது இந்நூல்.

" தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் - முன்னிய
பல்பொருள் வெ.்.கும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை "

1. ஒருவன் தன்னை உணராமல் பெருமை கொள்வது.
2. எப்போதும் சினம் கொள்வது.
3. பல பொருளையும் விரும்பும் சிறுமை ஆகிய இம்மூன்றும் செல்வத்தை அழிக்கும் படைகளாகும் என்கிறது திரிகடுகம்.

7. ஆசாரக் கோவை

ஆசிரியர் - பெருவாயில் முள்ளியார். இவர் காலம் கிபி ஐந்தாம் நூற்றாண்டு

பாடல்கள் - 100 ஆசார வித்து எனத் தொடங்கி (1), ஆசாரம் வீடு பெற்றார் (100) என முடியும் 100 வெண்பாக்களை உடையது.

ஆசாரம் என்பது ஒழுக்கம். கோவை என்பது அடுக்கிக் கூறல். ஆசாரக் கோவை ஒழுக்க விதிகள் பலவற்றை அடுக்கிக் கூறும் நூலாகும்.

நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல்லோடு இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு ஒப்புரவாற்ற அறிதல், அறிவுடைமை, நல்லினத்தாரோடு நட்டல், இவை எட்டும் சொல்லிய ஆசார வித்துக்கள்.

தந்தையையும் தாயையும் வணங்கி எழுந்து கடமையாற்றப் புறப்படுக என்பது முன்னோர் வகுத்துள்ள நல்வழிகளாகும்.

" வைகறை யாமம் துயில் எழுந்து, தான் செய்யும்
நல்அறமும் ஒன்பொருளும் சிந்தித்து, வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுது எழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை " (4)

**8. பழமொழி**

பரம்பரை பரம்பரையாக வரும் சொற்றொடர் வழக்கு பழமொழி
ஆசிரியர் - முன்னுறை அரையனார்
பாடல்கள் - 400

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியை வைத்து அதனோடு ஒரு கதை அல்லது வரலாற்று நிகழ்ச்சி இவற்றைக் கூறி அறத்தை வற்புறுத்தும் இந்நூல் நீதி நூல்களுள் சிறப்புடைய ஒன்றாகும். பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் மூன்று பெரும் நூலில் இதுவும் ஒன்று என்பர்.

ஆசிரியர் - சமண சமயத்தினராவர் என்பதை கடவுள் வாழ்த்து மூலம் அறியலாம்.
பாரி, கரிகாலன், பேகன், மனுநீதிச் சோழன், சேரன் செங்குட்டுவன் முதலியவர்களின் வரலாற்றுச் செய்திகளையும் இராமன், துரியோதனன் போன்ற காப்பிய மாந்தர்களைப் பற்றிய செய்திகளையும் பழமொழி வாயிலாக அறியமுடிகிறது.

**9. சிறுபஞ்ச மூலம்**

கண்டங்கத்திரி, சிறியவழுதுணை சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி, ஆகிய ஐந்தின் வேர்கள் சிறந்த மருந்தாக உடல் நோயைப் போக்குவது போல இந்நூலில் வரும் கருத்துக்கள் ஐந்தும் மக்கள் மனத்தில் எழும் துயரங்களை மாற்றும் ஆற்றல் பெற்றவை எனலாம்.

ஆசிரியர் - காரியாசன், இவர் சமணர்
பாடல்கள் - 100
ஆசிரியர் வடமொழிப் பயிற்சி உடையவர்
ஞானத்தாலேதான் வீடு பேறும் கிடைக்கும்

" தானத்தாற் போகம், தவத்தால் சுகம்,
ஞானத்தால் வீடாகும் நாட்டு "

வனப்பு என்பதை விளக்குகையில்

" மயிர் வனப்பும் கண்கவரும் மார்பபின் வனப்பும்
உயிர் வனப்பும் காதின் வனப்பும் - செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு "

என்கிறார் சிறுபஞ்ச மூலத்தின் ஆசிரியர்.

**10. முதுமொழிக் காஞ்சி**

முதுமொழி என்பது முதுரை, அறிவுடைச் சொல் என்ற பொருளில் அமையும். காஞ்சி என்பது மகளிர் இடையில் அணியும் பலமணிகள் கோர்த்த ஆபரணம். அது போன்று பல கருத்துக்கள் கோர்த்த அறிவுச் சொல் என்பது பொருள்.

ஆசிரியர் - கூடலூர் கிழார். இவர் 5ம் நூற்றாண்டினர்.
பாடல்கள் - 100

காஞ்சி என்பது நிலையாமையைக் கூறுவது. அறம், பொருள், இன்பங்களை அறியக் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும்.

ஒவ்வொரு பத்தும், "ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம்" என்ற தொடர் அமைந்துள்ளது. திட்பமான சிறுசிறு தொடர்களில் நீதிகள் பலவற்றை உணர்த்துவது இந்நூல்.

1. ஒழுக்கமே உயர்ந்தது
2. கொடையே வடவாய்மையே சிறந்தது.

3. அறிவுடையோர் குற்றங்களை நீக்கி ஆராய்ந்து கூறிய முடிவினைக் கொண்ட அறம் பொருள் இன்பங்களைப் பற்றி எடுத்துக் கூறுவது.

" ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
ஒதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை
இளமையில் சிறந்தது மெய்ப்பிணி இன்மை "

11. ஏலாதி

ஏலம் ஆதியாக என்பது பொருள். ஏலம் முதலாக ஆறு மருந்து பொருள்களின் பொடியைச் சூரணம் என்பர்.

ஆசிரியர் - கணிமேதையார், இவர் காலம் கிபி 5ம் நூற்றாண்டு

பாடல்கள் - 80 + கடவுள் வாழ்த்துப்பாடல்

ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆகிய ஆறு மருந்துப் பொருட்கள் உடல் நோயைப் போக்கும் மருந்துக்கள். அது போல இந்நூலில் உள்ள கருத்துக்கள் அறியாமை என்கிற அகவிருள் நோயைப் போக்குகின்ற தன்மை உடையவை.

1. கொல்லாமை வலியுறுத்தப்படுகிறது.
2. மன்னர்க்குரிய மாண்புகள் சித்தரிக்கப்படுகின்றன.

(எ-டு)

" பொல்லாத சொல்லிமறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர் படுக்கும் - நல்லாய்
மணலுள் மூழ்கி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயாற் கெடும் "

பாம்பின் கால் பாம்பறியும் (5) இருதலைக் கொள்ளி எறும்பு (10) குலவிச்சை கல்லாமல் பாகம்படும் (21) போன்ற பழமொழிகள் உள்ளன.

அகம் பற்றியன் 6 நூல்கள்

12. ஐந்திணை ஐம்பது

1. ஐந்திணை ஐம்பது : அகப்பொருள் பற்றியது.
2. திணைக்குப் பத்தாக 50 பாடல்கள் கொண்டு ஐந்திணை ஒழுக்கத்தினை எடுத்துக்காட்டுகிறது.
3. ஆசிரியர் மாறன் பொறையனார்.
4. இலக்கியச் சுவை தோன்ற, அழகு மிளிரும் உவமைகளோடு தலைவி பேசுவது ஆழ்ந்த பொருள் கொண்டு திகழ்கிறது.
5. மிடுக்கான நடையும் பொருள் வளமும் கொண்ட பாடல்களை ஐந்திணை ஐம்பது தன்னகத்தே கொண்டுள்ளது.

" சுணைவாய்ச் சிறுநீரை எய்தா தென்றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமா தான்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர், காதலர்
உள்ளம் படர்ந்த நெறி " (38)

ஐம்பது பாடல்களும் ஐம்பது முத்துக்கள்

13. ஐந்திணை எழுபது

1. ஐந்து நில ஒழுக்கங்களையும் பாடிய 70 வெண்பாக்களையுடையது. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், என்ற முறையில் நிலத்திற்கு 14 பாடல்கள் உள்ளன. 4 பாடல்கள் கிடைக்கவில்லை.
2. ஆசிரியர் - மூவாதியார், 5ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
3. பிரிந்தார்க்கு மாலைப் பொழுது கொல்வது போன்றது எனும் குறள் கருத்து

" புல்லுறரில்லா நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும் " என வருகிறது.

4. மகளிர் இடக்கண் துடித்தல், தும்மல் வருதல், ஆந்தை அலறுதல், நற்கனவு காண்டல் ஆகியவற்றை நன்னிமித்தங்களாகக் கருதினர்.

5. ஐவகைத் திணையின் உரிப்பொருள்களும் இந்நூலில் பேசப்படுகின்றன.

6. தலை மக்களின் அன்பு கனிந்த உணர்ச்சிகள் கலந்து வருகின்றன.

தலைவன் பாலை வழியே செல்கிறான். அவன் செல்லும் பாதையில் பாலை நிலத் தோட்டங்கள் அமைந்துள்ளன. அவை மூங்கிலை வேலியாகக் கொண்டவை. மூங்கில் புதர்களில் வாழ்கின்ற காட்டுப் பூனைகள் தம் குட்டிகளுக்கு இரைத் தேடித் திரிகின்ற காட்சியைக் கண்டான் தலைவன். அக்காட்சி அவனுக்குத் தன் வீட்டு நினைவை ஊட்டிவிடுகிறது. ஆறலைக் கள்வர்கள் திரிந்து கொண்டிருக்கும் காட்டு வழியே செல்லும் தலைவன் வினை முற்றி விரைவில் மீள்வான். அவன் வரும் வரை நான் ஆற்றியிருப்பேன் என்று தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

"முள்ளடை மூங்கில் பிணங்கிய சூழ் படப்பை
புள்ளி வெருகுதன் குட்டிக்கு இரை பார்க்கும்
கள்ளர் வழங்கும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"

என்கிற பாடல் இக்காட்சியினைச் சித்தரித்துக் காட்டுகிறது.

## 14. திணைமொழி ஐம்பது

அகத்திணையை மொழியும் ஐம்பது பாடல்கள் என்பது பொருள்

1. இந்நூலின் ஆசிரியர் கண்ணஞ் சேந்தனார். இவர் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்.

2. 50 பாடல்கள்

3. ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பத்துப் பாக்களாக ஐம்பது வெண்பாக்களைக் கொண்டது.

4. அருவியழகு அழகாகப் புனையப்பட்டுள்ளது.

" பவளமும் முத்தும் பளிங்கும் விரைஇப்
புகழக் கொணர்ந்து புறவடுக்கும் மூன்றில்
தவழ்திரைச் சேர்ப்பன் வருவான் கொல்தோழி
திகழும் திருவமர் மார்பு "

## 15. திணைமாலை நூற்றைம்பது

அகத்திணை பற்றி மாலையாகப் பாடிய நூற்று ஐம்பது பாடல்கள் என்று பொருள்.

1. ஆசிரியர் - கணிமேதாவியார்.

2. பாடல்கள் - 153 குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகியவை ஒவ்வொன்றும் 31 பாடல்கள் கொண்டுள்ளன.

3. இயற்கையழகு இனிது சித்தரிக்கப்பட்டுள்ளது.

தலைவியின் கற்பு நிலையினை,

" ஒருகை இருமருப்பின் மும்மதமால்
பருகுநீர் பைஞ்சுனையில் காணாது - அருகல்
வழி விலங்கி வீழும் வரையத்தம் சென்றார்
அழி விலராக அவர் "

என்னும் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

## 16. கார் நாற்பது

கார்காலம் பற்றிய நாற்பது பாடல்களைக் கொண்ட நூல் இது

1. ஆசிரியர் - கண்ணன் கூத்தனார்

2. பாடல்கள் - 40

3. கிபி 5ம் நூற்றாண்டைச் சார்ந்தவர் மதுரைக் கண்ணன் கூத்தனார்.

4. தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றியிருந்த அருமையினைக் கூறுவது.

ஆற்றியிருத்தல் முல்லைக்குரிய உரிப்பொருள்

" கருங்கதிர் நல்கூரக் கார் செல்லும் எய்த
நெடுங்கால நேர்சினை ஈனக் - கொடுங்குழாய்
இன்னே வருவர் நமரென்று எழில்வானம்
மின்னும் அவர் தூதுஉரைத்து "

17. கைந்நிலை

இதில் தலைவன், தலைவி, தோழி, பாங்கன் ஆகியோரை அமைத்து ஒரு நாடகம் போல் அமைத்துள்ளார் ஆசிரியர், கை என்பது அகத்திணை ஒழுக்கத்தைக் குறிக்கும் சொல்.

1. ஆசிரியர் - புல்லங்காடனார், 5ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்
2. பாடல்கள் - 60
3. ஒவ்வொரு திணைக்கும் பன்னிரெண்டு பாடல்கள் வீதம் ஐந்திணைகளுக்கு அறுபது பாடல்களைக் கொண்டது.
4. தலைவியின் நெஞ்சநிலையானது.

" பொன்னினிர் வேங்கைப் புனல்சூழ் மலைநாடன்
மின்னின் அனைய வேல்ஏற்றி இரவினில்
இன்னே வரும் கண்டாய் தோழி இடையாமத்து
என்னை இமைபொருமாறு " என்று விளக்கப்படுகிறது.

புறப்பொருள் பற்றிய நூல்

புறம் பற்றியது : 1

களவழி நாற்பது

களம் - போர்க்களம், வழி- நிலை. போர்க்களத்தின் நிலையைப் பாடிய நூல்

1. 40 வெண்பாக்களை உடையது. 41 பாடல்கள் உள்ளன என்கிறார் ச. வே. சு
2. பொய்கையார் - இதன் ஆசிரியர்

சோழ மன்னன் செங்கணானுக்கும் சேர மன்னன் கணைக்காலிரும்பொறைக்கும் இடையே கழுமலம் என்ற இடத்தில் நடந்த போரில் சோழ மன்னன் பெற்ற வெற்றிச் சிறப்பைப் பாடியதே இந்நூலாகும். பொய்கையார் என்ற புலவர் சோழன் சிறையிலிருந்த சேரமான் கணைக்காலிரும்பொறையை விடுவிக்க பாடிய நூல் என்பர். காவிரி நாடன் சேர நாட்டவரைக் கொண்ட போர்க்களத்திலே யானைகளின் தும்பிக்கைகள் துண்டிக்கப்பட்டன. அவற்றிலிருந்து பெருக்கெடுக்கிற இரத்தமானது பவளத்தைச் சொரிகின்ற பையைப் போல், சிவந்த குருதி உமிழப்படுவதாகச் சித்தரிப்பதை.

" கவளங்கொல் யானையின் கைகள் துணிக்கப்பட்டு
பவளம் சொரிதரு பைபோல் திவள் ஒளிய
ஒண்செங்குருதி உமிழும் - புனல்நாடன்
கொங்கர அட்ட களத்து " (14)

என்கிற பாடல் வழி அறியலாம்.

## ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நீதி நூற்கள்

ஔவையார்

சங்க காலத்து ஔவையாரும் அதற்குப் பிறகு வாழ்ந்தவருமான ஔவையாரும் வேறுபட்டவர்கள் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். நீதிநூல்களைப் பாடிய சோழர்கால ஔவை கிபி 12ம் நூற்றாண்டினர் என்று அறிஞர் மு. அருணாச்சலம் கூறுகிறார்.

ஔவையார் பாடியவை

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மூதுரை அல்லது வாக்குண்டாம் நல்வழி நான்கும் இவரால் பாடப்பட்டன.

ஆத்திசூடி

" ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே "

என்பது கடவுள் வாழ்த்து. இந்நூலில் 109 பாக்கள் உள்ளன. முன்னோர் கருத்துக்கள் பொன்னைப்

போல் போற்றப்படுகின்றன். எளிமை நிறைந்ததாகப் பாமரனாலும் கூடப் படித்து மனதில் கொள்ளுமாறு அவைகள் உள்ளன. முண்டாசுக் கவிஞன் பாரதியும் மூடப் பழக்கத்தை முடமாக்கிய பாரதிதாசனும் இது போன்ற புது ஆத்திசூடியை இயற்றியுள்ளார்கள். ஔவையாரின் தத்துவங்கள் ஒரு வரியில் அமைந்திருக்கக் காணலாம்.

அறம் செய்ய விரும்பு
ஆறுவது சினம்

**கொன்றை வேந்தன்**

இதுவும் மொழி முதலாகும் எழுத்துக்களால் அகர வரிசைப்படுத்தி நினைவில் தங்குமாறு எழுதப்பட்டுள்ளது.

அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று

**நல்வழி**

ஔவையார் இயற்றிய அருமையான நூல்களில் மிகச் சிறந்தது நல்வழி. இந்நூலில் 40 வெண்பாக்கள் உள்ளன. இந்நூலில் கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல்.

" பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா "

நல்வழியை அறியாதவர் கூட " பசி வந்திடப் பத்தும் பறக்கும் " என்பதை அறிந்து வைத்திருப்பதைக் காணலாம்.

அறவழியில் பொருள் ஈட்டுக, அன்பு கனிந்த இல்லற வாழ்வு காண்க, அறத்திற்கும், இன்பத்திற்கும் காரணமாக விளங்குகின்ற பொருளை நல்வழியில் செலவிடாமல் பொருளாசையின் காரணமாக மூடி வைக்காதீர்கள் என்கிறார் ஔவையார்.

" பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்தும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம் "

## காப்பிய இலக்கியம்

சிலப்பதிகாரம் முதல் இயேசு காவியம் வரை

தமிழில் முதல் காப்பியம் படைத்தவர் இளங்கோவடிகள். சிலப்பதிகாரத்தைத் தமிழ் இலக்கிய உலகுக்குத் தந்தார் அவர். " நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் " என்று பாரதியாரால் சிறப்பிக்கப் பெற்ற இந்நூல் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாகும். குடிமக்கள் காப்பியம் என்றும், நாடகக் காப்பியம் என்றும், முத்தமிழ்க் காப்பியம் என்றும் போற்றப்படுவது சிலப்பதிகாரம். சிலம்பைக் காட்டி காப்பியத்தை அழகுபடுத்திப் பெயர் சூட்டியுள்ளார் இளங்கோவடிகள். அரசரல்லாத வணிக குலத்தில் தோன்றிய ஒரு பெண்ணை அடிப்படையாக வைத்து எழுந்த காப்பியம் சிலப்பதிகாரம். காப்பியத்தைக் காப்பு + இயம் என்று பிரித்துத் தமிழ்ச் சொல்லாகவே கொள்ளலாம். தனிநிலைச் செய்யுளிலிருந்து தொடர்நிலைச் செய்யுளுக்கு மாற்றமடைந்த காலத்தில் காப்பியங்கள் தோன்றத் தொடங்கின.

**சிலப்பதிகாரச் சிறப்பு**

1. தமிழிலுள்ள காப்பியங்களில் பழமையானது.
2. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று
3. காலத்தால் முந்தியது.
4. கடைச் சங்க காலத்தைச் சார்ந்தது.
5. மூவேந்தர் பற்றிக் கூறுவது.

6. தொடர்நிலைச் செய்யுள்
7. உரையிடைப்பட்ட பாட்டுடைச் செய்யுள்
8. உலகக் காப்பியங்களோடு வைத்துப் போற்றத்தக்கது இது.
9. பண்டைக் காலத் தமிழர்களின் கலை நிலைக்காவியம் இது. நாகரிகம், சமூகநிலை ஆகியவற்றைக் கூறும் வரலாற்றுக் காப்பியம் இது.
10. இசைத் தமிழ் வரலாற்றை அறிய உதவும் பழமையான நூல்
11. கண்ணகி சிலையானது இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டிக் கொண்டுவரப்பட்டு சேரநாட்டில் நிலைபெறுகிறது.

நூல் அமைப்பு

சிலம்பில் மூன்று காண்டங்களும் 30 காதைகளும் உள்ளன.

புகார்க் காண்டம் - 10 காதைகளையும்

மதுரைக் காண்டம் - 13 காதைகளையும்

வஞ்சிக் காண்டம் - 7 காதைகளையும்

சிலம்பின் கதைச் சுருக்கம்

மாசாத்துவன் மகனாகிய கோவலனை மணந்து கொண்ட கண்ணகி சில ஆண்டுகள் அவனுடன் இன்புற்று வாழ்ந்தாள். மாதவி என்ற ஆடலரசியிடம் மனதைப் பறி கொடுத்த கோவலன் கண்ணகியை மறந்தான். கானல் வரி பாடல் பாடியபோது கருத்து முரண்பாடு ஏற்பட்டு மனம் மாறுபட்டு மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் கோவலன் மீண்டும் வந்தான்.

சிலம்பு கொண்டு பிழைத்தற் பொருட்டு வாணிக எண்ணத்துடன் மதுரையை நோக்கி வந்தான் கோவலன். கவுந்தியடிகளால் இடைக்குல மடந்தை மாதரி என்ற பெண்ணிடம் கண்ணகி அடைக்கலப்படுத்தப்படுகிறாள். பொற்கொல்லன் ஒருவனைக் கண்டு சிலம்பைக் காட்ட, கொற்கொல்லன் பாண்டிமா தேவியாகிய கோப்பெருந்தேவியின் சிலம்பைத் திருடியக் கோவலன் மீது "கள்வன்" என பழிசுமத்தி அரசனிடம் கூறினான். அரசன் விடுத்த தண்டனையால் கோவலன் கொலையுண்டான். பின்னர் கண்ணகி வழக்காடித் தன் சிலம்புகள் மாணிக்கப்பரல்களையுடையவை என்பதை எடுத்துக் காட்டித் தன் கணவன் கள்வன் அல்லன் என்று நிரூபித்தாள்.

கண்ணகி தன் கையிலிருந்த சிலம்பை வீசி உடைத்தாள். அதிலிருந்து மாணிக்கப்பரல் ஒன்று பாண்டிய மன்னனின் உதட்டில் பட்டுத் தெறித்தது. குற்றமுணர்ந்த பாண்டியன் அரியணையிலிருந்து விழுந்து உயிர்விட்டான். கோப்பெருந்தேவியும் மன்னனுடன் தன்னுயிரையும் நீத்தாள். சினந்தணியாத கண்ணகி மதுரையை எரித்து அழித்துவிட்டு சேரநாட்டு எல்லைக்குச் சென்றாள். பதினான்காம் நாள் வானவணாகி வானுலகிலிருந்து இறங்கி வந்த கோவலன் சேரநாட்டு எல்லையின் வேங்கை மர நிழலில் நின்ற கண்ணகியைக் கூட்டிச் செல்கிறான். வஞ்சிக் காண்டத்தில் சேரமன்னன் கண்ணகிக்கு கோவில் அமைக்கிறான்.

தலைவன் தலைவி நிலை வருணனை, ஆற்று வருணனை, பாடினி வருணனை என்பனவெல்லாம் மரபு வழி வந்த பண்புகள். ஆயர்களின் அன்றாட வாழ்வுமுறை, வழிபாடுகள், மாதிரியின் பண்புகள் முதலியவை சிலம்பில் விளக்கப்பட்டுள்ளன.

சிலப்பதிகார நூலைத் துவங்கும் போது சிலப்பதிகாரப் பாயிரத்தில் தம் குறிக்கோளாக,

" அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்
உடரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதாலும்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்"

என்று கூறுகிறார் இளங்கோவடிகள்.

சிலப்பதிகாரத்தில் காணும் நாடகப்பங்கு

சிலப்பதிகாரத்தில் மன்னனோடு வாதிட்டுக் கண்ணகி சிலம்பை உடைத்தபொழுது, பாண்டிய

மன்னன் நெடுஞ்செழியனுக்கும், கண்ணகிக்கும், நடந்த வாக்கு வாதமானது நாடகப் பாங்கு உடையதாகக் காணப்படுகிறது.

நெடுஞ்செழியன்,

" கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேல் கொற்றம் காண் "

என்று கோவலன் பாண்டிமா தேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் ஆகையால் அவனைத் தண்டிப்பது தவறல்ல என்கிறான் பாண்டிய மன்னன்.

கண்ணகி : " நற்றிலும் படராக் கொற்கை வேந்தே
என்கால் பொற்சிலம்பு மணி உடைஅரியே"

நெடுஞ்செழியன் : " தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாம் உடை சிலம்பு முத்துடை அரியே "

நெடுஞ்செழியன் நீதி தவறிவிட்டதை அறிகிறான். அநியாயமாகக் கோவலன் கொலையுண்ணக் காரணமாக அமைந்துவிட்டதை அறிந்த பாண்டியன் நெடுஞ்செழியன்

" பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதைக் காக்கும் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள் "

என்று கூறி அரியணையிலிருந்து வீழ்ந்து உயிர் துடிக்கிறான். இக்காட்சி அருமையான நாடகப் பாங்குடையதாக அமைகின்றது.

கி.பி. 2ம் நூற்றாண்டிலேயே தமிழ் மொழியில் நாடகப் பாங்கு நன்கு அமைந்திட இளங்கோ வித்திட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது. பொற்கொல்லனை ஒரே ஒரு காதையில் இளங்கோவடிகள் காட்டியுள்ளார். கோவலனின் கொலைக்குப் பொற்கொல்லன் காரணமல்ல, ஊழ்வினையே என்கிறார் இளங்கோவடிகள், காப்பியத்தில் எதிர்நிலைத் தலைவனாகிய கொடியவன் (வில்லன்) இல்லாமலேயே சுவையான காப்பியம் படைத்துப் புதுமை செய்துள்ளார் இளங்கோவடிகள். இவ்வாறு முத்தமிழ்க் காப்பியமாகச் சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. அதற்குப்பின் அதுபோன்ற காப்பியம் தமிழில் தோன்றவில்லை.

## மணிமேகலை

சிலம்புக்கு அடுத்த பெருமை உடைய மணிமேகலையே இயற்றியவன் சீத்தலைச் சாத்தனார். சிலப்பதிகாரம் காலணியால் பெயர் பெற்றது போல மணிமேகலை இடையணியால் பெயர் பெற்றது.

மணிமேகலையில் விழாவறை காதை முதல் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகள் உள்ளன.

" மணிமேகலைத் துறவு " என்றொரு பெயரும் இதற்கு உண்டு. காதைத் தொடர்பாலும் இது, சிலம்பின் தொடர்ச்சி போல் அமைகிறது. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளான மணிமேகலையின் வாழ்வை விளக்கும் காப்பியம் இது. மாதவிக்குப் பெண் குழந்தை பிறந்ததும் தங்கள் குலதெய்வமாகிய மணிமேகலையின் பெயரை இட வேண்டுமென்று கோவலன் கூறுகிறான்.

### கதைச் சுருக்கம்

மணிமேகலை மாதவியின் மகள். மணிமேகலையை உதயகுமாரன் என்ற சோழ இளவரசன் காதலிக்கிறான். அடிக்கடி மணிமேகலையைப் பின் தொடர்கிறான். மணிமேகலை மலர்த் தோட்டத்தினுள் சென்று விடுகிறாள். சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த மணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவம் என்ற தீவுக்கு எடுத்து செல்கின்றது.

அமுதசுரபி என்ற பாத்திரம் கிடைக்கப் பெற்று அதைக் கொண்டு பசிப்பிணி போக்கும் தொண்டு செய்கிறாள் மணிமேகலை. மணிமேகலை தன்னைப் பின்தொடர்ந்து வரும் உதயகுமாரனிடமிருந்து தப்பிக்க காய சண்டிகையின் உருவம் எடுக்கிறாள். காயசண்டிகையின் கணவன் மணிமேகலையை நோக்கிச் செல்லும் உதயகுமாரனைக் கொன்று விடுகிறான். இதனால் உதயகுமாரனின் தாய் மணிமேகலையைச் சிறையில் அடைக்கிறாள். சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக மாற்றுகிறாள் மணிமேகலை.

சாவக நாட்டிலிருந்து வஞ்சி மாநகர் வந்த மணிமேகலை கண்ணகிக் கோட்டத்தில் கண்ணகியை வணங்கிப் பல்வேறு மதத்தருக்க நூல்களையும் கற்றுத் தேர்கிறாள்.

**காப்பியச் சிறப்பு :**

1. அழகிய உவமைகள் நிறைந்துள்ளன.
2. இயற்கை வருணனைகள் காணப்படுகின்றன
3. மணிமேகலை தோழி சுதமதியோடு சேர்ந்து மலர்வனம் சென்று வருகிறபோது இடம்பெறும் வருணனைகள்.
4. ஏழைகளுக்குக் கொடுப்பவர்களே மெய்ந்நெறி வாழ்க்கை பொருந்தியவர்கள் என்று மணிமேகலை கூறுகிறாள்.

"ஆற்றுநாக் களிப்போர், அறிவிலை பகர்வோர்
ஆற்றாமாக்களரும் பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டிக் கொடுத்தோர்உயிர் கொடுத்தோரே "

5. பௌத்தமதக் கொள்கை பல இடங்களில் விவரித்துக் கூறப்படுகின்றது.

அறவண அடிகள்,

"பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் உறுவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக என்றருளி
ஐவகைச் சீலத் தமைதியும் காட்டி
உய்வகை இவை கொள் "

என்று கூறுகிறார்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை சிறப்பானதொரு உரையாகும். பசிப்பிணியின் கொடுமையைத் தீவதிலிகை,

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்தகல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரோடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி "

என்று கூறுவது பசியால் ஏற்படும் துன்பத்தை விளக்குகிறது.

உதயகுமாரன் இறந்தபோது அழுகின்ற உதயகுமாரனின் தாயாகிய அரசியிடம் " அரசியே நீ உடலுக்காக அழுகிறாயா? உயிருக்காக அழுகிறாயா? " என்று மணிமேகலை கேட்கிறாள். " எந்த உயிர்க்காகவும் இரங்கி அன்பு செலுத்து" என்று கூறினாள் மணிமேகலை.

**பிற செய்திகள்**

பல கிளைக் கதைகளும், பூம்புகார் அழிந்த வரலாறும் மணிமேகலையில் கூறப்படுகின்ற பிற செய்திகளாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் சிலம்பும் மேகலையும் இணைந்து கூறுகின்றன என்பதால் இவற்றை "இரட்டைக் காப்பியங்கள்" என்று கூறுவர்.

## சீவக சிந்தாமணி

சீவகனது வரலாற்றைக் கூறும் காப்பியம். சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்தைப் படைத்தவர் திருத்தக்க தேவர் என்னும் சமண முனிவர். இளமையிலேயே துறவு பூண்டவர் இவர். சீவக அரசனின் கதை பற்றிச் சொல்கிற காப்பியம் ஆகையால் இது சிந்தாமணி பாடக் காரணம்.

சமணத் துறவிகளுக்கு அகப் பொருள் துறைகளைப் பற்றிப் பாடத் தெரியாது என்ற பேச்சு புலவரிடையே எழுந்ததாகவும், இதனால் மனம் சோர்ந்த திருத்தக்க தேவர் சிந்தாமணியைப் பாடினார் என்றும் கூறுவர். சுடுகாட்டில் பிறந்த சீவகனைப் பார்த்துத் தாய் விசயை.

"வெவ்வாய் ஓரி முழவாக
விளிந்தார் ஈமம் விளக்கமாக
ஒவ்வாச் சுடுகாட்டுய அரங்கின்
இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ
மன்னர்க்கு இயல் வேந்தே" -

இந்நூலுக்கு "மணநூல்" என்றொரு பெயரும் உண்டு. கிபி 10ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டது எனலாம். காந்த தருவத்தை முதல் இலக்கண வரையான பெண்கள் எண்மரைச் சீவகன் மணப்பதாகக் காட்டுகிறது இது. கல்வியால் கலைமகளையும், செல்வத்தால் அலைமகளையும், ஆட்சியால் மலைமகளையும் வீடு பேற்றால் முக்தி மகளையும் மணக்கிறான் சீவகன். 13 இலம்பகங்கள் 3145 செய்யுட்கள் ஆகியவற்றைக் கொண்டு விருத்தப்பாவில் அமைந்த முதல் காப்பியம் இது. சித்தாமணியில் முந்தைய காப்பியங்களில் காணப்பட்ட காதை என்கிற உட்பிரிவுக்குப் பதில் இலம்பகம் என்ற உட்பிரிவு காணப்படுகிறது.

சீவகசிந்தாமணியானது சத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஸ்ரீபுராணம் முதலிய நூல்களில் உள்ள கதையைத் தழுவி இயற்றப்பட்டதாகும். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியார் உரை உள்ளது.

கதைச் சுருக்கம்

ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன், தன் மனைவி விசையை மீது மிகுந்த அன்பு கொண்டு அந்தப்புரத்திலேயே நாட்களைக் கழிக்கிறான். அமைச்சன் கட்டியங்காரனிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்கிறான். ஆனால் அமைச்சனோ அரசனை எதிர் நாட்டு மன்னனுடன் போர் செய்ய வைத்தால் போரில் மன்னன் சச்சந்தன் இறந்து விடுகிறான். அரசியானவள் 'மயிற்பொறி மூலம் தப்பி சுடுகாடடைந்து சீவகனை ஈன்றெடுத்தாள். கந்துக்கடன் என்பவன் தன் மகனை இடுகாட்டில் அடக்கம் செய்ய வந்தவன், சீவகனைக் கண்டு எடுத்து வந்து வளர்த்துப் பெரியவனாக்குகிறான். கலைகள் பல கற்றுத் தருகிறான். சீவகன் ஏமாங்கத நாட்டின் மீது படையெடுத்து கட்டியங்காரனைக் கொன்று வெற்றி கொள்கிறான். காப்பியத்தின் கருத்துக் காதலேயாயினும் முடிவாக வற்புறுத்தப் பெறுவது துறவறமே.

நாட்டுவளம் பாடும் திருத்தக்க தேவர் அழகிய உவமைகளை கையாண்டுள்ளார்.

" சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல் தலைநிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே " (53)

என்று நாட்டுவளத்தோடு கல்வியின் சிறப்பையும் இணைத்துப் பாடும் திருத்தக்க தேவரின் திறம் பாராட்டுதற்குறியது.

மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் கொண்ட காப்பியமாகிய சீவக சிந்தாமணியை ஒரு புதிய செய்யுள் வகையான விருத்தம் என்பதைக் கொண்டு பாடி முடித்துப் புதுமை செய்த பெருமைக்குரியவர் திருத்தக்கத் தேவர்.

## வளையாபதி

இது ஒரு சைனக் காப்பியம். காப்பியம் முழுவதும் கிடைக்க வில்லை. 72 செய்யுள் மட்டுமே கிடைத்தன என்பர். காலம் கிபி 9ம் நூற்றாண்டாகலாம். இலக்கியச் சுவையில் இணையற்றது. அறத்தன்மை, எளிமை, தெளிவு, ஆகியவை இந்நூலில் காணப்படுகின்றன. வைசிய புராணத்தில் இக்கதை வருகிறது. இந்த நூல் அழகான விருத்தங்களால் இயற்றப்பட்டது.

நவகோடி நாராயணன் எனும் வைர வாணிகன் தாழ்ந்த குலத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை மணக்கிறான். அதனால் வாணிகர்கள் வெறுக்கின்றனர். அவளைப்பிரிந்து அயல்நாடு சென்று பொருளீட்டி காவிரிப் பூம்பட்டினத்தில் தன் குலத்துப் பெண்ணோடு வாழ்ந்து வருகிறான். முன்பிருந்த மனைவிக்குப் பிறந்த குழந்தையானது தந்தையைத் தாயோடு சேர்த்து வைக்கிறான். இதுவே வளையாபதி வரலாறாகும். கற்பனை நயமுள்ள பல பாடல்கள் உள்ளன. மனிதப் பிறவியின் நிலையை ஒரு பாடல் எடுத்துக் காட்டுகிறது.

## குண்டலகேசி

இது ஒரு பௌத்த சமயக் காப்பியம்

1. காப்பியத் தலைவியால் பெயர் பெற்றது.
2. சுருண்ட கூந்தலை உடையவள் என்பது பொருள்
3. ஆசிரியர் நாதகுத்தனார்.
4. காலம் கிபி 10ம் நூற்றாண்டு எனலாம்.
5. இக்காப்பியம் முழுமையாகக் கிடைக்கவில்லை. 19 செய்யுள் மட்டுமே கிடைத்துள்ளன.

**கதைச் சுருக்கம்**

பத்திரை என்ற வணிக மகள் காளான் என்ற கள்வன் ஒருவனை விரும்பி மணந்தாள். ஒரு நாளில் ஊடல் காரணமாக அவனைக் கள்வன் எனக் கூறினாள். அவன் அன்புடையவன் போல நடித்து மனைவியை மலை வளம் காணக் கூட்டிச் செல்வது போலக் கூட்டிச் சென்று மலையிலிருந்து கீழே தள்ளிக் கொல்ல முயல்கிறான். "வழிபடு தெய்வத்தை வணங்குக" என்று கூறியதும் குண்டலகேசி அவன் மனநிலையைப் புரிந்து கொண்டு " நான் வழிபடும் தெய்வம் நீங்கள் தான்" என்று கூறி பின்புறமிருந்து காளனை மலையிலிருந்து கீழே தள்ளி விடுகிறாள். உயிர் பிரிகிறது. பின்பு அவள் துறவு பூணுகிறாள். பௌத்த துறவியாகத் தொண்டு புரிகிறாள்.

"பாளையாம் தன்மை செத்துப் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ்வியல்புமின்னே! மேல்வரும் மூப்புமாகி
நாளு நாம் சாகின்றேமால் நமக்கு நாம் அழாத தென்னே "

என்கிற பாடல் " நாம், நாள்தோறும் செத்துக் கொண்டிருக்கிறோம், நமக்காகவே நாம் அழவேண்டியிருக்கிறதே, அவ்வாறு அழாதது ஏனோ? " எனக் கேட்டு, நிலையாமைக் குறித்த கருத்து நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## ஐஞ்சிறு காப்பியங்கள்

காப்பியங்களை ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் என்று பாகுபாடு செய்தனர். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய 4 உறுதிப் பொருளில் ஒன்று குறைபட வருவது சிறு காப்பியம்.

**1. உதயணகுமார காவியம்**

வத்ச நாட்டரசன் உதயணன் கதையைக் கூறுவது இது. 6 காண்டங்களையும் 367 வித்தங்களையும் உடைய சிறு காப்பியம் இது. பெருங்கதையின் கதைச் சுருக்கம் எனலாம்.

**2. நாககுமார காவியம்**

5 சருக்கங்களையும் 170 விருத்தங்களையும் கொண்டது. வடமொழியில் மல்லிசேனர் எழுதிய நாக பஞ்சமி கதையை ஒட்டியது. சமண சமயத்தைச் சேர்ந்த நூல் இது.

**3. யசோதர காவியம்**

இக்காப்பியம் 5 சருக்கங்களையும் 320 செய்யுள்களையும் உடையது. வடமொழியிலுள்ள யசோதர சரிதத்தைத் தழுவி எழுதப்பட்ட சைன நூல் இது.

அரசன் மாரிதத்தன் உயிர்களைப் பலியிட்டு வந்தான். உயிர்க்கொலை தீது என உணர்த்த வந்த காப்பியம் இது. சிற்றின்பத்தின் சிறுமை, பேரின்பத்தின் பெருமை ஒழுக்க உயர்வு போன்றவற்றைக் கூறுகிறது இது.

**4. சூளாமணி**

ஐஞ்சிறு காப்பியங்களில் சிறப்பானது. காப்பிய நலன்கள் மிக்கது. ஆசிரியர் தோலாமொழித் தேவர். நாட்டுச் சருக்கம் முதல் முத்திச் சருக்கம் வரை 12 சருக்கங்களையும் 2131 விருத்தங்களையும் உடையது. திவிட்டன், விசயன், ஆகிய இரு மன்னர்களையும் பற்றிய வரலாற்றைக் கலையழகுடன் படைத்துக் காட்டுகிறது இந்நூல்.

**5. நீலகேசி**

குண்டலகேசிக்கு எதிராகச் சைன சமயத்தின் சிறப்பை நிலை நிறுத்த உருவாக்கப்பட்ட தருக்க நூல் இது. இதனை "நீலகேசித் திரட்டு" என்றும் கூறுவர்.

" 894 விருத்தங்கள் கொண்ட இந்நூல் முழுதும் பிற சமய எதிர்ப்பும் சைன சமயப் போற்றுதலுமாகச் சமயக் கொள்கைகளே ஓங்கியுள்ளன. சமய விளக்கம் இடம் பெற்ற அந்த அளவிற்கு இலக்கியச் சிறப்பு இடம் பெறவில்லை" என்கிறார் டாக்டர் மு. வ. (தமிழ் இலக்கிய வரலாறு ப. 158)

பாஞ்சால நாட்டில் இடுகாட்டில் நடக்கு உயிர்க்கொலையை முனிச்சந்திரர் என்ற சமண முனிவர் தம் தவவலிமையால் தடுக்க அவரது தவத்தைக் கலைக்க பழையனூர் நீலிப் பேயானது அரசி போல வேடமிட்டு வந்து தவத்தைக் கலைக்க முடியாமல் தோல்வியடைய, பின்பு அம்முனிவரின் மாணாக்கி ஆகி அவருடைய கட்டளைக்குக் கீழ் உட்பட்டு சமண சமயத்தைப் பரப்புகிறாள்.

## பெருங்கதை

சிலம்பு மேகலைக்குப் பின் இயற்றப்பெற்ற காப்பியம் இது. "பிருகத்கதா" என்னும் பைசாச மொழி நூலை ஒட்டித் தமிழில் எழுதப்பட்டது. பெரிய கதை எனப் பொருள்படும். உதயணன் கதை, கொங்குவேள் மாக்கதை எனவும் வழங்கும். இதனை இயற்றிய புலவர் கொங்குவேளிர் என்பர்.

" இதன் காலம் கிபி 7ம் நூற்றாண்டு " எனக் கூறுகிறார். அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை. வத்தவ நாட்டு கௌசாம்பி நகரத்து அரசனான உதயணனுடைய வரலாற்றை ஐந்து காண்டங்களில் விளக்கும் அருமையான நூல் இது.

உதயணன் மலையின் பக்கத்தே பறந்து, யூகி என்ற நண்பனுடன் வளர்ந்து, தந்தை அரசையும், மாமன் அரசையும் தன் முயற்சியால் பெறுகிறான். இவன் யானையைத் தன்வயப்படுத்தும் ஆற்றலுடையவன். உச்சயினி நகர மன்னன் உதயணனை யானையைக் காட்டிச் சிறையிலடைக்க யூகி நண்பன் உதயணனை விடுவிக்கிறான். உதயணன் வாசதத்தையை மணக்கிறான். உதயணன் மகன் நரவாணதத்தன மதனமங்கையை மணக்கிறான். அவளை வித்தியாதரன் கைப்பற்ற, வித்தியாதர உலகம் சென்று அங்குள்ள அரசர்களை வென்று வித்தியாதரப் பெரும்மன்னனாக வாழ்கிறான். இறுதியில், தவம் செய்கிறான். கதைச்சுவை குன்றாத வகையில் சைனசமயக் கொள்கையை ஆசிரியர் இடையிடையே கலந்து கலந்து தருகிறார்.

" அந்நாளைய நாகரிக வாழ்வின் சிறப்பெல்லாம், வகை எல்லாம் இந்நூலில் விளங்குவது போல் வேறு எந்தத் தமிழ் நூலிலும் விளங்குவதில்லை " என்று தெர். பொ. மீ. கூறுகிறார்.

## கம்பராமாயணம்

காப்பியங்களில் சிறந்த காப்பியமாக, வைணவக் காப்பியமாக, கம்பர் தந்த கவினுறு காப்பியமாகத் திகழ்வது கம்ப இராமாயணம் ஆகும். " கல்வியிற் பெரியவர் கம்பர் " என்று போற்றப்பட்ட கம்பர் காலம் கிபி 9ம் நூற்றாண்டு என்பர் சிலர். 12ம் நூற்றாண்டு என்பர் சிலர். கம்பர் தமது நூலுக்கு " இராமாவதாரம் " என்று பெயரிட்டார். " கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் " கவிச்சக்கரவர்த்தி கம்பர் போன்ற தொடர்கள் அவர் பெருமையைப் பறை சாற்றுவன. " கம்பர் பிறந்த தமிழ்நாடு " என்று பாரதியார் கம்பரைப் பாராட்டுகின்றார். வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவி தமிழில் மூலநூல் போன்றே தோன்றும் வண்ணம் இராம காதையைப் படைத்துள்ளார் கம்பர். இவர் மயிலாடுதுறைக்கருகேயுள்ள திருவழுந்தூரில் பிறந்தவர்.

கம்பராமாயணம் மனித உணர்வுகளின் சித்திரம், உயர்ந்த எண்ணங்களின் ஓவியம் நிகரற்ற வாழ்க்கை அனுபவக் கருவூலம். பிறர்மனை நோக்கா பேராண்மை-கருப்பொருள் இராமன் வீடணனிடம்.

"குகனோடும் ஐவர் ஆனோம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனோம்; எம் உழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்;
புகலரும் கானம்தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை "

என்று கூறுகின்றபோது இராமனின் உள்ளத்தில் காணும் சமத்துவ நோக்கினையும், அரசன், வேடன், குரங்கு, அரக்கன் என இவர்களை மனித நேயத்தால் இணைக்கும் தன்மையையும் அறிய முடிகிறது.

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரை இல்லாமையால்
ஒண்மை இல்லை பல்கேள்வி ஓங்கலால். "

என்கிற பாட்டு வழியாக ஒரு நாட்டிற்குரிய இலக்கணத்தையும் ஒரு நாட்டின் சிறப்பு எப்படி அமைய வேண்டும் என்பதையும் விளக்கிக் காட்டுகிறார் கம்பர்.

சூர்பனகையின் வருகையைக் கூறும் பாடல் மிகுந்த மெல்லெழுத்தோசையால் அமைந்துள்ளது. பஞ்சவடிவில் தங்கியிருக்கும் இராமனின் பேரழகில் மோகங் கொண்ட சூர்பனகை தன்னை மின்னல் பிழம்பாக்கி மயக்கும் மோகன உருவத்தில் இராமனை நோக்கி வருவதைக் காட்டலாம்" என்கிறார் பேராசிரியர் யோ. துரைராசன் (தமிழ் இலக்கிய வரலாறு பக். 89 - 90)

ஆறு காண்டங்களையும் 118 படலங்களையும் 10,500 மேற்பட்ட பாடல்களையும் கொண்டது. தம்மைப் போற்றிய சடையப்ப வள்ளலைப் போற்றுகின்றார். கம்பரின் இலக்கியச் சுவையை மருத நிலத்தைக் கம்பர் வருணிக்கிற

"தண்டலமயில்களாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை கண்விழித்து நோக்கத்
தெண்திரை எழினிகாட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ " (35)

என்கிற பாடல் காட்சி வழி கண்கொள்ளாக் காட்சியின் வழி நாம் அறிய முடிகிறது.

## பெரிய புராணம்

சைவக் காப்பியமாகிய பெரிய புராணம் சேக்கிழாரால் இயற்றப்பட்டது. சேக்கிழார் என்பது குடிப்பெயர். இயற்பெயர் அருள்மொழித் தேவர். உத்தமச் சோழப் பல்லவன் என்ற பட்டத்தினைப் பெற்றவர். சேக்கிழார் தம் நூலுக்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம். இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் முதலமைச்சராக இருந்த சேக்கிழாரின் காலம் 12ம் நூற்றாண்டின் முற்பகுதி. தொண்டர்சீர் பரவுவார் என்றழைக்கப்படுபவர் சேக்கிழார்.

**நூலமைப்பு**

இரண்டு காண்டங்களையும், திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் ஈறாக பதின்மூன்று சருக்கங்களையும் 4281 பாடல்களையும் உடையது பெரிய புராணம்.

சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர், திருவந்தாதி, தேவாரம், திருவாசகம், கல்வெட்டுகள், இவைகளே பெரிய புராணம் தோன்றக் காரணமாகும். காப்பியத் தலைவனாகச் சுந்தரமூர்த்தி நாயனாரை வைத்து காப்பியம் புனைந்துள்ளார் சேக்கிழார். திருஞானசம்பந்தருக்கு 1252 பாடல்களும், நாவுக்கரசருக்கு 428 பாடல்களும பாடியுள்ளார் சேக்கிழார்.

**சிறப்புகள் :**

மகாவித்துவான மீனாட்சி சுந்தரம் பிள்ளை

"பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்
பாடிய கவி வலவ "

என்று சேக்கிழாரைப் புகழ்கிறார்.

ஆண்டவன் அன்புக்குக் கட்டுப்பட்டவன். புலால் மறுப்போர், ஏற்போர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பதில்லை. சிவகோச்சாரியார் வருந்தி ஆண்டவனிடம் கண்ணப்பனைப் பற்றி முறையிடும் போது.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு நீ என்றருள் செய்தார் "

என்று இறைவன் கண்ணப்பனின் ஒப்பிலா அன்பினை எடுத்துக் காட்டுகிறார். நாயன்மார்களின் வரலாற்றை விரிவாகக் கூறுகிறது பெரிய புராணம்.

## தேம்பாவணி

இது ஒரு கிறித்தவக் காப்பியம். இது 36 படலங்களையும் 3715 பாடல்களையும் கொண்டது. இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாறு தான் தேம்பாவணி. " திருக்குறள் மணமும், கம்பன் கவிநயமும் அத்தேம்பாவணியில் உள்ளன " - என்கிறார் ச. வே. சுப்பிரமணியன்.

"அறக்கடல் நீயே; அருட்கடல் நீயே
அருங் கருணாகரன் நீயே
திறக்கடல் நீயே; திருக்கடல் நீயே!
திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே; நகர் கடந்து உலகில்
நிலையும் நீ; உயிரும் நீ; நிலை நான்
பெறக் கடல் நீயே; தாயும நீ எனக்குப்
பிதாவும் நீ; அனைத்தும் நீ அன்றோ"

இயேசு காவியம்

கண்ணதாசன் தம் வாழ்வில் கடைசியாகப் படைத்த கிறித்தவக் காப்பியமே இயேசு காவியமாகும். இது இயேசுநாதரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது. கண்ணதாசனின் கை வண்ணத்தில் இயேசுவின் மலைப்பொழிவுக் கருத்துக்கள் கவிதை வரிகளாகி ஒளிவீசித் திகழ்கின்றன.

இதில் இயேசு பெருமானின் வரலாறும், திருத்தொண்டுகளும், சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

தட்டுங்கள் திறக்கப்படும்
கேளுங்கள் கொடுப்படும்
தேடுங்கள் கண்டடைவீர்கள்
தேவன் வீடு சென்றடைவீர்கள்

என்று பாடுகிறார் கண்ணதாசன்.

"தலையினிலே முள்வலியும் தாளாத உள்வலியும்
தாக்கினாலும்
நிலையினிலே குன்றாமல் நெடுஞ்சிலுவை
சுமந்தபடி தேவதேவன்
அலை அலையாய் வருவோர் முன்
அசைந்தப்படி நடக்கின்றார் அதனைப் பார்த்து
நிலைகுலையா வஞ்சகரும் உதிரத்தால்
அழுதனரே நெஞ்சம் வேர்த்து "

உவமையில் மரம், பூ, இலை, காய், கடல், முகில், மழை, விண்மீன் நிலவு, நீர், நெருப்பு, போன்றவற்றைக் கண்ணதாசன் பயன்படுத்திக் கவிதைக்கு அழகு சேர்த்துள்ளார்.

" முன்னலங்காரம் என்ன
முகப்பலங்காரம் என்ன
பின்னலங்காரம் என்ன
பெருகிய மாதர் யாரும்
தன்னலங்காரம் காட்டும்
தனியலங்காரம் என்ன
இன்னவாறிருந்த வீட்டில்
இலை போடும் நேரம் கண்டார் "

என்று கண்ணதாசன் அலங்காரம் என்ற சொல் பலமுறை வருமாறு கவிதை படைத்துள்ளார்.

" இலக்கியம் சிறப்படையக் கருத்து, கற்பனை, உணர்ச்சி, வடிவம் ஆகியன துணை நிற்கின்றன. இவை கண்ணதாசனின் இயேசு காவியத்தில் சிறப்பாக அமைந்துள்ளன " என்கிறார் டாக்டர் அ. பாஸ்கர பால்பாண்டியன். (தமிழ் இலக்கியம் அன்றும் இன்றும் ப. 53)

**இசுலாமியக் காப்பியம்**

**சீறாப்புராணம்**

" சமணத்திற்குச் சிந்தாமணி
பௌத்தத்திற்கு மணிமேகலை
சைவத்திற்கு பெரிய புராணம்

வைணவத்திற்குக் கம்பராமாயணம்
கிறித்தவத்திற்குத் தேம்பாவணி "

போன்று இசுலாமியத்தினற்குச் சீறாப்புராணம் பெருமை சேர்க்கிறது.

சீறாப்புரானத்தின் ஆசிரியர் உமறுப்புலவர். 5027 பாடல்களையும் 3 காண்டங்களையும் 92 படலங்களையும் உடையது இது. முதல் நகரப்படலம் போன்றவற்றில் வரும் அரபு நாட்டு வருணனையானது, தமிழகத்தின் வளம் கொழிக்கும் வருணனையாகக் காட்டப் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டையே அரபு நாடாக காண்கிறோம்.

உமறுப்புலவரை ஆதரித்தவர் - வள்ளல் சீதக்காதி

இந்நூல் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு. போதனை ஆகிய இவற்றைக் கூறுகிறது. அரபுச் சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இசுலாமிய சமய உண்மைகளும் நம்பிக்கைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அரபுமொழிச் சொற்கள் பல கலந்துள்ளதாக, இனிய ஓசை உடைய பாடல்களைக் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது.

கடவுள் வாழ்த்துப் பாடல்

"திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக்கு அணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தவம் புரிந்த
கருத்தனைப் பொருந்துதல் கருத்தே"

என்கிற சீறாப்புராணத்தில் கடவுள் வாழ்த்தாக அமைந்த பாட்டானது ஆழ்ந்த கருத்தும், பொதுவான நோக்கமும் உடையது.

## பக்தி இலக்கியம்

பக்தி வழி வந்த புது இலக்கிய மரபு.

இறைவன் மீது பக்தர்கள் உள்ளம் உருக, ஊன் உருக, துதி செய்து, பாடி வழிபட்டமையே பக்திப் பாடல்கள் எனலாம். தமிழ் பக்தியின் மொழி என்பர் சிலர். சமண, பௌத்த, செல்வாக்கை வீழ்த்திட சைவ வைணவங்கள் எழுந்தன. 6ம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர் செல்வாக்குக் குறையவே தென்பகுதியில் கூன்பாண்டியனாகிய நின்ற சீர் நெடுமாறன் களப்பிரரை விரட்டினான். பல்லவர் காலம் தமிழகத்தில் பக்தி இலக்கியக் காலமாக, சமய காலமாக அமைந்திருந்தது எனலாம். மன்னனைப் பாடும் மரபு மறைந்து இறைவனைப் பாடும் புது இலக்கிய மரபு தோன்றியது எனலாம். பக்தி இலக்கியம் செழிப்பாக வளர்ந்த காலம் 7,8,9ஆம் நூற்றாண்டுகள்.

## சைவமும், வைணவமும்

சைவ, வைணவ, சமயங்கள் முகிழ்த்து தழைத்தன. சைவ சமய நூலான பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்தின் தோத்திர நூல்களைாகத் திகழ்ந்தன. பன்னிரு ஆழ்வார்களின் திவ்ய பிரபந்தங்களைப் பாடி இறைவனை வழிபட்டனர். சிவனை முன்னிறுத்தி வழிபடுவது சைவமாகும். திருமாலை முன்னிறுத்தி வழிபடுத்தி வைணவமாகும்.

### பன்னிரு திருமுறைகள்

| திருமுறை | பாடியவர் | பாடிய நூல் |
|---|---|---|
| 1,2,3, | திருஞான சம்பந்தர் | தேவாரம் |
| 4,5,6, | திருநாவுக்கரசர் | தேவாரம் |
| 7 | சுந்தரமூர்த்திகள் | தேவாரம் |
| 8 | மாணிக்கவாசகர் | திருவாசகம், திருக்கோவையார் |
| 9 | திருமாளிகைத்தேவர் முதலிய என்பது பேர் 9 பேர் பாடிய நூல்கள். | |

9 பேர் (திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கண்டராதித்தர், பூந்துருத்தி நம்பி, காடவ நம்பி, திருவாலி அமுதனார், புருடாத்தம நம்பி, கருவூர்த் தேவர், வேணாட்டடிகள்)

10 திருமூலர் - திருமந்திரம்

11 திருவாலயுடையார் முதலிய பன்னிருவர்நூல்கள்

1 திருவாலயுடையார்
2 காரைக்கால் அம்மையார்
3 ஐயடிகள் காடவர்கோன்
4 சேரமான் பெருமாள் நாயனார்
5 நக்கீரர்
6 கபிலர்
7 பரணர்
8 கல்லாடர்
9 இளம்பெருமானடிகள்
10 அதிரவடிகள்
11 பட்டினத்துப் பிள்ளையார்
12 திருமுறை சேக்கிழாரின் பெரிய புராணம்

**தேவாரம்**

தே + வாரம் - தெய்வத்தின் மீது பாடப்படுவது. தே + ஆரம் - தெய்வத்திற்குச் சூட்டும் மாலை. பக்தி மணம் கமழும் தேவாரப் பாடல்கள் பல்லாயிரக்கணக்கானவை. அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்கிற மூன்று நாயன்மார்களின் பாடல்கள் எண்ணாயிரமும் தேவாரம் என்ற பெயரால் சிறந்த பக்தி இலக்கியமாக விளங்குகின்றன. என்கிறார் டாக்டர் மு. வரதராசனார் (தமிழ் இலக்கிய வரலாறு ப. 103)

**சம்பந்தர் தேவாரம்**

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன் என்று சிறப்பிக்கப்பட்ட சம்பந்தர் சீர்காழியில் பிறந்தவர்.

ஊர் - சீர்காழி
குலம் - அந்தணர்
பெற்றோர் - சிவபாத இருதயர், பகவதியார்
சிறப்புப் பெயர் - ஆளுடையபிள்ளை, காழிவள்ளல்
பாடல்கள் - முதல் மூன்று திருமுறை

இவருடைய பாடல்களில் 4168 பாடல்களே கிடைத்துள்ளன. சிலர் 4146 பாடல்கள் என்பர்.

**சம்பந்தரின் பெருமைகள்**

1. பெரிய புராணத்தில் இவர் புராணமே மிகுதி. எனவே பிள்ளை பாதி, புராணம் பாதி என்பர்
2. இவர் கூன் பாண்டியனை நின்றசீர் நெடுமாறனாக்கினார்.
3. சமணர்களை வாதில் வென்றார் இவர்
4. மங்கையர்க்கரசியரும் குலச்சிறையாரும் இவருக்கு ஆதரவ அளித்தனர்
5. ஆதிசங்கரர் இவரைத் 'திராவிடச்சிசு' என்றழைத்தனர்
6. பால்மணம் மாறாச் சிறுவனாக இருந்தபோதே 'தோடுடைய செவியன்' என்ற பாடலைப் பாடினார்.
7. இவருடைய பாடல்களில் இயற்கை வருணனை இழையோடும்
8. முழு முதற் கடவுளின் பெருமையைத்

" தென்னாட்டுடைய சிவனே போற்றி
எந்நாட்டார்க்கும் இறைவா போற்றி "

என்று எடுத்துக் கூறியவர் இவர். சைனரும் பௌத்தரும் துறவறத்தையே பெருமையாகப் பேசி

இல்லறத்தைப் பழித்து வந்த ஒரு காலகட்டத்தில் சம்பந்தர் இல்லறனும் இனிதே. அதனைப் பெண்ணின் நல்லாளோடு சேர்ந்து நடத்துவதும் பெருமைக்குரியதே என்று கூறிப் பெண்மைக்கு ஒரு உயர்வினைக் காட்டியுள்ளார்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்ல.ஃ.துறம் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளோடும் பெருந்தகை இருந்ததே " என்று ஊக்கமும்
நம்பிக்கையையும் மக்கள் மனத்தில் தோன்றச் செய்தவர் சம்பந்தர்.

சம்பந்தர் பாடலில் காணும் இயற்கைக் காட்சி

திருவீழி மிழலைப் பதிக்கத்தில்

"தேங்கொள் பூங்கமுகு தெங்கிளங் கொடிமாச்
செண்பகம் வண்பலா இலுப்பை
வேங்கை பூ மகிழால் வெயிற் புகா வீழி
மிழலையான் என வினை கெடுமே."

என்று இயற்கை காட்சியைச் சம்பந்தர் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

திருநீற்றின் பெருமை

திருவாலவாய்ப் பதிக்கத்தில் சம்பந்தர் திருநீற்றின் பெருமையை,

" காணவினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணத் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந்தருவது நீறு திருவாலவாயான் திருநீறே "

என்று எடுத்துக் கூறுகிறார்.

கோளறு பதிகம் பாடிய கோமகனார்

பாண்டிய நாட்டிற்குச் சம்பந்தரும், நாவுக்கரசரும் புறப்பட்ட போது நாள் சிறந்ததாக இல்லை எனக் கூறினார். உடனே சம்பந்தர் "நாளும் கோளும் நல்லவர்க்கில்லை" என்று உரைத்து "கோளறு பதிகம்" பாடினார்.

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே" (2388)

சம்பந்தரின் இப்பாடலைப் படித்தோர் அனைவரும் 'கிரக நிலை' யிலிருந்து மீள்வர். மேலும் கிரகங்கள் என் செய்யுமோ என்று அஞ்சுகிற நிலை தேவையில்லை என்பதையும் மக்களுக்கு எடுத்துக்காட்டி தன்னம்பிக்கை ஊட்டி ஊக்கமூட்டும் தன்மையினையும் சம்பந்தர் பாடல் வழி நாம் அறிய முடிகிறது.

திருநாவுக்கரசர்

ஊர் - திருமனைப்பாடி நாடு - திருவாரூர் (சோழ நாடு )
பெற்றோர் - புகழனார், மாதினியார்
இயற்பெயர் - மருள் நீக்கியார்
வேறு பெயர்கள் - தருமசேனர், அப்பர், தாண்டக வேந்தர்
திருமுறைகள் 4,5,6,
நாவுக்கரசரின் பாடல்களில் கிடைத்தவை 3066 பாடல்களே ஆகும்.

தாண்டகம் என்கிற நெஞ்சை உருக்கக்கூடிய பாடல்களைப் பாடியதால், தாண்டக வேந்தர் என்று அழைக்கப்பட்டனர்.

இவருடைய பாடல்கள் சங்ககால அகத்துறைகள் போல காதலுணர்வுடன் கூடிய பாடல்களாக உள்ளத்தை நெகிழச் செய்வன.

1. திருவாரூர் பதிக்கத்தில், தெய்வக் காதலால் தன்னையே மறந்து தலைவனாகிய இறைவனின் பாதகமலங்களில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட காதலியின் நிலையை

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகல் இடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே (6501)

என்னும் பாடல் மூலம் உணர்த்திக் காட்டியுள்ளார்.

தமக்கையால் சைவம் சேர்ந்த பெருமகனார்

சிறுவயதிலேயே பெற்றோரை இழந்ததினால் தமக்கை திலகவதியாரால் வளர்க்கப்பட்டார். சமணராக இருந்த இவர் வைணவராக மாறக் காரணம் இவருக்கு ஏற்பட்ட சூலைநோய் ஆகும். திருநீற்றை அணிந்து கொண்டு வீரட்டானத் துறையில் வீற்றிருக்கும் ஈசனை வணங்கி இவர் பாடிய முதல் பதிகம்.

"கூற்றாயினவாறு விலக்கலீர்
கொடுமை பல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்கு எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே " (4159)

சமண சமயத்தை ஆதரித்த அக்காலப் பல்லவ மன்னனாகிய மகேந்திரப் பல்லவன் சமணர்களின் தூண்டுதலால், நாவுக்கரசருக்குப் பலதுன்பங்களைக் கொடுத்தான். நாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில இட்டு வாட்டினான். அப்போது,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே " (6112)

என்ற பதிகம்பாடி இறைவனின் திருவடிகளின் பெருமையை உலகுக்கு உணர்த்திக் காட்டினார். இறுதியில் மகேந்திர பல்லவனே மனம் மாறி சைவத்தைத் தழுவினார்.

வயதால் பெரியவரானதால் சம்பந்தரால் அப்பரே என்றழைக்கப்பட்டவர் இவர். கையில் உழவாரப் படையேந்தி பாழடைந்த திருக்கோவில்களை துப்புரவு செய்து செப்பனிட்டார் இவர். அப்பரது பாடல்களில தொண்டுள்ளம். அனுபவ முதிர்ச்சி ஆகியவை காணப்படுகின்றன.

" திருநாவுக்கரசரது பாடல்களில் பக்தியின் உருக்கம் மிகுந்துள்ளது. திருஞான சம்பந்தர் போல் ஆணையிட்டுக் கூறும் முறை இல்லை. பணிவும் குழைவுமே மிகுதி" என்றார் டாக்டர் மு. வரதராசனார் (தமிழ் இலக்கிய வரலாறு)

சுந்தரர்

ஊர் - திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூர்

குலம் - அந்தணர்

பெற்றோர் - சடையனார் இசை ஞானியார்

தடுத்தாட் கொண்டவர் சிவபெருமான், திருவெண்ணெய்நல்லூரில் மணமேடையில் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்டார்.

வேறு பெயர்கள் - தம்பிரான் தோழர், நாவலூரர், வன்தொண்டர்

கிடைத்த பாடல்கள் - 1026

காலம் - கிபி 8 என்பர்

இவர் பாடிய திருத்தொண்டத் தொகையே நம்பியாண்டார் நம்பியாலும், சேக்கிழாராலும் திருத்தொண்டர் திருவந்தாதியும் திருத்தொண்டர் புராணமும் பாடக் காரணமாயின.

திருவாரூரில் பரவையார், திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியார் ஆகியோரை மணம் செய்து கொண்டு வாழ்ந்தவர் சுந்தரர். இறைவனைத் தம் தோழராக எண்ணினார். இறைவனைப் பித்தா என்றழைத்தார். இறைவனே கேட்டு மகிழ்ந்த அந்தப் பாடல்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தா மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே!

சிவபெருமானிடம் உரிமையோடு கேட்டுத் தேவையானவற்றைத் தருவாறு இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. மன்னர்களைப் பாடுவதை நீக்கி இறைவனைப் பாடுவதையே விரும்புகிறார் இவர். இதனை,

மிடுக்கிலாதானை வீமனே விறல்
விசயனே வில்லுக்கிவ னென்றும்
கொடுக்கிலாதானைப் பாரியே என்றும்
கூறினும் கொடுப்பாரில்லை
பொடிக்கொள் மேனி எம் புண்ணியன்
புகலூரைப் பாடுமின் புலவீர்காள்!
அடுக்கு மேலமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே (7565)

என்பது போன்ற பாடல்கள் மூலம் சுந்தரர் எடுத்துக் காட்டியுள்ளார்.

மாணிக்கவாசகர்

ஊர் - திருவாதவூர்

குலம் - அந்தணர்

இயற்பெயர் - திருவாதவூரர்

திருமுறை - 8 (திருவாசகம், திருக்கோவையார்)

இவர் அரிமர்த்தனப் பாண்டியனிடம் அமைச்சராக இருந்தார். தென்னவன், பிரமராயன், போன்ற சிறப்புப் பட்டம் பெற்றார்.

ஒருமுறை பாண்டிய மன்னன் குதிரை வாங்குமாறு பொன் கொடுத்து அனுப்பினான். திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் இறைவன் ஞானாசிரியனாக இருந்தான். மாணிக்கவாசகர் துறவுபூண்டு தவம் செய்தார். பொன்னைக் கோயில் கட்டும் பணிக்குச் செலவிட்டார். இதனைக் கேட்ட மன்னன் மாணிக்கவாசகரை எச்சரிக்கை செய்ய ஆண்டவன் நரியைப் பரியாக்கி அனுப்பினார். பின்னர் பரி நரியாக மாணிக்கவாசகர் மன்னனால் தண்டிக்கப்பட்டார். மாணிக்கவாசகரை அரசன் தண்டிக்கும் போது அங்கிருந்த அத்தனை மக்களும் துன்பப்பட மாணிக்கவாசகரின் சிவபக்தியை அறிந்து அவரைப் போற்றினார். இவர் பாடிய திருவாசகம் தேன் போன்ற தன்மையுடையன.

திருவாசகம் 51 பகுதிகளையும் திருப்பதிகம் 659 பாடல்களையும் கொண்டது. திருவாசகத்தின் முகப்பு சிவபுராணம்.

"நமசிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!"

திருவாசகத்தில் இவர் மிக எளிய சொற்களால் நெஞ்சு நெக்குருகும் வண்ணம் பாடல்களை அமைத்துள்ளார். இறைவன் "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இம்மையுமாய் கோனாகி இருக்கின்ற இறைவனை

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேனம் கொட்டாமோ."

எனப் போற்றுகிறார்.

இவருடைய திருவெம்பாவை திருக்கோத்தும்பி திருத்தெள்ளேனம் திருச்சாரல் போல்வன நாட்டுப்புறப் பாடல்களின் வடிவங்களில் அமைந்து மகளிர் விளையாடும் விளையாட்டுக்களோடு ஒருங்கிணைத்துப் பாடப்பட்ட பாடல்களாகும்.

திருவெம்பாவை - சயாம் நாட்டில் தமிழ் மந்திரமாக ஓதப்பெறுகிறது.

முனைவர் ஜி. யு. போப் என்ற மேலை நாட்டு அறிஞர் திருவாசகத்தில் ஈடுபட்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

"வான்கலந்த மாணிக்க வாசகத்தைப் படிக்கும் போது தேன் கலந்து பால் கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கிறது." என்று பாராட்டப்படும் பெருமைக்குரியவை மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்கள். திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார். என்பது பழமொழி. இறைவன் "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்று கூறியதும் மாணிக்கவாசகர் திருக்கோவையாரைப் பாடினார். இதில் 400 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் உள்ளன.

திருமூலர்

பத்தாம் திருமுறையாகத் திருமூலரின் திருமந்திரம் வைக்கப்பெற்றுள்ளது.

பதினெண் சித்தர்களில் முதலிடம் பெறுபவர் திருமூலர். இவர் இயற்றிய திருமந்திரம் 3047 பாடல்களைப் பெற்றது. தத்துவ உண்மைகள் இவரது பாடல்களில் ததும்பும் ஒன்றே குலம் ஒருவனே தேவன். என்ற பாடல் ஒருமைப்பாட்டு மந்திரமாகும்.

திருமூலரின் தத்துவங்கள் சில

1. உடம்பிற்கும் உயிர்க்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைத் திருமூலர் எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்றும் கூறுகிறார்.
2. தாம் அறிந்ததை உலகிற்கு உணர்த்த

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்று கூறுகிறார்.

3. இறைவன் அன்பு நெறியானவன் என்பதைக் கூறுகையில் அன்பும் சிவமும் இரண்டு பொருளல்ல. அன்பே சிவம் என்பதை உணர்ந்தவர் சிலரே என்பதை

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்.
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே (270)

என்கிற பாடல் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

4. இறைவனைக் காணும் உபாயத்தை.

உணவும் உடையும் இல்லாத ஏழை மக்களுக்கு உதவுங்கள். அதனால் அவர்கள் மகிழ்ச்சியடையலாம். அந்த ஏழைகளின் சிரிப்பில் இறைவன் காட்சி தருகிறார்.

5. மனிதன் தாழ்ந்த நிலை அடைவதற்கு ஆசையே காரணமாகும் என்பதையும் ஆசையை நீக்க வேண்டும் என்பதையும்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே!

என்கிற திருமூலரின் பாடல் காட்டுகிறது.

6. ஆகவே ஐம்பொறிகளை அடக்கி ஆளுங்கள் என்பதை

பார்ப்பான் ஜகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பனன் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே

என்று கூறினார்.

7. மனிதன் இப்பிறவியில் இறைவனோடு வாழ்வியலைத் தொடர வேண்டும் என்று கூறுகிறார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலன் ஐந்தும் காளை மணி விளக்கே

இது போன்ற பிற பாடல்களும் திருமூலரின் தத்துவக் கோட்பாட்டை வலியுறுத்தியே அமைகின்றன.

பன்னிரண்டாம் திருமுறை - சேக்கிழாரின் பெரிய புராணம்

**வைணவ சமய இலக்கியங்கள்**

தமிழகத்திலுள்ள 108 வைணவத் திருத்தலங்களை நேரிலே கண்டு இறைவனைப் பாடினார். காண்பதெல்லாம் கண்ண பெருமானாகவே காண்பது. ஆழ்வார்களின் பக்தி நெறி.

**வைணவநெறி**

தொல்காப்பியர்

"மாயோன் மேய காடுறை உலகமும்"

என்று குறிப்பிடுவதன் மூலம் மிகத் தொன்மையுடையது திருமால் நெறி. அல்லது வைணவ நெறி என்பதை அறியலாம்.

வைணவ நெறியை வளர்த்தவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் பன்னிருவர். இவர்கள் பாடியது நாலாயிரத் திவ்ய பிரபந்தம்.

**ஆழ்வார்களும் அவர்கள் பாடியவைகளும்**

1. பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி
2. பூதத்தாழ்வார் - 2ம் திருவந்தாதி
3. பேயாழ்வார் - 3ம் திருவந்தாதி
4. திருமழிசையாழ்வார் - 4ம் திருச்சந்த விருத்தம்
5. நம்மாழ்வார் - திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி
6. மதுரகவியாழ்வார் - கண்ணி நுண் சிறுதாம்பு
7. பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி
8. ஆண்டாள் - திருப்பாவை, நாச்சியார் திருமொழி
9. திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி, திருக்குந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருக்கெழு கூற்றிருக்கை - சிறிய திருமடல், பெரிய திருமடல்
10. தொண்டரடிப் பொடியாழ்வார் - திருமாலை, திருப்பள்ளியெழுச்சி
11. திருப்பாணாழ்வார் - அமலனாதிபிரான்
12. குலசேகர ஆழ்வார் - பெருமாள் திருமொழி

**முதல் ஆழ்வார்கள் மூவர்**

கிபி 6ம் நூற்றாண்டு என்பர்

பொய்கையாழ்வார் - காஞ்சியில் பிறந்தவர்

பூதத்தாழ்வார் - திருமயிலையில்

இவர்கள் மூவரையும் முதல் மூன்று ஆழ்வார் என்று குறிப்பிடுவார்கள்.

ஒரு முறை பொய்கையாழ்வார் திருகோவிலூரில் ஒரு வீட்டின் முற்றத்தில் மழைக்காக ஒதுங்கி நின்று கொண்டிருந்தார். அப்போது பூதத்தாழ்வாரும், பேயாழ்வாரும் அங்கு வந்தனர். அதைக்

கண்ட பொய்கையாழ்வார் ஒருவர் கிடக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்றார். அந்த நேரத்தில் யாரோ நடுவில் நின்று கொண்டு ஒருவரை ஒருவர் நெருக்குவதை உணர்ந்தார். பின்பு அவரே திருமால் என்று உணர்ந்தனர்.

பொய்கையாழ்வார் பாடலை சொல் மாலை என்றும் பூதத்தாரும் தம் பாடலை ஞானத்தமிழ் என்றும் பேயாழ்வார் தம் பாடலை திருக்கோலம் காண்டல் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

**பூதத்தாழ்வார் கண்ட காட்சி**

" அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இருதிரியா - நன்பு உருகி
ஞானச்சுடர் விளக்கை ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்"

நம்மாழ்வார்.

தமிழகத்தின் தென்பகுதியான ஆழ்வார் திருநகரியில் தோன்றியவர். பன்னிரு ஆழ்வார்களில் தலைமையும், பெருமையும் சிறப்பும் உடையவர்.

வேறு பெயர்கள் : குருகூர் நம்பி, மாறன், சடகோபன் பராங்குசர்

பெற்றோர் : மாறன் காரி, உடைய நங்கை

இவருடைய திருவாய்மொழியில்

"உண்ணும் சோறும், பருகும் தண்ணீரும் உண்ணும் வெற்றிலையும் கண்ணனே"

என்று பாடுகிறார். "எல்லோரும் நம் ஆழ்வார் என்று போற்றும் ஒரு பெரியாரை அளித்த தமிழ் நாட்டை மனத்தால் நினைக்கின்றேன். வாயால் வாழ்த்துகின்றேன். கையால் தொழுகிறேன" என்கிறார் திரு. வி. க.

**பாடிய பாடல்கள்**

திருவிருத்தம், திருவாசிரியர், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி ஆகியவற்றை நம்மாழ்வார் பாடியுள்ளார்.

"பூவையும் காயாலும் நீலமும் பூக்கின்ற
காவிமலர் என்றும் காண்தொறும் - பாயியேன்
மெல்ஆவி மெய் மிகவே பூரிக்கும் - அல்லவை
எல்லாம் பிரான் உருவே"

என்று பாடுகிறார். இவரது காலம் கிபி 9ம் நூற்றாண்டு

இவர் மற்றைய ஆழ்வார்களிலும் உயர்ந்தவர் எனப் போற்றப்படுகிறார். இவரை உடலாகவும், மற்றைய ஆழ்வார்களை அதன் உறுப்புகளாகவும் உருவகப்படுத்திக் கூறுவார். இதன்படி

பூதத்தார் தலையாகவும்
பொய்கையாழ்வார், பேயாழ்வார் இரு கண்களாகவும்
பெரியாழ்வார் முகமாகவும்
திருமழிசையாழ்வார் கழுத்தாகவும்
குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார் கைகளாகவும்
தொண்டரடிப் பொடியாழ்வர் மார்பாகவும்
திருமங்கையாழ்வார் கொப்பூழாகவும்
மதுரகவியாழ்வார் பாதமாகவும்

கூறுவது மரபு. காலம் 6ம் நூற்றாண்டு என்பர். 9ம் நூற்றாண்டு எனவும் கூறுவர்.

**மதுரகவியாழ்வார்**

நம்மாழ்வாரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட மதுரகவியாழ்வார் திருக்கோளூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். இவர் மதுரகவி என்று அழைக்கப்பட்டார். தம்முடைய குருவாகிய நம்மாழ்வாரையே தெய்வமாகப் போற்றினார். இது சைவ சமயத்தில் அப்பூதி அடிகளாரை நினைவுப்படுத்தும்.

நம்மாழ்வாரை காரிமாறர், சடகோபர், பராங்குசர், திருக்குருடர் நம்பி, திருவழுதி வளநாடர்,

வேதம் செய்த தமிழ்மாறன் போன்ற பெயர்களை வாய் குளிர அழைத்தார்.

இவர் 'கண்ணி நுண் சிறுதாம்பு' என்று தொடங்கும் 11 பாசுரங்களைப் பாடினார்.

தேவு மற்று அறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவேனே

என்பதும்

அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்
தன்மையான் சடகோபன் என் நம்பியே

என்பதும் மதுரகவியாழ்வார் பாடிய பாடல்களாகும்.

**திருமங்கையாழ்வார்**

திருவாலி நாட்டில் திருக்குறையலூரில் கள்ளர் மரபில் நீலன் என்பவர்க்கு மகனாகத் தோன்றியவர்.

இயற்பெயர் கலியன்

வேறு பெயர்கள் : மங்கையர் கோன், மங்கை வேந்தன், அருள்மாரி எனவும் அழைப்பர்

குமுதவில்லி என்பவரை மணந்தார்.

தொழில் : செல்வ முழுவதையும் திருமால் அடியவர்க்கு அமுதூட்டுவதில் செலவழித்துவிட்டு வழிப்பறி செய்தல்

பெருமாள் தன் தேவியோடு காட்டு வழியே வரும் போது நகைகளைப் பறித்தார். ஆனால் நகைகளைக் தூக்க முடியாமல் திணறவே பெருமாள் திருமங்கையாழ்வாரின் காதில நாராயண மந்திரத்தைக் கூற ஆட்கொள்ளப்பட்டார்.

**எழுதிய நூல்கள்**

பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பெரிய திருமடல், சிறிய திருமடல் திருவெழு கூற்றிருக்கை.

இவர் காலம் கி.பி. 8ம் நூற்றாண்டு.

திருமால் மீது காதல் கொண்ட பெண் மடலேறத் துணிவதாக அமைத்து சிறிய திருமடல், பெரிய திருமடல் பாடினார். ஆனால் தொல்காப்பியமோ,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடலேறல் பொற்பு நெறிமை அன்று" என்று கூறுகிறது.

**திருமழிசையாழ்வார்**

1. காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருமழிசையில் பிறந்தவர்
2. கணிகண்ணன் இவருடைய தோழன் (மாணவர்)
3. இவரை ஆராவமுதாழ்வார் என்று அழைப்பர்
4. திருச்சந்த விருத்தம் நான்முகன் திருவந்தாதி என்ற நூல்களைப் படைத்தார்.
5. காலம் கிபி 8ம் நூற்றாண்டு

திருமழிசைக் கோயிலில் தூய்மை செய்தல், கோலமிடுதல் போன்ற பணிகளைச் செய்த ஒரு பெண், முதுமை அடைந்தாள். அவள் மேல் இரக்கம் கொண்டார் திருமழிசையாழ்வார். இறைவனிடம் இவர் முறையிட அக்கிழவியானவர் இளமை பெற்றாள். இதனைக் கேள்வியுற்ற சோழ மன்னன் தன்னையும் இளமைத் தன்மை உடையவராக ஆக்கும்படி வேண்டினார். அதற்கு இவர் மறுத்துவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த அரசன் திருமழிசையாழ்வாரை ஊரை விட்டுப் போகும்படிக் கூறினான்.

திருமழிசை ஆழ்வார் கோயிலில் இறைவனிடம் வேண்டிச் சென்றார்.

"கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவன் யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்"

என்று பாடினார்.

**பெரியாழ்வார்**

ஊர் - ஸ்ரீ வில்லிப்புத்தூர்

குலம் - அந்தணர்

இயற்பெயர் - விஷ்ணு சித்தர்

காலம் - கிபி 9ம் நூற்றாண்டு

சிறப்புப் பெயர் - வேயர்கோன், பட்டர்பிரான், புதுவை மன்னன்

பாடியவை - திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி

இவர் மலர்வனம் அமைத்து இறைவனுக்குப் பணிபுரிந்தார். ஒரு நாள் துளசிச் செடி அருகே ஒரு பெண் குழந்தையைக் கண்டார். அதனை வளர்த்தார். நாச்சியார் என்றும் கோதை என்றும் அழைத்தார். அவரே ஆண்டாள் ஆவாள்.

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக நினைத்துக் குழந்தைப் பருவப் பாடல்களைப் பாடினார். 'பிள்ளைத் தமிழ்' எனும் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடியானார். இவர்.

கண்ணனைத் தாலாட்டும் போது.

"மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணிப் உனக்குப் பிரமன் விடுத்தந்தான்
மாணிக் குறளனே தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ!"

என்று தாலாட்டிப் பாடியவர் இவர்.

இவரது பாடலில் இனிமை, ஓசை நயம், அழகு ஆகியவை கலந்திருக்கும் தனிச்சிறப்புடையது.

ஆண்டாள்

பெரியாழ்வார் தம் இல்லத்து நந்தவனத்து மலர்களை மாலையாகக் கட்டிப் பெருமாளுக்குச் சூட்டுவது வழக்கம். ஆண்டாள, இதனைத் தம் கழுத்தில் மாலையாக அணிந்து அழகு பார்த்து இறைவனுக்கு அனுப்பினாள். இதைக் கண்டு பெரியாழ்வார் பதற்றத்துடன் வேறு மாலையைக் கட்டி இறைவனுக்குச் சூட்டினார். ஆனால் இறைவன் அன்றிரவே பெரியாழ்வார் கனவில் தோன்றி ஆண்டாள் சூடிய மாலையைக் கொண்டு வருமாறு கூற ஆண்டாளின் பக்தியைக் கண்டு வியந்து நின்றார் பெரியாழ்வார். "சூடிக் கொடுத்த சுடர்கொடி" என்று ஆண்டாள் பாராட்டப்பட்டாள். கண்ணனையே தன் கணவனாக வரித்துக் கொண்ட ஆண்டாள் பாடிய பாடல்கள் நாச்சியார் திருமொழி, திருப்பாவை ஆகியவை.

"வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று" என்கிறாள் ஆண்டாள். ஆண்டாளின் காலம் கி.பி. 885.

மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்.

என்று உறுதி பூண்டு தெய்வக் காதல் கொண்ட ஒரு தெய்வீகப் பெண் ஆண்டாள். திருமாலைத் திருமணம் செய்து கொள்வதாக தான் கண்ட கனவைக் கூறும் போது.

மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிதைாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்

என்று ஆண்டாள் கூறினாள்.

திருமால் கையிலுள்ள வெண்சங்கைப் பார்த்து

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொலித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே?

என்று கேட்டு தினந்தோறும் சங்கை ஊதும் மாதவன் தன் திருவாயின் மகிமையைச் சொல்லுமாறு வெண்சங்கிடம் வேண்டி நிற்கிறாள். ஆண்டாள். இவ்வாறு ஆண்டாள் பாடிய பாடல்கள் படிக்கப் படிக்க இனிக்கும் தன்மையன.

ஆண்டாள் அருளிய திருப்பாவைப் பாடல்கள் ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதத்தில் தின்ந்தோறும் பாடப்படுகின்றன. ஆண்டாள் கோபியருள் ஒருவராகத் தன்னைப் பாவித்துக் கொண்டு

ஆழ்ந்த பக்தியுணர்ச்சியோடு கண்ணனிடம் தான் கொண்ட காதலுணர்வை வெளிப்படுத்தும் பாட்டு பாவைப்பாட்டாகும். இப்பாட்டில் அதிக ஈடுபாடு கொண்ட இராமானுஜரை 'திருப்பாவை ஜீயர்' என்று உலகம் போற்றியது.

**திருப்பாணாழ்வார்**

ஊர் - உறையூர்

குலம் - பாணர் குடி

படைப்பு - அமலனாதிப் பிரான் என்று தொடங்கும் பத்துப் பாசுரங்கள்

தாம் தீண்டப்படாதவரென்பதால் காவிரியின் தென்கரையிலிருந்தே திருவரங்கத்தானை வழிபட்ட இவரை நாள்தோறும் காவிரியிலிருந்து நீர் கொண்டு வரும் அர்ச்சகரது கனவில் தோன்றிப் பாணரைத் தோளில் சுமந்து அரங்கத்திற்கு வருமாறு பெருமாள் கூறினார்.

இதனால் திருப்பாணாழ்வார் திருமாலின் அழகைத் தினமும் கண்டு வியந்தார். இவர் பெருமையை அறிந்த லோக சாரங்க மாமுனிவர் இவரைத் தம் தோளில் தூக்கிச் சுமந்தார் என்பர்.

வீணையைக் கையில் கொண்டு இசை இன்பத்தோடு பாடுவார்.

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன் அணியரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே

**குலசேகர ஆழ்வார்**

இவர் பிறந்த ஊர் திருவஞ்சைக் களம். இவர் கொல்லிக் கோன் எனப்பட்டார். சேர மன்னன் மரபில் வந்தவர். காலம் கிபி 10ம் நூற்றாண்டு என்பர். இவர் இராமவதாரத்தில் பெரிதும் ஈடுபாடு உடையவர். இவர் அருளியது, பெருமாள் திருமொழி 105 பாடல்களைக் கொண்டது .

வித்துவக் கோட்டிறைவனைப் பாடும் போது தாய் அடித்தாலும் அந்தத் தாயை நோக்கியே ஓடும் சேய் போலத் திருமாலே நீயே எனக்குச் சரண் என்று பாடுகிறார்.

தருதுயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில் சூழ் வித்துவக் கோட்டு அம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவர்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவே போன்று இருந்தேனே

என்று பாடுகிறார்.

இவர் அரச வாழ்வைத் துறந்தார். திருவேங்கடத்தில் பறவையாக, ஆறாக, மீனாக மாறி படியாகக் கிடந்தாலும் உன் அருளைப் பெற வேண்டும். அதுவே நான் பெரும் பேறு என்றெல்லாம் பாடுகிறார்.

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே

என்கிற பாடலில் குலசேகர ஆழ்வார் திருவேங்கடமலைச் சுனையில் மீனாகப் பிறக்கும் விதி கிடைத்தால் நன்று என்று எண்ணுவதைக் காண முடிகிறது. மேலும் திருவேங்கடமலையில் ஒரு கானாறாக, ஒரு பாதையாக, ஒரு படியாக அல்லது ஏதேனும் ஒன்றாக ஆக ஆசைப்படுகிறார் அவர்.

**தொண்டரடிப் பொடியாழ்வார்**

இயற்பெயர் - விப்ர நாராயணர்

குலம் - அந்தணர்

பாடியவை - திருமாலை, திருப்பள்ளி எழுச்சி

காலம் - திருமங்கையாழ்வார் காலம்

திருமாலின் புகழ்பாடும் அடியவராக இருப்பதால் தம் பெயரைத் தொண்டரடித் பொடியாழ்வார் என மாற்றிக் கொண்டார்.

இவர் திருவரங்கப் பெருமானை உளமாரப் பாடிய பாக்கள் நெஞ்சை உருக்குவன

பச்சை மாமலை போல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே; என்னும்
இச்சுவைதவிர யான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே

என்று திருமாலை மனம் உருகிப் பாடி திருமாலின் கருணை ஒன்றையே இவர் வேண்டி நிற்பதைக் காணமுடிகிறது.

**தாயுமானவர்**

காலம் 1705 - 1742
ஊர் - தஞ்சை, திருமறைக்காடு
மதம் - சைவம்
குலம் - சைவ வேளாளர்
பெற்றோர் - கேடிலியப்பப் பிள்ளை., கசவல்லி அம்மையார்
மனைவி - மட்டுவார் குழலி
துறவு நெறி - 1736
பாடல்கள் - தாயுமானவ சுவாமி பாடல்கள்
பணி - விசயரங்க சொக்கநாதரிடம் அமைச்சராகப் பணியாற்றியவர்.

எம்மதத்தவரும் போற்றும் படியாகப் பாடல்களை எழுதியுள்ளார். இவரது பாடல்கள் இராமலிங்க வள்ளலாரின் திரு அருட்பாவை நினைவுப்படுத்துகின்றன.

மானிடப் பிறவியின் பயன் இறைவனைப் பற்றி பிடிக்கவே என்கிறார்.

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?
ஏது வருமோ அறிகிலேனே

தாயுமானவ்ரின் பாடல்கள் கூட குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களுக்கு வழிவகுத்தன எனக் கூறலாம். சில நிலைகளில் புறப்பூசைகள் தேவையா என்பதனை நீள நினைந்து சிந்திக்கின்றனர்.

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்
அன்பே மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே
அன்பர் பாரி செய்யவெனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே உந்தெய்தும் பராபரமே
எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே

என்பது போன்ற பாடல்கள் தாயுமானவரின் தூய உள்ளத்தையும், உயர்ந்த சமய உண்மைகளையும் காட்டுவனவாக அமைந்துள்ளன.

திருச்சிராப்பள்ளியில் மௌன குருவிடம் உபதேசம் பெற்றவர் இவர். வடமொழிப் புலமை மிக்கவர். சித்தாந்தக் கருத்துக்களைத் தம்பாடல்களில் எளிமையாகக் கூறுகிறார் இவர். இவருடைய பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி முதலியனவும் ஆனந்தக் களிப்பு போன்றவையும் எளிமை மிக்கன. படித்து மகிழத்தக்கவை.

**இராமலிங்க சுவாமிகள்**

ஊர் - சிதம்பரத்தையடுத்த மருதூர்
51 வயதில் அருட்சோதியில் கலந்தார்
பெற்றோர் - இராமையாப் பிள்ளை, சின்னம்மையார்
உரைநடை நூல்கள் - மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம்

நூல்கள் - சிவநேச வெண்பா

பாடியவை 5818 பாடல்களையும் ஆறு முறைகள் தொகுத்து திருவருட்பா வெளியிட்டுள்ளனர். அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருண என்பது தான் இவர் கோட்பாடு

1. பக்திப் பாடல்களைக் கண்ணி, கும்மி, கீர்த்தனை முடிய பல்வேறு யாப்பு வடிவங்களைப் பாடினார்
2. இவர் சீர்திருத்த நோக்கமுடையவர்
3. மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் மனதைப் பறிகொடுத்தவர்.
4. தூய உள்ளத்தோடு, எளிய வாழ்க்கை மேற்கொண்டார் இவர்.
5. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்கிற பேதமில்லாமல சமரச நோக்கமுடையவர் இவர்.
6. ஏழைகள்பால் இரக்கம் கொண்டு வாழ்ந்தார். சிறிய புல் பூண்டுகளிடம் கூட இரக்கம் காட்டியவர் என்பதை

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்.' என்கிற இவருடைய வார்த்தைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்க் கெல்லாம் நானன்பு செயல் வேண்டும்

வள்ளலார் தம்முடைய இறுதி காலத்தில் சத்திய தரும சாலையையும், சத்திய ஞான சபையையும் நிறுவினார்.

சரியை, கிரியை, ஞானம் ஆகிய மூன்றையும் ஒன்றாகக் கொண்டு வாழ்வின் தத்துவமாகக் கொண்டார்.

உருவ வழிபாட்டை விடுத்தார். ஒளி வழிபாட்டை ஏற்றுக் கொண்டார். இறைவனைப் பற்றிய பாடல்களே சிறந்த பாடல்கள் என்றார்.

அம்பலப்பாட்டே அருட்பாட்டு
அல்லாதார் பாட்டெல்லாம் மருட்பாட்டு
நடராசர் பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு

இவருடைய திருவருட்பா, அருட்பா சுமந்த தெருட்பா அமுதம் திருவருளைப் பெற துணை நிற்பது.

எத்துணையும் பேதமில்லாமல் எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் எண்ணி ஒத்த உரிமை பாராட்டி மகிழ்ச்சியோடு யார் வாழ்கின்றார்களோ அவர்கள் உள்ளத்தில் இறைவன் வாழ்கிறான்.

எத்தகைய மனிதர்களின் நட்புறவினைக் கொள்ள வேண்டும் என்பதை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்.
உறவு கலவாமை வேண்டும்

என்கிற பாடல் மூலம் இவர் உணர்த்தியுள்ளார்.

**சித்தர்கள்**

சித்து என்றாலே ஞானம், அறிவு எனப் பொருள்படுகிறது. எனவே சித்தர்கள் நுண்மையான அறிவு, மெய்யறிவு படைத்தவர்களாகத் திகழ்ந்தனர். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள் இவர்கள். மூடநம்பிக்கைகளுக்கு இடம் தராதவர்கள் சித்த மருத்துவத்தின் தன்மையை உலகிற்குக் கூறியுள்ளார்கள். மருந்து, மந்திரம், யோகம் மூன்றிலும் வல்லவர்கள்.

பக்தர்கள் இறைவனை ஆலயத்தில் கண்டு வழிபட்டனர். சித்தர்கள் தன்னுள்ளேயே இறைவனைக் கண்டு அனுபவித்தார்கள். சித்தர்கள் செய்தது அகநிலை வழிபாடு. பதினெட்டுச் சித்தர்கள் இருந்தனர்.

**திருமூலர்**

கூடுவிட்டுக் கூடு பாயும் திறன் உடையவர்கள் சித்தர்கள் எனவே திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்தார் எனக் கூறப்படுகிறது. முதற்சித்தர் திருமூலர் என்றழைக்கப்படுகிறார். இவரது பாடல்களில் உலக நிலையாமை மூடநம்பிக்கை ஒழிப்பு சடங்குகளை வெறுத்தல் எனப் புரட்சி மிகுந்த கருத்துக்கள் காட்டப்படுகின்றன.

தத்துவ நுணுக்கங்களைக் குறியீடுகள் கொண்டே பாடுவது இவரது தன்மையாகத் தோன்றுகிறது ஒன்று, இரண்டு போன்ற எண்களையும், பதி, பசு, பாசம் போன்ற தத்துவச் சொற்களையும் பயன்படுத்திப் பாட்டுக்களைத் தந்தவர். கர்மா, பக்தி, ஞானம், யோகம் என்ற நான்கினையும் திருமந்திரம் விளக்கிக் கூறுகிறது. திருமூலரின் தத்துவக் கோட்பாட்டினைச் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையில் காணமுடிகிறது.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உலகளாவிய கோட்பாடு உயர்ந்த கோட்பாடு ஆகும்.

**பதினெண் சித்தர்கள்**

1. திருமூலர் 2. இராமதேவர் 3. கும்பமுனி (அகத்தியர்) 4. இடைக்காடர் 5. தன்வந்திரி 6. வான்மிகி 7. கமலமுனி 8. போகநாதர் 9. மச்சமுனி 10. கொங்கணர் 11. பதஞ்சலி 12. நந்தி தேவர் 13. போதகுரு 14. பாம்பாட்டிச் சித்தர் 15. சட்டைமுனி 16. குதம்பைச் சித்தர் 17. கோரக்கர் 18. சுத்தரானந்தத் தேவர்.

**எண்வகைச் சித்திகள்**

இவர்கள் கையாண்ட சித்திகள் அட்டமா சித்தி என அழைக்கப்பட்டது.

அணுவைவிடச் சிறிய ஆற்றலை அணிமா சித்தி
மலையை விடப்பெரிய ஆற்றலை மகிமா சித்தி
நீரிலோ நிலத்திலோ, உடம்பைக்காற்று போல ஆக்கிக்
கொள்ளும் முறை லகிமா, மனதால் நினைத்ததை
அடைய முடியும் என்ற வல்லமையைப் பிராத்தி

என்றழைத்தனர்.

சித்தர்கள் மோன நிலையில் மூழ்கி தியானம் பெற்றனர். குண்டலினி சக்தியை எழுப்புதல் போன்றவற்றில் இவர்கள் பயிற்சி பெற்றனர். இதனால் மரணமில்லா வாழ்வு பெறலாம் என இவர்கள் நம்பினர்.

**சித்தர் பாடல்கள் சில**

மனதை அடக்கினால் எளிதில் முக்தி கிடைக்கும் என்பதை

மனம் என்னும் மாடு அடங்கில்
தாண்டவக் கோனே! முத்தி
வாய்ந்ததென்று எண்ணேடா
தாண்டவக் கோனே
சினம் என்னும் பாம்பு இறந்தால்
தாண்டவக் கோனே! யாவும்
சித்த என்றே நினையேடா
தாண்டவக் கோனே!

என்றும்

நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி

என்றும் பாடுகிறார்கள் சித்தர்கள்

நட்ட கல்லைத் தெய்வமென்று
நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றி வந்து மொணமொணென்று
சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமா
நாதன் இருக்கையில் உள்ளி
சுட்ட சட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ?

என்று உருவ வழிபாட்டினைச் சாடுகிறார்கள் சித்தர்கள்.

**பட்டினத்தார்**

ஊர் - காவிரிப்பூம்பட்டிணம்

குலம் - வணிகர் குலத்தில் தோன்றியவர்

காலம் - கிபி 11ம் நூற்றாண்டு என்பர்

இயற்பெயர் - திருவெண்காடர்

வாழ்க்கையை வெறுத்துத் துறவுபூண்டார்

நூல்கள் - கோயில நான்மணிமாலை, திருக்கழுகுமாலை, மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, திருவொற்றியூர் ஒருபா ஒரு ப.்.து

ஆரம்ப காலத்தில் ஆலய வழிபாட்டினையும் உருவ வழிபாட்டினையும் இவர் வெறுத்தார் பின்பு கோயில் கோயிலாகச் சென்று வணங்கினார். கச்சி ஏகம்பனைப் போற்றுகிறார்.

காதம் காரணங்களும் அற்ற காட்சியிலே
ஏதம் களைந்திருப் பேன்இறைவா கச்சிஏகம்பனே
செம்மை மனத்திலும் தில்லைமன்றிலும் நடம்
ஆடும் அம்பலவாண

இவருடைய பாடல்கள் சைவத் திருமுறையில் 11ம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

**பத்திரகிரியார்.**

துளுவநாட்டு மன்னர் மனதில் தோன்றியதைப் பாடுவார். தத்துவக் கருத்துக்களைக் கொண்டு தமது பாடல்களைப் பாடினார்.

**பாம்பாட்டிச் சித்தர்**

ஆன்மாவைப் பாம்பாக உருவகம் செய்து பாடியதால் பாம்பாட்டிச் சித்தர் எனப் பெயர் பெற்றார். பஞ்ச பூதங்களை வெல்வோம். புது உல்கம் படைப்போம் என்கிறார். உருவ வழிபாட்டினை வெறுக்கிறார்.

உளியாட்ட கல்சிலையில் உண்டோ உணர்ச்சி
உலகத்தின் மூடர்களுக்கு உண்டோ உணர்ச்சி

**இடைக்காட்டுச் சித்தர்**

கைவிளக்குக் கொண்டு கடலில் வீழ்வார்போல
மெய்விளக்கு உன்னுள் இருக்க வீழ்குவதேன் புல்லறிவே

**அகப்பேய் சித்தர்**

மனதை பேயாக உருவகம் செய்து அவனுக்கு அறிவுரை கூறுவது போல இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன.

தன்னை அறிய வோறும் - அகப்பேய்
சாராமல் சார வேணும்
பின்னை அறிவது எலாம் - அக்பேய்
பேயறிவு ஆகுமடி

**குதம்பைச் சித்தர்**

பேரின்பமே பெரும் லட்சியம் என்கிறார்.

ஆனந்தம் பொங்கி அறிவோடு இருப்பார்க்கு
ஞானத்தான் ஏதுக்கடி குதம்பாய்
ஞானந்தான் ஏதுக்கடி

**அழகுணிச் சித்தர்**

இவருடைய பாடல்கள் இரங்கி வருந்திப் பாடுகின்ற தன்மை உடையதாக இருக்கும் சக்தியைக் கண்ணம்மா என்று இவர் உருவகிக்கிறார்.

அஞ்சாத கள்ளனடி அருமற்ற பாவியடி
நெஞ்சாரப் பொய்சொல்லும் நேயமில்லா நிட்டுரன்
கஞ்சா வெறியவடி சைச்சதம் ஆகுமுன்னே
அஞ்சாதே என்று சொல்லி என்கண்ணம்மா
அண்டியிருந்தால் ஆகாதோ

என்றும்,

உற்றாரும் சதமல்ல, ஊராரும் சதமல்ல

என்றும் பாடுகிறார் இவர்.

மனையாளும் மக்களும் வாழ்வும் தனமும் வாயில் மட்டே
இனமான சுற்றமும் மயானம் மட்டே வழிக்கேது
சுத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழியம்பொழுது
மெத்திய மாதரும் வீதிமட்டே

என்கிற சித்தர் பாடலைக் கவியரசு கண்ணதாசனின்

வீடுவரை உறவு வீதி வரை மனைவி
காடுவரை பிள்ளை கடைசி வரை யாரோ?

என்று நிலையாமையை எடுத்து விளக்கும் பாடலோடு ஒப்பிட்டுக் காணலாம்.

## பயிற்சி வினாக்கள்

1. அற இலக்கியங்கள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக
2. திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் குறித்து விளக்குக
3. நாலடியார் பற்றிக் குறிப்பு வரைக
4. பதினென் கீழ்கணக்கு நூல்களில் நீதி நூல்கள் பற்றி விவரி.
5. பதினென் கீழ்கணக்கிலுள்ள அகநூல்கள் பற்றி விளக்குக
6. பதினென் கீழ்கணக்கிலுள்ள புறநூல்கள் பற்றி குறிப்பு வரைக
7. ஔவையாரின் ஆத்திசூடி கொன்றை வேந்தன் பற்றி விளக்கு
8. காப்பிய இலக்கியங்கள் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக
9. சிலம்பும் மேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்றழைக்கப்படக் காரணங்கள் யாவை?
10. சிலப்பதிகாரம் தமிழ் இலக்கியத்தில் பெருமையுடன் திகழ்நிலை ஆராய்க
11. ஐம்பெருங்காப்பியங்கள் பற்றி விளக்கம் தருக
12. ஐஞ்சிறு காப்பியங்கள் பற்றி குறிப்பு தருக
13. கம்பஇராமாயணத்தின் சிறப்பினை விளக்குக
14. கம்பனின் கவித்திறனைக் கம்பராமாயணம் வழி நின்று விளக்கு
15. பெரியபுராணம் ஒரு சைவக் காப்பியம் என்பதை நிறுவுக
16. இயேசு காவியம் பற்றி விளக்குக
17. பன்னிரு திருமுறைகள் பற்றி எழுதுக
18. பன்னிரு ஆழ்வார்கள் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக
19. ஆண்டாள், பெரியாழ்வார் ஆகியோரின் பக்திச் சிறப்பினை விளக்கு
20. வைணவ இலக்கியங்கள் - பற்றி எழுதுக
21. நம்மாழ்வார் பற்றி குறிப்பு வரைக
22. தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் பற்றிக் குறிப்பு எழுதுக
23. சித்தர்கள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக

# அலகு 3

## சிற்றிலக்கியம்

சங்ககால இலக்கியம், இடைக்கால இலக்கியம் தற்கால இலக்கியம் என்று கால அடிப்படையிலும் அக இலக்கியம், புற இலக்கியம் என்று மனித உணர்வு அடிப்படையிலும் பக்தி இலக்கியம் சமுதாய இலக்கியம் என்று நோக்கி அடிப்படையிலும் இவை போன்று பல்வேறு கூறுகளாக இலக்கியங்கள பகுக்கப் பெறுகின்றன. இப்பகுப்பு முறைகளில் ஒன்றுதான் இலக்கியத்தைப் பேரிலக்கியம் என்றும் சிற்றிலக்கியம் என்றும் வகைப்படுத்தும் முறையாகும்.

### பிரபந்தங்கள்

சிற்றிலக்கியங்களை வடமொழியில் பிரபந்தங்கள் என்பர். தமிழ்க் காப்பியங்கள், புராணங்கள், சிறு நூல்கள் போன்ற அனைத்தும் இணைந்த தொகையே பிரபந்தங்கள் என்கின்றன. பாட்டியல் நூல்கள் பிரபந்தங்கள் என்னும் சொல்லுக்குப் பதில் சிற்றிலக்கியங்கள் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பெற்றது. பிரபந்தம் என்பது வடசொல். இதன் பொருள் நன்றாக யாக்கப்பட்டது. நன்கு கட்டப்பட்டது என்பதாகும்.

### சிற்றிலக்கியத்தின் இலக்கணம்

டாக்டர் தமிழண்ணல் அவர்கள் சிற்றிலக்கியக் கட்டமைப்பு பற்றி விளக்குகிறார். அதில் சிற்றிலக்கிய நூல்கள் நெடும் பாட்டு போல்வன. முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேலன. பலதுறை சார்ந்த பெருநூல்கள் போலல்லாது ஒரு சில துறைகளைப் பற்றிய செய்திகளையே உள்ளடக்கின. சுருங்கிய அமைப்பில் அமைவன. வச்சணந்திமாலை, பன்னிரு பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலியன இவற்றில் பெரும்பான்மையான நூல்களைப் பற்றி விளக்கம் தருகின்றன. பிரபந்த மரபியலில் 96 நூல்களும் கூறப்பட்டுள்ளன. 1732 ல் செய்யப்பட்ட சதுரகராதி 96 நூல்களுக்கும் விளக்கம் கூறுகிறது என்கிறார் தமிழண்ணல். சிற்றிலக்கியம் காப்பியரின் விருந்து வகை சார்ந்ததென்பது புலனாகிறது. இலக்கியம் உணர்த்தும் உறுதிப் பொருட்கள் நான்கு. அவை, அறம், பொருள், இன்பம் வீடு ஆகியவை இந்நான்கு உறுதிப் பொருட்களில் ஒன்று குறைந்தோ அல்லது ஒன்றுக்கு அதிகமாகக் குறைந்து வந்தாலோ அவ்விலக்கியத்தைச் சிற்றிலக்கியம் என்பர் நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் சிறப்பாக வளர்ச்சி பெற்றன.

இறைவன் இறைவி குறுநில மன்னர்கள் குறுநிலத் தலைவர்கள் வள்ளல்கள் போன்றவர்களின் புகழ்பாடுவதற்குத் தோன்றியது. பாட்டுடைத் தலைவனின் வரலாறு கொடைப் பண்பு, வீரம், வெற்றி ஆகியவற்றைப் புகழ்ந்து போற்றும் மரபு கொண்டவை சிற்றிலக்கியங்கள் என்கிறார் தமிழண்ணல். (புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு ப. 264)

### சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

பழையன கழிதலும், புதியன புகுதலும் இலக்கியம் முதல் பண்பாடு. வாழ்க்கை முறை வரை நிலவும் நியதியே. சிற்றிலக்கியங்களும் சங்ககாலந்தொட்டு பல்வேறு வகை தொகைகளாக உருவங்கள் மாறி வளர்ந்து வருகின்றன முனைவர் வீ. செயராம சிற்றிலக்கியச் செல்வம் என்னும் நூலில்

தொல்காப்பியர் காலத்தில் இடம் பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாக துளிர்த்து ஏழாம் நூற்றாண்டில் உலவாக மரமாகி 9ம் நூற்றாண்டில் கலம்பமாகக் கிளைத்து 11ம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழ் மொட்டாகி 14ம் நூற்றாண்டில் பள்ளாக் காய்த்து 18ம் நூற்றாண்டில் குறவஞ்சியானது என்று சிற்றிலக்கியங்களின் வளர்ச்சி பற்றி நிரல்படக் குறிப்பிடுகிறார்.

### சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை

சிற்றிலக்கியங்கள் எத்தனை என்பது பற்றி ஒருமித்த கருத்து எட்டப்பட வில்லை சதுரகராதி நூல்களுக்கு விளக்கும் கூறுகிறது.

பன்னிரு பாட்டியல் 62 இலக்கிய வகைகளையும்

வெண்பா பாட்டியல் 55 இலக்கிய வகைகளையும்

நவநீத பாட்டியல் 45 இலக்கிய வகைகளையும்

சிதம்பரப் பாட்டியல் 59 இலக்கிய வகைகளையும்
இலக்கண விளக்கப் பாட்டியல் 64 இலக்கிய வகைகளையும்
முத்து வீரியம் 90 இலக்கிய வகைகளையும்
தொனூல் விளக்கம் 96 இலக்கிய வகைகளையும்

குறிப்பிடுவதை அறியலாம். "பிரபந்த திரட்டில் 106 வகைகள் உள்ளன. மொத்தத்தையும் இணைத்துப் பார்க்கும் போது 201 வகைகள் உள்ளன." என்கிறார் ச. வே. சுப்பிரமணியன்.

**சிற்றிலக்கியங்கள் 96**

1. அங்க மாலை 2. அட்டமங்களம் எனும் நூல்களில் தொடங்கி 95 வெற்றிக் கரந்தை மஞ்சரி 96 வேனில் மாலை எனும் நூல்களில் முடிவடைகிறது. இத்தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களில் ஆற்றுப்படை அந்தாதி, மாலை, பதிகம், கோவை, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், குறம், குறவஞ்சி, பள்ளு போன்றவை சிறந்தவைகளாகக் கருதப்படுகின்றன.

**ஆற்றுப்படை**

வறியவன், வள்ளலை நாடிப் பொருள் பெற்று வரும் போது. வழியில் அவனை எதிர்ப்பட்ட மற்றொரு வறியவனின் துயர் துடைக்கத் தனக்குப் பொருள் தந்த வள்ளலிடம் செல்ல வழி காட்டுவதே. ஆற்றுப் படுத்துவதே ஆற்றுப் படையாகும்.

ஆறு-வழி. படை-படுத்துதல் வழிப்படுத்துதல் என்பது பொருள்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு. அறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" எனும் தொல்காப்பிய நூற்பா ஆற்றுப் படைக்கு இலக்கணம் கூறுகிறது.

பத்துப்பாட்டு நூல்களில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை போன்ற ஆற்றுப்படை நூல்கள் இடம்பெறுகின்றன. பிற்காலத்தில் தணிகையாற்றுப்படை போன்ற ஆற்றுப்படை நூல்களுமே தோன்றின.

**அந்தாதி**

அந்தம்-இறுதி, ஆதி- தொடக்கம். ஒரு பாட்டின் அந்தம் (இறுதி) அடுத்த பாடலின் ஆதியாக (முதலாக) வருவது அந்தாதி. ஒரு பாடலின் கடைசியில் உள்ள எழுத்து, அசை ,சீர், அடி இவற்றுள் ஏதேனும் ஒன்று அடுத்த பாடலின் முதலில் வருமாறு அமைந்திருப்பது அந்தாதியாகும்.

இறுதிப்பாடலின் முடிவு, அப்பாடல் தொகுதியின் முதற் பாடலின் ஆரம்பமாக அமையுமாறு யாப்பது மண்டலித்து முடிவது " என்பர். அந்தாதியின் வடிவம் பெரும்பாலும் விருத்தமாகவே அமைகிற தெனலாம். அந்தாதி இலக்கியத்தின் தொடக்கமாக அமைவது காரைக்காலம்மையாரின் "அற்புதத் திருவந்தாதி " பதிற்றுப் பத்தில் நான்காம் பத்தியிலுள்ள பாடல்கள் அடியந்தாதியாகவும், ஐங்குறு நூற்றில் தொண்டிப் பத்துப்பாடல்கள் சொல்லந்தாதியாகவும் அமைந்துள்ளன. பிற்கால இலக்கிய வரிசையில், அபிராமிப்பட்டர் இயற்றிய "அபிராமி அந்தாதி" குறிப்பிடத்தக்கதாகும். மிகுதியான அந்தாதிகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (18) பாடியுள்ளார்.

**மாலை**

பாடல்களை மாலையாக்கிப் பாடி மகிழ்வது மாலை.

இச்சிற்றிலக்கிய நூலில் பொதுவாக இருபது பாடல்கள் இடம்பெறும். இரட்டை மணிமாலை. மும்மணிக் கோவை, மும்மணி மாலை, நான்மணி மாலை போன்றவை மாலை இலக்கியங்களாகும். இரட்டை மணி மாலையில் வெண்பாவும் கலித்துறையும் ஆகிய இரு பாடல்கள் மாறி மாறி வரும் யாப்பு முறை அமையும்.

மும்மணிக் கோவையில், வெண்பா, கலித்துறை, ஆசிரியப்பா ஆகிய மூன்று வகைப் பாவினமும் மாறி மாறி வரும் முப்பது பாடல்கள் இடம்பெறும்.

நான்மணி மாலையில் நாற்பது பாடல்கள் இடம்பெறும். வெண்பா, ஆசிரியம், விருத்தம்,

கலித்துறை ஆகிய நால்வகைப் பாவினங்கள் மாறி, மாறி வரும்.

காலைக்காலம்மையார் பாடிய "திருவிரட்டை மணி மாலை" காலத்தால் மூத்த மாலைச் சிற்றிலக்கியமாகும்.

**பத்து அல்லது பதிகம்**

பத்து அல்லது பதிகம் என்னும் சிற்றிலக்கியம் பத்துப் பாடல்களைக் கொண்டது. எண்ணிக்கையில் அதிகமாகவோ, குறைவாகவோ வந்தாலும் பதிகம் என்றே அழைக்கப்படுகிறது. பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகியவற்றில் பத்துப்பத்தாகப் பாடல்கள் அமைந்ததைக் காணலாம்.

திருவாசகத்தில் தெய்யோப் பத்து , அச்சோப் பத்து ஆகியவை இவ்வகையைச் சேர்ந்தவை.

**கோவை**

அகப்பாடல் வகையைச் சார்ந்தது. கட்டளைக் கலித்துறை யாப்பில் ஆக்கப்பெறும் களவு, கற்பு சார்ந்த பாடல்கள் கோவையில் இடம்பெறும். பாடல்கள் கோர்வையாகச் சங்கிலித் தொடர் போன்று, வரிசைப்படுத்தி ஒன்றன்பின் ஒன்றாக பாடும் யாப்பமைதி பிற்காலத்தில் காணப்படுகிறது. நிகழ்ச்சியமைப்பு, கதை நிகழ்வு போல் காணப்படும். கி.பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டில் நின்ற சீர் நெடுமாறன் மீது முந்நூற்றைம்பது பாடல்களைக் கொண்ட பாண்டிக் கோவை நூல் பாடப்பெற்றது. கோவை நூற்களில் சிறந்தது. மாணிக்கவாசகரின் "திருக்கோவையார்". அதன் சிறப்புக் காரணமாக இந்நூல் "இராசாக் கோவை" என்று பாராட்டப் பெறுகின்றது.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் பொய்யாமொழிப் புலவர் பாடிய "தஞ்சை வாணன் கோவை" மணிவாசகரின் திருக்கோவையார்க்குப் பின்பு புகழ்பெற்ற கோவை நூலாகும். இதுவரை எழுபது கோவைகள தோன்றிக் கோவையின் பரப்பை விரிவாக்கம் செய்துள்ளன.

**உலா**

"ஊரொடு தோற்றமும் உரித்தன மொழிப..." எனும் தொல்காப்பிய நூற்பா உலா இலக்கியத்தைக் குறிப்பிடுகிறதென்கின்றனர் உரையாசிரியர்கள்.

விழாக்காலத்தில் வீதி உலா வரும் இறைவனைக் கண்டு தேவரடியார்கள் மயங்குவதாகப்பாடுவது உலா. அரசன் ஊர்வலம் வரும்போது பேதை. பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவ மங்கையினரும் காமுற்ற நிலையைப் பாடுவதும் உலா இலக்கியமாகிறது. உலாவின் கூறுகள் முத்தொள்ளாயிரத்து மிகுதியாகப் காணப்படுகின்றன. உலாவின் பாட்டுடைத் தலைவன் இறைவன் அல்லது மன்னன்.

உலாநூல்களில் முதல் உலாவாக அமைவது, அசரமான் பெருமாள் நாயனார்பாடிய "திருக்கயிலாய ஞானஉலா". இது இறைவயின் மாட்சியையும் திருக்கோயிலின் எழிலையும் எடுத்துரைக்கிறது. இது "ஆதிஉலா" என்றழைக்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் மீது பாடப்பெற்ற " "ஆளுடைப்பிள்ளையார் திருஉலா மாலை, ஒட்டக்கூத்தரின் "மூவருலா" ஆகியவை உலா இலக்கியத்துக்கு எழில் சேர்ப்பவை. மூவருலாவில் விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசராச சோழன் ஆகிய மூன்று சோழ மன்னர்களும் பாட்டுடைத் தலைவர்களாக உள்ளனர். "இதுவரை தமிழுக்குக் கிடைத்த உலாக்கள் அறுபத்தொன்பது" என்கிறார் ந.வீ. செயராமன்.

**பரணி**

போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று, வென்ற மன்னனின் ஆற்றலைப் போற்றும் போர்க்கள வெற்றிப் பாடலே பரணியாகும். போரில் வெற்றி தரும் கொற்றவை. காளிக்கு விழா எடுப்பதை வருணிக்கும் பாடல்களை கொண்டது பரணி.

ஒட்டக்கூத்தரின் "தக்கயாகப்பரணி" புராணத் தொடர்புடையது. பரணி நூற்கள் பதினேழு என்பர். பதினேழாம் நூற்றாண்டில் வைத்தியநாத தேசிகர். "பாசவதைப் பரணி" பாடினார். தமிழில் இன்று கிடைக்கும் பரணி நூல்களில் சிறந்தது கலிங்கத்துப்பரணி.

"வாய்மடித்துக் கிடந்ததலை மகனை நோக்கி
மணி அதரத்(து) ஏதேனும் வடுஉண் டாயோ
நீ மடித்துக் கிடந்ததெனப் புலவி கூர்ந்து
நின்றாவி சோர்வாளைக் காண்மின் காண்மின்"

என்று கலிங்கத்துப் பரணியில் போர்க்களத்தில் மாற்றான் வேலால் மடிந்து கிடக்கும் வீரனைக் கண்ட தலைவி, ஊடல் கொள்கிறாள். உதட்டில் காயம் பட்டதால் தலைவி தெரிந்து கொள்ளக்கூடாது என நினைத்த தலைவன் உதட்டைக் கடித்து வாய் மடித்துக் கிடக்கிறான் என்பது அந்தப் பேதையில் எண்ணம். இது ஒரு பெண்ணின் நிலை. கலிங்க வீரனின் வேலால் குத்துண்டு, வேலில் மார்பைப் பதித்துப் கம்பூன்றி நிற்பது போல் நிற்கிற கணவனைக் கண்ட அவன் மனைவி, தன் கணவன் தரையில் விழாமல் தாங்கி நிற்கிறாள். அவள் நிலையையும் நினைப்பையும் செயங்கொண்டார்,

"தரைமகள் தன் கொழுநன்தன் உடலம் தன்னைத்
தாங்காமல் தன் உடலால் தாங்கி விண்நாட்(டு)
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவிஞக்க விடுவாளைக் காண்மின் காண்மின்"

எனும் பாடலால் விளக்கக் காண்கிறோம்.

தரையில் விழுந்தால், அவனைப் பூமாதேவி எனும் பெண் தழுவுவாள். அதனால் அவன் தரையில் விழாமல் தாங்கிக் கொண்டாள். வீரன் இறந்து, வீரமரணமெய்தினால், விண்ணாட்டு மகளிர் விரும்பி இவனை உரிமையாக்குவர். எனவே அவன் இறக்கும் முன்பு தன் உயிரைப் போக்கிக் கொண்டு சொர்க்கத்தில் அவனை வரவேற்க எண்ணி அவள் உயிர் விட்ட நிலையையும் கலிங்கத்துப் பரணி காட்டுகிறது.

காலத்தாலும் கவிதை நயத்தாலும் முன் நிற்பது செயங்கொண்டார் பாடிய "கலிங்கத்துப் பரணி" யே. கலிங்க நாட்டு மன்னன், அனந்த வர்ம சோட கங்கனைச் சோழ மன்னன் முதலாம் குரோத்துங்கனின் தளபதி கருணாகரத் தொண்டைமான் வென்றான். இவ்வெற்றியைப் பாராட்டிச் செயங்கொண்டார் பரணியாத்தார். பரணியின் சிறப்பால், செயங்கொண்டாரும் - "பரணிக்கோர் சயங்கொண்டார்" என்று பாராட்டப்பட்டார்.

**கலம்பகம்**

கலம்பகம்,, கதம்கம் இவை பொருளால் தொடர்புடையன. பல்வேறு மண், நிற மலர்களால் எழில் மிளிரத் தொகுக்கப் பெறுவது கதம்பம். அதுபோல் பல்வேறு பாடல் வகைகளால், புனையப் பெறுவது கலம்பகம்.

கலம்பகம் எனப் பிரித்துக் கலமும் (12) பகம், கலத்தில் பாதி(6) இவற்றின் கூட்டுத் தொகை 12+6=18 உறுப்புக்களைக் கொண்டது கலம்பகம் என்பர். கலப்பு + அகம் = கலம்பகம் என்றும் கூறுவர். ஆனால் சில கலம்பகங்களில் உறுப்புகளின் எண்ணிக்கை குறைந்தும் மிகுந்தும் காணப்பெறுகின்றன. எனவே பதினெட்டு உறுப்புகளைக் கொண்டது கலம்பகமென்று அறுதியிட்டு உறுதி செய்தற்கில்லை.

கலம்பகத்தில் அமைய வேண்டிய பாடல்களில் எண்ணிக்கை பற்றி வெண்பாப் பாட்டியல் தெளிவாகக் கூறக் காண்கிறோம்.

தெய்வம் பற்றிய கலம்பகம் - 100 பாடல்கள்
முனிவர் பற்றிய கலம்பகம் - 95 பாடல்கள்
அரசர் பற்றிய கலம்பகம் - 90 பாடல்கள்
அமைச்சர் பற்றிய கலம்பகம் - 70 பாடல்கள்
வணிகள் பற்றிய கலம்பகம் - 50 பாடல்கள்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிப் புனையப் பெற்ற "நந்திக் கலம்பகம்" முதலாவது கலம்பகமாகும்.

நந்திவர்மனின் மாற்றாந்தாய் மகன், தான்கற்ற தமிழின் பேற்றால், அறம் பாடும் ஆற்றல் பெற்றான். இவ்வாற்றலால், நந்திவர்மனை அறம்பாடி அழித்த வரலாறே நந்திக் கலம்பகமானது. கலம்பகத்தின் இறுதிப் பாக்களால், நந்திவர்மன் தீக்கிரையாவான் என்பதை உணர்ந்திருந்தும் தமிழின் சுவைமாந்தியே இறக்கத் துணிந்தான் நந்திவர்மன்; உயிர் மீது ஆசை கொள்ளவில்லை ; தாய்த் தமிழ் மீதே ஆவல் கொண்டான் அவன். நந்திவர்மனைக் கொல்ல நினைத்த கொலைகாரப் புலவன், தமிழால் நந்திவர்மனைத் தீய்த்தான். தமிழ்த்தேன் மாந்தியே மாண்டான் மன்னன். தமிழ்ச்

சுவைக்காக உயிர்நீத்த ஒரு தமிழ் மன்னனையும், தமிழைக் கொலைக்குப் பயன்படுத்திய ஒரு தொழும்பனையும் நந்திக்கலம்பகம் வாயிலாகக் காண்கிறோம்.

சங்க இலக்கியங்களில் பாடப்பெறும் தலைவன், தலைவிப் பிரிவுத் துயர்போல், நந்திக் கலம்பகத்திலும் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயர்மிகச் சிறப்பாகச் சித்திரிக்கப்பெறுகிறது.

"மங்கையர்கள் புனல்பொழிய மழைபொழியுங் காலம்
மாரவேள் சிலை குளிக்க மயில்குளிக்கும் காயம்
அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக் காலம்
அவரொருவர் நாமொருவர் ஆனகொடுங் காலம்"

எனும் பாடல் மிகச்சிறந்த கவிதை நயத்துடனும் இன்பச்சுவையுடனும் திகழக் காண்கிறோம்.

நந்திவர்மன் மீது காமுற்ற ஒரு பெண், காமம் மிக்குற,

"செந்தழலின் சாற்றைப் பிழிந்து சேமுளுச்சித்
சந்தனமென்றுயாரோ தடவினார்- செந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மீது"

குளிர்மிகுந்த, மணமிக்க உயர்ந்த சந்தனமும் காமுற்ற பெண்ணுக்குச் செந்தீயின் சாறாகத் தோன்றும் எண்ணமானது காமத்தீயின் அளவைச் சுட்டுகிறது. அத்துடன் எரிகின்ற நெருப்பிலிருந்து சாறு பிழிகின்ற கவிஞனின் கவிதை ஆற்றலும் விளக்கம் பெறுகின்றது.

நம்பியாண்டார் நம்பியின் "ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகம்" இரட்டையர்களின் "மாத்தூர்க் கலம்பகம் ","கிள்ளைக் கலம்பகம்" ஆகிய இரட்டைக் கலம்பகங்கள் காணப்படுகின்றன. தமிழில் தொண்ணூற்று ஒன்பது கலம்பகங்கள் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன

**பிள்ளைத்தமிழ்**

பிள்ளைக்கவி பிள்ளைப்பாட்டு என்றும் இதனை அழைத்தனர். பெரியாழ்வாரின் கண்ணன் பாடல்கள் பிள்ளைத்தமிழுக்கு அடித்தளமாக அமைந்தன. பாராட்ட விரும்பும் இறைவனையோ, தலைவனையோ, குழந்தையாக்கி பத்துவகைப் பருவங்களில் கொஞ்சு தமிழில் நெஞ்சு நிறைய அந்தப் பிஞ்சுக் குழந்தையைப் பாடுவது பிள்ளைத்தமிழ் எனப்படும். பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு வகைப்படும். ஒவ்வொன்றும் பத்துப்பருவங்களை உடையது.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்ற பத்துப் பருவங்களைக் கொண்டது ஆண்பாற்பிள்ளைத்தமிழ். சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய கடைசி மூன்று பருவங்களுக்குப் பதிலாகக் கழங்கு, நீராடல், ஊசல் ஆகிய மூன்று பருவங்களும் இடம்பெற்றால் அது பெண்பாற் பிள்ளைத்தமிழ் ஆகிறது.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் பாடிய "இரண்டாம் குலோத்துங்கள் பிள்ளைத்தமிழ்" ஆகிய இரண்டும் சிறந்த பிள்ளைத்தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் ஆகும். அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் போன்ற பிள்ளைத்தமிழ் நூல்கள் உள்ளன. வைணவத்திலிருந்து சைவத்திற்குச் சென்ற பகழிக் கூத்தரின் "திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்" முருகனைக் குழந்தையாகக் கொண்டு போற்றி நிற்கிறது. தற்காலத்துப் பாரதிதாசன் பிள்ளைத்தமிழ், மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ் போன்றன வந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மட்டும் 76 பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றியுள்ளன. இன்று மொத்தத்தில் 120 பிள்ளைத்தமிழ் நூல்களுக்கு மேல் உள்ளன.

**தூது**

ஓரிடத்திலுள்ள ஒருவரின் கருத்தை மற்றோரிடத்திலிருக்கும் மற்றவர்க்குத் தெரிவிக்கும் கருத்துப் பரிமாற்றமே தூது. இது பற்றிக் கூறுவது தூது இலக்கியம்.

புள்வழித் தூது அனுப்புவது குறித்துக் குறுந்தொகை குறிப்பிடுகிறது.

ஒளவையாரை, அதியமான் தொண்டைமானிடம் தூதனுப்பினான். இது அரசியல் தூது. சுந்தரர், இறைவனைப் பரவையாரிடம் தூதனுப்பினார். பிசிராந்தையார் அன்னச் சேவலைக்

கோப்பெருஞ்சோழனிடம் தூது அனுப்புகின்றார். இது அன்புத்தூது.

தலைவனைப் பிரிந்து வாழும் அகப்பாடல் தலைவி அஃறிணை உயிர்களைத் தூதனுப்பினாள். சத்திமுற்றப் புலவர் தம் அவர் நிலையை மனைவியிடம் கூறச் செங்கால் நாரையைத் தூதுவிட்டார். வடமொழிக் கவிஞன் காளிதாசன், மேகத்தைத் தூதுவிட்டு மேக தூதம் படைத்தான். குறள், காப்பியங்கள் ஆகியவற்றில் அகத் தூது, புறத் தூது இரண்டும் உள்ளன. பாட்டியல் நூல்கள் தூதிலக்கணத்தைக் கூறுகின்றன.

கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் உமாபதி சிவாச்சாரியார் பாடிய "நெஞ்சுவிடு தூது" தூதிலக்கியத்தில் முதலாவது நூலாகும்.

அன்னம், மயில், கிளி, மேகம், பூனை, குயில்,தோழி,நெஞ்சு, தென்றல், வண்டு ஆகிய பத்துமே தூது செல்லும் தகுதி பெற்றன என்பதை,

"இயம்புகின்ற காலத்தில் எகின மயில்கிள்ளை" எனத் தொடங்கும் பாடல் உணர்த்துகிறது. பலபட்டடைச் சொக்கநாதப் புலவரின், "அழகர் கிள்ளைவிடு தூது" ,கூளப்ப நாயக்கரின் "விறலி வியயட தூது", "தமிழ்விடு தூது" போன்று அறுபது தூது நூல்கள் உள்ளன என்பர்.

**பள்ளு**

பள்ளர் மகளிர் பாடல்கள் "உழத்தியர் பாட்டு" என உயர்த்தி உரைக்கப்பெற்ற சிறப்பு வாய்ந்ததாகும். இப்பாட்டே பிற்காலத்தில் பள்ளுப் பாடலாக மலர்ந்தது. பள்ளு என்பது பள்ளர்தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் புனைந்து தாயாகச் சுட்டியொருவர் பெயர் கொளப் பெறாத தாய்ப் பாடப்பெறுவது.

கொச்சகக் கலிப்பா, விருத்தம், சிந்து போன்றவைகளால் அமைந்தது பள்ளு. பள்ளுப் பாடல்கள் இசைப் பாடல்களாகப் பாடுதற்கும் நாடகமாக நடித்தற்கும் ஏற்ற அமைப்பு உடையன. இத்தகைய பள்ளு நூல்கள் பல. "கிடைப்பனவற்றுள் முதல் பள்ளாக, கமலை ஞானப் பிரகாசரால் இயற்றப்பட்ட திருவாரூர்ப் பள்ளாக இருக்கலாம் என்பது பொதுக் கருத்து" என்கிறார் ஏ.என். பெருமாள் "பள்ளு."

முடிமன்னராட்சி முடிவுக்கு வந்த பின்பு, தமிழைப் பாடுவாரும், பாடுவோரைப் பாதுகாப்பாரும் அற்ற நிலை உருவானது. பழைய இலக்கிய மரபுகள் மாறிச் சிற்றிலக்கியம் தோன்றலாயிற்று. திணை நிலைவரிப் பாடல்களாகக் குறிஞ்சி நிலத்தைப் பற்றிக் குறவஞ்சியும் மருத நிலத்தைப் பற்றிப் பள்ளும் தோன்றின. ஏனைய மூன்று நிலங்களிலும் இவ்வாறு திணை நூற்கள் தோன்றவில்லை என்பர் இந்நிலையை உணர்த்துவதாகத் தமிழ்விடு தூது ஆசிரியர்.

"குறமென்று பள்ளென்று
கொள்வர் கொடுப்பாய்க்கு
உறவென்று மூன்றினத்தும் உண்டோ."

என்று கூறுகிறார்.

**பள்ளுகளின் வகைகள்**

"நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது" என்பது பழமொழி. நெல்லை மாவட்டத்தில் நிலவும் ஒரு பழமொழி. முக்கூடற்பள்ளு முதன்மையானது. பாடிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. குருகூர்ப் பள்ளு, திருமலைப் பள்ளு, சீர்காழிப் பள்ளு, திருவிடை மருதூர்ப் பள்ளு, தஞ்சைப் பள்ளு, புதுவைப் பள்ளு, வையாபுரிப் பள்ளு என்று பள்ளுப் பாடல்கள் பரந்து கிடக்கின்றன. 52 பள்ளு இலக்கியங்கள் உள்ளன. முக்கூடற்பள்ளுவின் காலம் கி.பி. 1680. முக்கூடல் என்பது மூன்று ஆறுகள் கூடும் இடம். தாமிரபரணி, சிற்றாறு,ஒரு காட்டாறு மூன்றும் கலக்கும் இடம் முக்கூடல். மூத்த பள்ளி திருமாலை வழிபடுபவள். இளைய பள்ளி சிவனை வழிபடுபவள். பள்ளியர் ஏசல் பகுதி மிகச் சுவையான பகுதி.

**சமயம் வளர்த்த தமிழ்**

சமயத்தால் தமிழ் வளர்ந்ததை மறுக்க முடியாது. சமயங்களைத் தமிழ் வளர்த்ததென்பதும் கலப்பற்ற உண்மை.

சமயப் பற்றாளர், தம் நெறியைப் பரப்பத் தமிழின் இனிமையைக் கருவியாகக் கையாண்டனர்.

சமயக் கருத்துக்கள் மக்களிடம் சென்று அடைய மொழியை, மக்கள் தொடர்புச் சாதனமாக்கிக் கொண்டனர். மக்களுக்குக் காலத்துக்கேற்ப எவ்வெவ்வகை இலக்கியம் ஏற்புடைத்தாகுமோ, விருப்பத்திற்குள்ளாகுமோ அந்தந்த உத்திகளைப் பயன்படுத்தி, இலக்கியம் படைத்தனர்.

தத்தம் சமயங்களை வளர்க்கச் சமயப் பெரியார்கள் புராணங்களையும் சிற்றிலக்கியங்களையும் கருவியாக்கினர். தமிழில், புராணங்களின் எண்ணிக்கையில் சைவம் முதன்மை பெற்றிருப்பினும் புராணம் தோன்றுவதற்கும் வளரவும் காரணமாக இருந்தது. ஜைன சமயமே, களப்பிரர் காலத்தில் ஜைன, பௌத்தர்களின் வருகையால் புனைந்துரைக்கப்படும் கற்பனைக் கதைகளில் புராணங்கள் பொலிவு பெற்றன . கசப்பான மருந்தைத் தேன் தடவிக் கொடுப்பது போல் கதைகளுடன் சமயக் கருத்துக்களையும் அவர்கள் தந்தனர். இசுலாம், கிறித்தவம் ஆகிய சமயங்கள் தமிழை வளர்த்தன. சமயத்தினரும் தங்கள் சூழ்நிலைக்குத் தக்க தமிழ் இலக்கிய இலக்கணங்களை வகுத்தனர்.

**ஜைனம் வளர்த்த தமிழ்**

ஜைனர்கள் தங்கள் மதக் கருத்துக்களை உலக மக்கள் உய்த்துணர விரும்பினர். அதனால் அந்தந்த வட்டார மொழியிலேயே ஜைன, மதக் கருத்துக்களை வெளியிட்டார்கள். அதனால் தமிழுக்கு அம்மதங்களின் கொள்கைகளைத் தமிழர்களுக்கு உணர்த்தும் வாய்ப்பேற்பட்டது.

ஜைனத் துறவிகள் வாழும் மடத்திள்குப் "பள்ளி" என்று பெயர். இப்பள்ளிகளில் கூடங்கள் அமைத்து, மக்களுக்கு கல்வி கற்பித்தனர், இக்கல்விச் சாலைகள் "பள்ளிக் கூடங்கள்" எனும் பெயர் பெற்றன. ஜைன கல்விப் பணி தொடங்கிய இடம் இன்றும் "பள்ளிக் கூடம்" எனும் பெயரில் நிலை நிற்கிறது.

மௌரியப் பேரரசர் காலத்திலிருந்து, ஜைனமதம் தமிழகத்தில் பரவத் தொடங்கியது. ஜைனர்களின் இலக்கியங்கள் தமிழில் பரவத் தொடங்கின. இதைக் கன்னட நட்டுச் சரவணபெல்லகோலாக் கல்வெட்டு உறுதி செய்கிறது.

ஜைனர்கள் காப்பியம், நீதி இலக்கியம், புராணம், சிற்றிலக்கியம், உரைநடை, இலக்கணம், நிகண்டு ஆகிய இலக்கிய வகைகளில் ஈடுபாடு கொண்டனர். அதனால் இவை வளர்ந்து தமிழுக்கு வளம் சேர்த்தன.

வாமன முனிவரின் "மேருமந்த்ர புராணம்" , "ஸ்ரீ புராணம்" , "மல்லிநாதர் புராணம்" , "சாந்தி புராணம்" , "மா புராணம்" , "உத்தர புராணம்" , "கத்திய சிந்தாமணி போன்ற புராணங்கள் தமிழ் உரைநடைக்கு வளம் சேர்த்தன.

நாலடியார், சிறுபஞ்ச மூலம், பழமொழி, ஏலாதி போன்ற நீதி நூல்களும் திருத்தக்க தேவரின் நரிவிருத்தம், கிளி விருத்தம், எலி விருத்தம் போன்ற விருத்தப் பாக்களாலான நூல்களும் தமிழுக்குப் புதுவரவாக அமைந்தன.

**இலக்கண நூல்கள்**

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நேமிநாதம், வச்சணந்தி மாலை, நன்னூல், நம்பியகப் பொருள் போன்ற இலக்கண நூல்கள், திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி, உரிச்சொல் நிகண்டு போன்ற நிகண்டுகளும் சோதிட நூல், வானநூல், கணித நூல்கள், மருத்துவ நூல்களெனப் பல துறை நூல்களும் தமிழுக்கு அணி செய்கின்றன. சூடாமணி நிகண்டு எழுதிய மண்டல புருடர் சமணரே இதில் 1197 சூத்திரங்கள் உள்ளன.

சீவக சிந்தாமணி, வளையாபதி, நீலகேசி ஆகிய காப்பியங்களும் ஜைன சமயக் காப்பியங்களாகும். இவ்வாறு இவர்களின் தமிழ்ப்பணி பாராட்டத்தக்கது.

**பௌத்தமும் தமிழும்**

"சமணம் என்னும் சொல், வைதீக மதத்தவர் அல்லாத பௌத்த, ஜைன மதங்களுக்கும் பொதுப் பெயராகப் பண்டைக் காலத்தில் வழங்கி வந்தது" என்கிறார் மயிலை சீனி, வேங்கடசாமி, "பௌத்தமும் தமிழும்" நூலில் (ப.83). மதுரைக் காஞ்சியில் புத்த சமணப் பள்ளிகள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

"வனப்புப் பொருந்திய, தமிழ் மங்கை என்னும் பெருமாட்டிக்குச் சிலம்பு, மேகலை, வளை, குண்டலம், மணி என்னும் விலைபெற்ற நற்கலங்களை அணிவித்து என்றென்றும் அப்பெருமாட்டி

அழகுடன் விளங்கச் செய்தவர் சமணமாகிய, பௌத்த, ஜைன மதத்தினரேயாவர். அஃதாவது சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சிந்தாமணி என்னும் மூன்றையும் ஜைனமும் இயற்றினர். அவர்கள் அப்பெருமாட்டிக்கு அணிவித்த வேறு அணிகலன்களும் பலப்பல உண்டு" என்கிறார் மயிலைசீனி வேங்கடசாமி. நற்றிணை 72ஐப் பாடிய சங்கப் புலவராகிய இளம் போதியாக, பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்.

இன்றையத் தமிழ் எழுத்து வடிவம், அன்றையப் பௌத்தர்களால் திருத்தப்பட்ட பிராமி எழுத்து வடிவப் பரிணாம வளர்ச்சி என்ற கருத்து நிலவுகிறது.

"அசோகர் எழுத்து எனப்படும் பிராமி எழுத்திலிருந்தே, நாகரிகத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய எழுத்துக்கள் உண்டாயின. இதில் சற்றும் ஐயமில்லை" என்கிறார் மயிலை சீனி வேங்கடசாமி ப.92. (பௌத்தமும் தமிழும்)

பௌத்தச் சார்பான மணிப்பிரவாள நடை நூல்கள் அழிந்து விட்டன. அவர்கள் இயற்றிய "வீரசோழியம்" என்னும், இலக்கண நூல் மட்டும் எஞ்சியுள்ளது. இதன் ஆசிரியர் புத்த மித்திரர். காப்பியங்களில் அழியாமலுள்ள பௌத்த நூல் "மணிமேகலை" மட்டுமே. மணிமேகலையின் பொதுக் கொள்கை உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது தான்.

சமயப் போர்களால், பௌத்த நூல்களை இழந்து விட்டோம். அஃதாவது, தமிழ் இலக்கியச் செல்வன் ஒரு பகுதியைத் தமிழ்நாடு இழந்து விட்டது.

குண்டலகேசி புத்தமதச் சார்பான விவாதங்களைத் தரும் காப்பியம். கவிமணி எழுதிய ஆசிய ஜோதிப் புத்தமத உண்மைகளை எடுத்துத் தருகிறது.

**சைவமும் தமிழும்**

இந்து சமயத்தின் இரு கண்களாகத் திகழ்பவை, சைவமும் வைணவமும், சிவனை வழிபடு தெய்வமாகக் கொண்டது சைவம் ; திருமாலை வழிபடு தெய்வமாகக் கொண்டது வைணவம். சங்ககாலத்தில் தமிழ் செழுமையுடன் திழ்ந்தது. சங்க சாலத்திற்குப் பின்பு தமிழின் இலக்கிய வளர்ச்சி, தளர்ச்சியுற்றது. களப்பிரர் காலம் தமிழுக்கும் தமிழகத்துக்கும் "இருண்ட காலம்" என்பர். கி.பி. 7 ஆம் நூற்றாண்டு தமிழுக்கு மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம். தேவார திருவாசகங்களாகிய பக்தி இலக்கியங்கள் தோன்றிய காலம். பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சைவ சமயச் சாத்திரங்களும் சைவப் பெருமக்களின் கொடையே.

**திருமூலரும் திருமந்திரமும்**

தமிழின் வீழ்ச்சியிலிருந்து, எழுச்சியுறச் செய்த பெரியார்களில் சிறப்புற்றோர் சித்தர்கள். சித்தர்களில் முதன்மையானவர் திருமூலர். அவரின் "திருமந்திரம்" தமிழுக்குக் கிடைத்த அரும்பேறாகும். மெய்ப்பொருள் உணர்வு, முறையாகத் தொகுக்கப்பெற்று விளங்குவது, 3000 பாடல்களைக் கொண்ட திருமந்திரமே கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய நூல்.

மந்திரம், மருத்துவம், சோதிடம், சமுதாயப் பொது அறம், சமய சித்தாந்த அடிப்படை விளக்கம், மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதிப் பாகுபாட்டை வெறுத்தொதுக்கல் போன்ற கோட்பாடுகளைக் கொண்ட ஒப்புயர்வற்ற நூல் திருமந்திரம்.

வடமொழி ஆதிக்கம் மேலோங்கி நின்ற கா்லத்திற்குப் பின்பு தோன்றித் தமிழ் வளர்ச்சிக்கு வழிவகுத்த நூல் திருமூலரின் திருமந்திரம்.

திருமந்திரமே முதன்முதலாகச் "சைவ சித்தாந்தம்" என்ற தொடரைக் கையாண்டுள்ளது. "அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்" எனக் கூறி , அன்பே தெய்வம் என்பதை உறுதியாக உணர்த்தும் நூல். அன்பில்லாதவர் சிவநெறி காணாதவர் என்பதை வலியுறுத்துவது திருமூலரின் திருமந்திரம். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது திருமந்திரக் கோட்பாடு.

**பதினென் சித்தர்கள்**

சித்தர்கள் வரிசையில், திருமூலருடன் இடம்பெறுபவர்கள் பதினென் சித்தர்கள்

திருமூலர், அகத்தியர், புத்தியர், போகர், சட்ட முனி, மச்சமுனி, இடைக்காடர் போன்ற பதினெட்டுச் சித்தர்கள் தவிர, மேலும் பலர் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. சமயத்தின் உண்மையான குறிக்கோள்களையும், கோட்பாடுகளையும் உணர்த்தியவர்கள் சித்தர்கள். சடங்கு, ஆசாரங்கள்,

உருவ வழிபாடுகளை அகற்றப் பாடியவர்கள் இவர்கள் ; மூட நம்பிக்கையொழிப்புக்கு முன்னோடியாக நின்று அடி எடுத்துக் கொடுத்தவர்கள், சித்தர்கள் புரட்சிமிகு சமுதாயச் சிந்தனையாளர்கள். பகுத்தறிவு இயக்க முன்னோடிகள் என்றாலும் பொருந்தும். பட்டைத் தீட்டிய மாசகற்றப் பெற்ற வைரமாகச் சைவம் பளிச்சிடப் பணியாற்றியவர்கள் சிலர்கள். அவர்களின் பல்வேறு கருத்துக்கள் கொண்ட நூல்களால், தமிழின் பரப்பு விரிந்தது. இருண்ட கால மென்றுமிருள் அகல்வதற்குத் தோன்றிய காலைக் கதிரொளி சித்தர்களென்றால், அது மிகையாகாது. தமிழில் மருத்துவம், மந்திரம், இரசவாதம், யோகம், ஞானம் ஆகிய துறைகளில் இலக்கியங்கள் தோன்றின.

பத்தாம் நூற்றண்டையொட்டிய காலத்தில் சித்தர்கள் மிகுதியாக வாழ்ந்தனர் என்பது கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் கருத்தாகும். வைத்தி நூறுக் கோடர்புவிப் பரணி, இரேகை சாத்திரத்துக்கேடர் இடைக்காடர் என்று ஒவ்வொரு துறைகளும் நூல்கண்டு, தமிழை உயத்திதியவர்கள்.

பட்டினத்தார்

சைவம் சார்ந்து நின்று, சிவநெறி பரப்பும் முயற்சிகொண்டு பாக்கள் பல பாடினார் பட்டினத்தார். தமிழின் வளம் பெருகப் பட்டினத்தார் நூல்கள் வழிவகுத்தன. பட்டினத்தார், பதினொன்றாம் நூற்றாண்டில் தோன்றினார். பட்டினத்தாரின் நூற்கள் பதினொன்றாம் திருமுறையில் உள்ளன.

"கோயில் நான்மணி மாலை", "திருவிடைமருதூர் மும்மணிக்கோவை", "திருவேகம்பமுடையார் திருவந்தாதி", "திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது" போன்றவை பட்டினத்தடிகளின் நூற்கள். தமிழுக்கு மாலை, கோவை, அந்தாதி, பத்து போன்ற சிற்றிலக்கியங்களை இவர் தந்தார். பெண்ணாசையொழித்தல் குறித்த இவரது கருத்து, காரண காரிய விளக்கங்களாக அமைகின்றன.

சிவப்பிரகாசர்

இவர் "பிரபு லிங்க லீலை" எனும் வீரசைவ சமய நூல் எழுதினார். இவர் எழுதிய "நால்வர் நான்மணிமாலை" தேவாரம் எழுதிய மூவர் முதலிகள் மணிவாசகப் பெருமான் ஆகிய சைவம் வளர்த்த அருளாளர்கள் நால்வர் பற்றிய குறிப்புகள் அடங்கிய விளக்க நூலாக விளங்குகிறது.

சிவஞான முனிவர்

இவர் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவப் பெரியார். "சிவஞான போதம்" என்ற சிவநெறி மெய்பொருள் அடிப்படை நூலுக்கு 'மாபாடியம்' என்ற பேருரையும் சிற்றுரையும் எழுதினார். இது சைவ சமயத்தின் கோட்பாடு விளக்க நூலாகத் திகழ்கிறது. சைவநெறியின் தத்துவத்தை அறிந்துகொள்ள வழிகாட்டும் நூலாகும் இது.

தத்துவராயர்

மூவர் தேவாரத்தையும் மணிவாசகரின் திருவாசகத்தையும் பற்றிய நூல் எழுதினார் இவர். இந்நூல் தேவார, திருவாசக ஆய்வு போன்றுள்ளது. தத்துவ விளக்கத்திற்கு முதன்மை தரும் நூல். இலக்கியத் திறனாய்வின் வழிகாட்டியாக அமைந்த நூல் எனலாம்.

அறியாமை இருளகற்ற, அறிவு நிகழ்த்திய போர் போன்றமைந்த நூற்களாகத் தத்துவராயர் இயற்றிய " அஞ்சவதைப் பரணி "யும் " மோகவதைப் பரணி " யும் அமைந்துள்ளன.

தாயுமானவர்

" எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "
" நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் - அன்பே
மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே "

என்னும் பராபரக் கண்ணி, எளிய நடையில் எழுதப் பெற்ற அரிய கருத்துப் பேழை, சித்தர்கள் கருத்துக்கள் போல் இறைவனைத் தொழப், பூவும், பூசனையும் தேவையில்லை. உள்ளத் தூய்மையும் அன்பும், எல்லோரும் இன்புற நினைப்பதும் அதற்கு ஆவன செய்வதும் தாம் இறைவனுக்கு உகந்தவை. இறைவன் திருமறையே ஏற்கிறார் என்ற கருத்தை விதைக்கிறார் தாயுமானவர்.

தாயுமானவரின் தமிழ்த் தொண்டு போற்றற்குரியது. வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்ததால், பிற நாட்டுச் சாத்திங்களைத் தமிழ் மொழியில் பெயர்த்துத் தமிழின் பரப்பை விரிவாக்கினார் வடமொழியின் உபநிடதக் கருத்துக்களைத் தமிழாக்கி, மொழிவளம் சேர்ந்த பெருமைக்குரியவர் இவர். தம் பெயருக்கேற்ப, அவர் உலக மக்களின் தாயும் ஆனவர். தாய் அனைய பேரன்பை உலக உயிர்களிடம் காட்டி நின்ற அருளாளர். சைவ சமத்தைப் பற்றி அறிய உதவும் தாயுமான்வர் கருத்துக்கள், தமிழுக்குக் கிடைத்த அருட்பேறெனலாம்.

**இராமலிங்க வள்ளலார்.**

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்". எனக் கூறும் அருள் வள்ளல் இராமலிங்க அடிகள். கலையுரைத்த கற்பனையே மெய்யெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போகட்டுமென மூடக் கொள்கைகளின் முடை நாற்றம் வீசுகின்ற போலி சமயக் கோட்பாடுகளுக்கு எதிராகின்ற புரட்சிமிகு சமயச் சிந்தனையாளர். சமயச் சீர்திருத்தப் பெரியார் இவர்.

சன்மார்க்க நெறிகண்ட வள்ளல், உயிர்களிடம் கருணை, பசியகற்றல், ஆன்மநேய ஒருமைப்பாடு பற்றிப் பாடிய அருளாளர் இவர்.

"பசித்திரு, தனித்திரு, விழித்திரு." என்று தனிமனிதரும் உலகும் உய்யப் பாக்களால் பாதை காட்டியவர் இவர். வடலூர் வள்ளலாரின் திருவருட்பா, தமிழுக்குக் கிடைத்த பேரருள் எனலாம். நாட்டுப்புற பாடல்களான கும்மி, கண்ணி, சிந்து, கீர்த்தனைகளெனக் கவிதையில் பல வண்ணங்களை இணைத்தவர் இவர்.

## சைவம் வளர்த்த இசைத்தமிழ்

இடைக்காலத்தில் சைவம் வளர்த்த இசைத் தமிழின் விளக்கமாக, மூவர் தோவரமும் மாணிக்கவாசகரின் திருவாசகமும் மிளிர்கின்றன. இவை, இசைப் பாடல்களாகவே பாடப்பெற்றன. ஏழிசையாய், இசைப் பயனாய், இசை வடிவாய்த் திகழும் ஈசனை மூவர் முதலிகள் முந்து தமிழ் இசை பாடியே போற்றினார். சைவத் திருக்கோயில்களில் தேவார, திருவாசகப்பாடல்கள் பாடப்பெற்றன.

## புராணங்கள் வளர்த்த தமிழ்

சைவத்திருமுறைகள், ஒப்பற்ற தமிழ்ச் செல்வங்கள், முருகன் புகழ் பரப்பும் கந்தப் புராணம், சிவபிரானின் சிறப்புரைக்கும் திருவிளையாடற் புராணம், சமரசநிலை பரப்பும் பெரிய புராணம், சிவன்கோவில் புராணம், திருப்பாங்கிரிப் புராணம், சேது புராணம், சிவப்பிரகாசரின் சீகாளத்திப் புராணம், ஞானப் பிரகாசரின் திருவொற்றியூர்ப் புராணம் போன்ற பல புராணங்கள் தமிழில் புராண இலக்கியப் பரப்பைப் பெருக்கின. மெய்ப்பொருள் விளக்கமான மெய்கண்டாரின் சிவஞான போதம் போன்ற தமிழ் நூல்கள், பக்தி வெள்ளத்தைக்கரை புரண்டோடச் செய்வதுடன் தமிழிலக்கியத் துறைகளின் பரப்பையும் மிகுவிக்கும் பெரிய தமிழ்ப்பணிகளாகவும் உள்ளன.

## சைவ மடங்கள் வளர்த்த தமிழ்

13, 14 ஆம் நூற்றாண்டில் முகம்மதியர் படையெடுப்பால் பாதிக்கப்பட்ட சைவ சமயத்தைக் காக்கச் சைவத் திருமடங்கள் தோன்றின. திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மதுரை, குன்றக்குடி ஆதீனங்கள் மற்றும் வீர சைவ மடங்கள் ஆற்றிய சைவத் தொண்டோடிணைந்த தமிழ்ப் பணிகளும் போற்றற்குரியன. அவர்களின் சமயத் தொண்டு தமிழிலக்கியப் பரப்பை விரிவாக்கம் செய்கின்றது.

## வைணவமும் தமிழும்

திருமாலின் புகழ்பாடும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்றது.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், ஆகிய மூவரும் முதலாழ்வார்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மூவரும் ஒரு மண்டபத்தில் ஒருவர் கிடக்க இருவர் அமர மூவர் நிற்கக்கூடிய இடத்தில் நெருக்கியடித்துக் கொண்டு நிற்கையிலே திருமாலும் அவர்களுடன் சேர்ந்து வந்து நெருக்கிக் கொண்டு நின்றதாகக் கூறுவர்.

பரிபாடலில் திருமாலைப் பற்றி பாடல்கள் வைணவத் தொடக்கத்தை உருவாக்கின. சிலம்பில் ஆய்ச்சியர் குரவை முல்லை நிலக் கண்ணனை முழுமையாகக் காட்டின.

வைணவத் தமிழ்ப்பணி கிபி 10ம் நூற்றாண்டில் தொடங்குகிறது. "குரு பரம்பரப் பிரபாவம்" எனும் நூலை அழகிய பெருமாள் ஜீயா் யாத்தார்.

"தமிழ் வியாசர்" எனப் போற்றப் பெறுகிற நாதமுனி சுவாமிகள், நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தை 11ம் நூற்றாண்டில் தொகுத்தார். இது தமிழ் இலக்கிய உலகுக்குச் செய்த மாபெருந் தொண்டாகும். "யோக ரகசியம்" "நியாயத் தத்துவம்" ஆகிய நூல்களையும் நாதமுனி சுவாமிகள் இயற்றினார்.

13ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவரங்கத்தமுதனார் "இராமனுஜ நூற்றந்தாதி" என்னும் நூலுடன் "வேதாந்த தேசிகரின் நவரத்தின மாலை" முதலிய பதினைந்து நூல்களைத் தந்து தமிழில் வைணவ இலக்கியப் பரப்பை மிகச் செய்தார்.

"வில்லி பாரதம்", "கம்ப ராமாயணம்", "ஆண்டாள் திருப்பாவைப் பாடல்கள்" ஆகியவை வைணவ சமயம் பரப்பும் வனப்புமிகு பக்தி நூல்களாகும்.

## இசுலாமும் தமிழும்

சஙகக் காலந் தொட்டுத் தமிழகத்துக்கும் அராபியருக்கும் தொடர்பு உண்டு மாலிக்காபூரின், தென்னிந்தியப் படையெடுப்பு நிகழ்ந்த பதினான்காம் நூற்றாண்டிலிருந்து, தமிழகத்தில் மொகலாயர் ஆட்சித் தொடங்கியது. தொடர்ந்து அரை நூற்றாண்டுக் காலம் நிலவிய ஆட்சியால் இசுலாமியப் பண்பாடும் மொழிச் சொற்களும் தமிழகத்திலும் தமிழிலும் பரவின.

அரபு நாட்டில் நபிகள் இசுலாம் சமயத்தைத் தோற்றுவித்தார். தமிழ் இசுலாமியப் பெருந்தலைவர்கள், நபிகளின் பெருமையையும் இசுலாமிய சமய நெறிகளையும் பரப்பத் தமிழை ஊடகமாக பயன்படுத்தினர். இசுலாம் சமய நூற்களைத் தமிழில் மொழி பெயர்த்தனர். அரபு, பாரசீக, இந்துஸ்தானிச் சொற்கள் தமிழில் திசைச் சொற்கள் எனும் பெயரில் இணைந்தன. பிற மொழியின் தாக்கம் அருணகிரிநாதரையும், குமரகுருபரரையும் விட்டுவைக்கவில்லை. அவர்கள் முறையே "சபாஷ்" "சலாம்" என்ற சொற்களை தங்கள் நூல்களில் பயன்படுத்தினர்.

கிபி 17ம் நூற்றாண்டில் இசுலாமிய இலக்கியம் தமிழில் அணிசெய்யத் தொடங்கியது. உமறுப் புலவரின் "சீறாப் புராணம்" தோன்றியது. இந்நூல் நபிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது. சிலம்புபோல் மூன்று காண்டங்களைக் கொண்டது. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் முதல் நூலாகக் கருதப் பெறுவது பல்சந்தமான இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. 92 படலங்கள் உள்ளன. இதில் 5027 பாடல்கள் உள்ளன. கவிதை வடிவில் நபிகளின் வரலாறு கூறும் நூல் சீறாப் புராணம் ஆகும்.

சீறாப் புராணம் நபிகளின் ஏற்றத்தைக் கூறும் நூல். இந்நூலில் இயற்கை வருணனைகள் மிளிர்கின்றன. அனைத்துச் சமயத்தினரையும் ஈர்க்கும் ஆற்றலுடைய நூல் இது. கம்பன், கங்கையைக் காவிரியாகக் கண்டது போன்று உமறுப் புலவர், அரபு நாடு, மெக்கா, நகரம் போன்றவற்றை வருணிக்கும் போது தமிழகச் சூழலை உளங்கொண்டு நாட்டுப் படலம், நகர்படலங்களை அழகு மிளிரக் காட்டுகிறார்.

அரபுச் சொற்கள் மிகுதியாகப் புராணத்தில் இடம் பெற்றுள்ளன. இசுலாமியக் கோட்பாடுகளும் நபிகளின் போதனைகளும் விரிவாகப் பேசப்படுகின்றன. எனினும் சமரச நோக்கு நிலவுகிறது.

"திருவினும் திருவாய்ப் பொருளிலும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தப்பல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தவம் புரிந்த
கருத்தனைப் பொருந்துதல் கருத்தே"

எனும் கடவுள் வாழ்த்துப் பாடல் அனைத்துச் சமயக் கடவுளர்க்கும் பொருந்துவதாகவும், ஒரே சமய இறைவனைக் குறிப்பிடாததாகவும் அமைந்துள்ளது. இச்சமய நோக்கு, பிற சமயத்தினரையும் படிக்கத் தூண்டுவதாக அமைகின்றது. இசுலாமியச் சமயக் கோட்பாடுகள் மக்களுக்குச் சென்றடையச் செய்யும்

தன்மையில் அமைந்தது. எனவே தமிழ் சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவதைக் காணமுடிகிறது. இசுலாமிய சமயம் தமிழுக்குப் புதுவரவாக 5027 பாடல்களைச் சீறாப் புராணம் வாயிலாக அளித்துள்ளது.

**சேகனாப் புலவர்**

சேகனாப் புலவர் என்றழைக்கப் பெறும் சேக் அப்துல் காதிர் நெயினார் லெப்பை சாகுல் 'மீது ஆண்டகை வரலாறு, முகைதீன் ஆண்டகை வரலாறு, நபி இபுராகிம் வரலாறு ஆகிய நூல்களை எழுதினார். ஆயிரக்கணக்கான பாடல்களை தமிழ் இலக்கியத்தில் இணைந்து அழகூட்டுகின்றன.

**காசிம் புலவர்**

காசிம் புலவர், அருணகிரி நாதரின் திருப்புகழ் சந்தப் பாடல்களைப் போன்று, இசைப் பாடல் நயம மிளிர "நபிநாயகத் திருப்புகழ்" பாடியுள்ளார். சபிக்கும் கவியாகிய சவ்வாதுப் புலவர், காசிம் புலவரை "மதுரகவி" என்று போற்றுகின்றார். தமிழிலக்கியத்துக்கு, இசுலாம் சமய மதுரகவிகள் இசை சேர்க்கின்றன எனலாம்.

**சவ்வாது புலவர்**

வசை பாடுவதில் காளமேகம் நிகர்த்தவர். சொல்லால் சுட்டெரிக்கும் தன்மை பெற்றதால் "சபிக்கும் சவ்வாதுப் புலவர்" என்ற பட்டம் பெற்றவர். "நாகைக் கலம்பகம்", "மதீனத்தந்தாதி", "முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்" போன்ற சிற்றிலக்கிய வகை நூல்களைப் படைத்துத் தமிழில் இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் தந்த பெருமைக்குரியவர் இவர்.

**சையது முகைதீன் கவிராயர்**

இவரும் காசிம் புலவரைப் போன்று அருணகிரிநாதரின் திருப்புகழ் போன்று சந்தப் பாடல்களுடைய நூல்கள் பல இயற்றியவர்.

"முகைதீன் பிள்ளைத் தமிழ்"

"முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்"

"மாணிக்க மாலை" ஆகிய சிற்றிலக்கிய வரிசை நூல்களைப் படைத்துத் தமிழுக்குத் தந்தார் இவர்.

**வண்ணக் களஞ்சியப் புலவர்.**

சுலைமான் நபியின் கதையை இவர் "இராசநாயகம்" என்ற காப்பியாக 2240 பாக்களில் யாத்துள்ளார். 1713 பாடல்களில் "தீன் விளக்கம்" எனும் புராணமும் 1707 பாக்களமைந்த "குத்பு நாயகம்" என்ற காப்பியத்தையும் இயற்றினார். காப்பியம், புராணம் இயற்றித் தமிழிலயக்கித்தில் வண்ணம் பாடுவதில் வல்லவராக இருந்ததால் வண்ணக் களஞ்சியப் புலவர் என்று அழைக்கப்பட்டார்.

**குணங்குடி மஸ்தான்**

சுல்தான் அப்துல் காதிறு எனும் இயற்பெயர் கொண்டவர். குணங்குடி என்ற ஊரில் 1700 இல் தோன்றினார். துறவியாகவே வாழ்ந்து 47 ஆவது வயதிலேயே இயற்கையெய்தியவர். தாயுமானவர் பாடல்களில் ஈடுபாடு கொண்டதால் இவருடைய பாடல்களும் தாயுமானவர் பாடல்களை ஒத்தமைந்தன. தாயுமானவரின் பராபரக் கண்ணிகளைப் போன்று இசுலாம் சார்ந்த கண்ணிகளைப் பாடித் தமிழுக்குத் தந்தார் இவர்.

இவர், குருநிலை, தவநிலை, துனிவு நிலை, நியம நிலை, காட்சி நிலை, தியான நிலை, சமாதி நிலை, முதலியவற்றைக் குறித்து பராபரக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி ரஹ்மான் கண்ணி போன்ற பாடல்களைப் பாடினார்.

**செய்குத்தம்பிப் புலவர்**

இவர் அவதானக் கலை வல்லுநருள் ஒருவர். ஒரே வேகத்தில் நூறு நினைவாற்றலுடையவர் சதாவதானி என்று போற்றப்பட்டவர். செய்குத்தம்பிப் பாவலர். வடலூர் வள்ளலின் திருவருட்பாவை, மருட்பா என்று களங்கம் கற்பிக்க முயன்ற யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், கதிர்வேலுப் பிள்ளை ஆகியோரை எதிர்த்து நின்று வள்ளலின் பாக்கள் அருட்பாக்களே என வாதிட்டு வென்ற அருளாளர், அழுக்காறு தீண்டாப் புனிதர் இவர்.

1. திருநாகூர்த் திரிபந்தாதி
2. திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தாந்தாதி
3. நபிகள் நாயக மான்மிய மஞ்சரி
4. நீதிவெண்பா
5. இன்னிசைப் பாமாலை
6. ஷம் சுத்தாசின் கோவை

என்பன இவரின் நூல்கள். பீர் முகம்மது, கா. மு. செரீப், மு. சாய்பு மரக்காயர் போன்றோரும் இசுலாமியத் தமிழ் தொண்டாற்றினார். இதுவரை 2000தமிழ் நூல்களுக்கு மேலாக இசுலாமியர் இயற்றியுள்ளனர் என்பது மு. மு. உவைசின் கருத்து

## கிறித்தவம் வளர்த்த தமிழ்

வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியார், இந்திய நாட்டை ஆளும் ஆசை கொண்டனர். தூய பண்பும் தொண்டுள்ளமும் கொண்ட ஐரோப்பியப் பாதிரிமார்கள் கிறித்தவச் சமயத்தைப் பரப்பிட இந்தியா வந்தனர்.

மக்களுடன் ஒன்றிப் பழக, வட்டார மொழிப் பயிற்சி இன்றியமையாததென்பதால், தமிழகம் வந்த பாதிரிமார்கள் தமிழ் கற்றனர். தமிழின் இனிமை, எளிமை, எழில், வனப்பு வண்ணம் ஆகியவற்றில் மூழ்கித் தமிழைத் கசடறக் கற்பதும் தமிழை வளர்ப்பதுமே தலையாயக் கடனாகக் கருதினர். தமிழ்ப்பணி புரிந்தனர். தமிழால் உலகு போற்றும் நிலையை அவர்கள் பெற்றனர். அப்பெரியார்களும் நிலைத்த புகழுடன் நிலை நிற்பவர்கள் சேவியர், பிரிட்டோ, நொபிலி, பெஸ்கி, ஜி.யு. போப் கால்டுவெல் போன்ற அருளிணைந்த அறிஞர் பெருமக்களாவர்.

இவ்வறிஞர் பெருமக்களின் தமிழ் நூல்கள் அச்சேறின. தமிழ், பல மொழிகளில் அகராதி வடிவம் கொண்டது. உரைநடை உருவாகியது. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பெற்றது. எழுத எளிமையான வடிவம் கண்டது. செய்யுள் இடையிலேயே செழித்த நின்ற செந்தமிழில் கதைகள், கட்டுரைகள், ஆய்வியல் நோக்குகள் உருவாயின. புலவர்களுடன் ஒன்றிக் கிடந்த புகழ்மிகு நூல்கள் உலக இலக்கிய வானில் ஒளிபெற்று உலா வந்தன. கடையனும் காவியம் கற்கும் நிலை அச்சு இயந்திரத்தால் உருவாயிற்று. நூல்கள் பரவலாக்கப்பட்டதால் அறையில் அடைப்பட்டிருந்த தமிழ் நறுமணம், தமிழ் கூறு நல்லுலகெங்கும் பொதிகையின் சந்தனமணமாய்த் தமிழ் தென்றலில் கலந்து உலாவந்தது.

புனித சேவியர், பிரிட்டோ, ஆகிய மதப் போதகர்கள், கிறித்தவச் சமயச் கொள்கைகளையும் செபங்களையும் தமிழாக்கம் செய்தனர்.

**ராபர்ட் தி. நொபிலி (1577 - 1656)**

இத்தாலிய நாட்டைச் சேர்ந்த தத்துவப் போதகர் தமிழ் முனிவர் சரித்திரம் தந்தவர். அகராதி எழுதினார். கற்ற தமிழால் நொபிலி "யேசுநாதர் சரித்திரம்", "தமிழ்ப் போர்சுக்கீசிய அகராதி", "ஆத்ம நிர்ணயம்", "ஞானோபதேச காண்டம்", ஆகிய உரை நடை நூல்களைப் எழுதினார்.

**வீரமாமுனிவர் (1680-1747)**

இத்தாலி நாட்டு கான்ஸ்டாண்டின் ஜோஸ் பெஸ்கி என்பவர்—தமிழகத்தில், வீரமாமுனிவர் என்றழைக்கப்பட்டார். தமிழரின் சிறப்புணர்ந்த பெஸ்கி, வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளைக் கற்றார்.

தமிழ் எழுத்துக்களின் அமைப்பில் மாற்றம் செய்து எழுதுவதற்கு எளிமையாக்கினார்.

"தேம்பாவணிக் காப்பியம்", "தொன்னூல் விளக்கம்" ஆகியவற்றைத் தந்தவர் இவர். தமிழில் முதன் முதலாகச் "சதுரகராதி" படைத்தவர் இவர். அகர வரிசையில் அமைந்த முதல் தமிழ் அகராதி

"திருக்கோவிலூர்க் கலம்பகம்", "அன்னை அழுங்கல் அந்தாதி" போன்ற செய்யுள் நூல்களையும் பராமார்த்த குரு கதை, வேதியர் விளக்கம், வேத விளக்கம், முதலிய உரைநடை நூல்களையும் தமிழுக்குத் தந்தார். பரமார்த்த குரு கதையானது பிரெஞ்சு, ஜெர்மன், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**சீகன்பால்கு ஐயர்**

சீகன் பால்கு எனும் செர்மானியப் பேரறிஞர், 1709ல் தரங்கம்பாடிக்கு வந்து, முதலாவது அச்சகக்கூடம் நிறுவினார். ஓலையில் குடியிருந்து ஒண்டமிழ் நூல்கள் அச்சேற வழி வகுத்தவர் சீகன் பால்கு ஐயர். ஏழைகளுக்கு எட்டாத இலக்கியத்தை எட்டச் செய்தவர் பால்கு ஐயர்

இவர் தமிழ் இலக்கணத்தை, இலத்தீன் மொழி இலக்கணத்துடன் ஒப்பிட்டுத் தமிழ் இலத்தீன் ஒப்பிலக்கண நூல் எழுதினார். தமிழ் சொற்களை இலத்தீன் சொற்களுடன் இணைத்துப் பேசவும் வழி செய்யும் "இலத்தீன் அகராதியும்" கண்டார். தமிழ்த்தாயை, இலத்தீன் மக்களும் போற்றிப் புகழ வழி செய்தவர் பால்கு ஐயர் அவர்கள். ஒப்பிலக்கிய நெறி தமிழிலக்கியத்தில் உலவ வழி கிடைத்தது. முதல்| விவிலியத் தமிழ்மொழி பெயர்ப்பு போன்றவற்றை உருவாக்கினார்.

**போப் ஐயர் (1820 - )**

போப் ஐயர் என அழைக்கப்பெறும் ஜி. யூ. போப் அவர்கள், தமிழைக் கற்றுத் தமிழால் கிறித்தவச் சமயப் பணியாற்றிய புகழ் பெற்றார். தமிழ் மீது கொண்ட ஆரா அவா, அவரை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத் தமிழாசிரியர் ஆக்கியது.

திருவாசகம், திருக்குறள், நாலடியார், புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலையில் சில செய்யுட்கள் ஆகியவை. ஆங்கில ஆக்கம் பெற்றன. தமிழிலக்கியங்கள், கடல் கடந்து அயல்நாட்டினர் கைகளில் தவழும் பேறு பெறச் செய்தவர் கிறித்தவப் பாதிரியார் ஜி. யூ. போப் தனியாகத் தமிழ்த் தாக்கத்தால், தம் கல்லறையில் "ஒரு தமிழ் மாணவன்" என்று பொறித்திட விரும்பியவர் இவர்.

**கால்டுவெல் ஐயர் (1814-1891)**

கால்டுவெல் ஐயர் அயர்லாந்து நாட்டினர். திராவிட மொழிகள் அனைத்தும் ஒரே குடும்ப மொழிகள் என்பதை ஒப்பிலக்கிய நோக்கில் கண்டறிந்து உலகுக்கு உணர்த்தியவர் கால்டுவெல் ஐயர். "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற அரிய நூல் எழுதினார். "நற்கருணைத் தியான மாலை", "தாமரைத் தடாகம்", "ஞானக் கோயில்", "பரதகண்டபுராதனம்", நூல்களை எழுதினார். கிறித்தவச் சமயத் தொண்டுடன் தமிழுக்குத் தொண்டு செய்த சமயப் பெரியார்களின் அரும்பணியால் தமிழிலக்கியக் கிளைகள் பல கிளைத்துச் செழித்தன.

**தமிழுக்குத் தொண்டு செய்த தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள்**

தமிழ் நாட்டில் தமிழுக்குத் தொண்டாற்றிய கிறித்தவத் தமிழர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் முக்கியமானவர்கள், "இரட்சண்ய யாத்திரிகம்", யாத்த எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் எழுதினார். ஜான் பனியன் ஆங்கிலத்தில் எழுதிய மோட்சப் பயணம் என்ற நூலின் தழுவல் இது.

**மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826 - 1889)**

திருச்சிக்கு அருகிலுள்ள குளத்தூரில் தோன்றியவர். நீதிமன்றத்தில் முன்சீப் வேலைப் பார்த்தவர். தமிழில் முதல் நாவலாகிய "பிரதாப முதலியார் சரித்திரம்" என்னும் நூலை 1876ல் படைத்து இவர் நாவல் இலக்கியத்திற்கு வித்திட்டார். "சுகுண சுந்தரி" என்னும் நாவலையும் எழுதினார்.

**ஆபிரகாம் பண்டிதர்**

தமிழுக்குப் பெரிய இசை நூலை "கருணாமிர்த சாகரம்" என்ற பெயரில் வெளியிட்டார். இவ்வாறு கிறித்தவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் பலவாகும்.

**பயிற்சி வினாக்கள்**

1. சிற்றிலக்கியங்கள் பற்றி விளக்குக.
2. ஆற்றுப்படை, அந்தாதி, கோவை உலா ஆகியவை பற்றி விவரி
3. பரணிப் பாட்டு, பள்ளுப்பாட்டு இவற்றுள் ஒன்றன் அமைப்பும் நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக
4. பிள்ளைத் தமிழ், குறவஞ்சி - இவற்றைப் பற்றிக் குறிப்பு வரைக
5. சமணர்தெ தமிழ்த் தொண்டு குறித்து விளக்கு
6. சைவம் வளர்த்த தமிழ் பற்றி விவரி.
7. தேவாரம், திருவாசகம் போன்ற சைவத் திருமறைகள் தமிழ் வளர்ச்சிக்கு உதவிய தன்மையை விளக்கு

8. பௌத்தர்கள் தமிழ் வளர்ச்சிக்கு செய்த தொண்டு பற்றி ஒரு கட்டுரை எழுதுக
9. மேலை நாட்டுக் கிறித்தவத் தமிழ் அறிஞர்களின் தமிழ்ச் சேவையை மதிப்பிடுக
10. இசுலாமியர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டினை விவரி
11. சீறாப் புராணம் சிறுகுறிப்பு தருக.

## அலகு 4

### வெளிநாடுகள் தந்த இலக்கியம்

உலகெங்கும் தமிழர்கள் நிலையாக வாழும் பகுதிகள் பல உள்ளன. இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்திலும், கிழக்குப் பகுதியாகிய மட்டக் கிளப்பிலும் புலவர்கள் பலர் வாழ்ந்து தமிழ் நூல்கள் பல இயற்றியுள்ளனர். ஈழத்துப் பூதன் தேவனார் என்று ஒரு புலவர் இயற்றிய அகம் - 88, 231, 307 குறுந்தொகை 189, 343, 360 நற்றிணை 66 ஆக ஏழு பாடல்கள் தமிழ்ச் சங்க இலக்கியத்தில் உள்ளன. ஈழத்தில் பதினெட்டாம் நூற்றாண்டு வரை தமிழே ஆட்சி மொழியாக இருந்தது.

### இலங்கைத் தமிழ் தந்த இனிமைப் பெட்டகங்கள்

அரசகேசரி என்பார் காளிதாசரின் வடமொழிக் காப்பியமாகிய ரகு வம்சத்தைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தார். இது 2400 செய்யுட்களைக் கொண்ட காப்பியமாகும்.

பதினேழாம் நூற்றாண்டில் தமிழில் தோன்றிய தலபுராணங்களைப் போலவே இலங்கையிலும் தலபுராணங்கள் இயற்றப்பட்டன.

தமிழகத்தில் சிற்றிலக்கிய வகையானது தமிழில் கோவை, உலா, கலம்பகம், தூது, அந்தாதி என்று பெருகியதைப் போன்றே இலங்கையிலும் சிற்றிலக்கிய வகையானது பல்கிப் பெருகியது.

சிவசம்புப் புலவர் செய்யுள் நூல்கள் அறுபது இயற்றினார், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஏறக்குறைய பதினைந்தாயிரம் செய்யுள் இயற்றியுள்ளார். கதிர் காமத்து முருகக் கடவுளை,

"புதிய செந்தமிழ்மாலை புகழ்மாலை பாடிப்
பெருவிரல் கந்தா சுகந்தா என்று பாடிக்
கதிரை மலை காணாத கண் என்ன கண்ணே
கற்பூர ஒளி காணாக் கண் என்ன கண்ணே"

என்று அவர் போற்றி பாடிய பாடல் இன்னும் இலங்கை மக்களால் போற்றப்பட்டு வருகிறது. கவியரசர் கண்ணதாசன் கூட,

"உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல"

என்று திரை இசைப்பாடலில் பாடியுள்ளமையை ஒப்பிட்டு அறியலாம். மேலும் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவைப்பாடலை நினைவூட்டுகிறது.

### இலங்கை நாட்டுப்புறப்பாடல்கள்

இராமலிங்கம் என்பவர் எடுத்துக் கொண்ட கடினமான முயற்சியின் பலனாக நூற்றுக்கணக்கான இலங்கை நாட்டுப் பாடல்கள் அச்சாகியுள்ளன, இலங்கை நாட்டுப்புறப் பாடல்களில் தமிழகத்து நாட்டுப்புறப் பாடலைப் போன்றே சாயல் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

"அண்ணா அடிச்சானோ அரைஞான் கயிற்றாலே
ஆண்பனையில் நுங்கே அணில் கோதா மாம்பழமே
கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண் வளராய்"

என்கிற அடிகள்

"அத்தை அடிச்சாளோ அல்லிப் பூச்செண்டாலே" என்கிற தமிழ் நாட்டுப் புறப்பாடல் அடிகளின் சாயலைப் பெற்று வந்துள்ளது.

### பள்ளு இலக்கியம்

பதினெட்டாம் நூற்றாண்டில் சின்னதம்பி புலவர் "பள்ளு நாடக நூல்" படைத்துள்ளார். குறவஞ்சிப்

பாடல்கள் தமிழ்நாட்டில் தோன்றிய போது, இலங்கையில் சேனாதிராய முதலியார் "நல்லைக் குறவஞ்சி" பாடினார்.

### ஆறுமுக நாவலர் (கிபி 1822 - 1889)

தமிழ்ப் பணிபுரிந்த இலங்கைச் சான்றோர்களில் ஆறுமுக நாவலரும் ஒருவர். சென்னைக்கு வந்து தமிழ்ப் பணி புரிந்தவர் இவர். தமிழ்ப்பாட சாலை அமைத்துப் பலர் தமிழ் படிக்க உதவியதோடு இவர் பாடநூல்களை அச்சிட அச்சுக்கூடமும் வைத்து அச்சுக் கூடத்திற்கு ஆகும் செலவைச் சரிப்படுத்த அரிசிப் பிச்சை எடுத்து அருந்தமிழ்த் தொண்டாற்றியவர். இவர் இலக்கணப் பிழை அற்ற தமிழில் தாமே நூலை எழுதினார்.

திட்டினாலும் பிழையற்ற தமிழில் திட்டுவார் என்பது அவரைப் பற்றிய பராட்டுரையாகும். சைவமும் தமிழும் தம்மிரு கண்களெனப் போற்றினார். நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதினார். பெரிய புராணம் திருவிளையாடற்புராண வசனம் ஆகியவற்றை உரைநடையில் எழுதினார். உரைநடை வளர்ச்சியில் முக்கியப் பங்கினைப் பெற்றிருந்தவர் இவர்.

### சி. வை. தாமோதரம் பிள்ளை (கிபி 1832 - 1901)

சென்னைப் பல்கலை கழகத்தில், அதுதொடங்கப்பட்ட 1857ல் முதன் முதலாகப் பி. ஏ. பட்டம் பெற்றவர்களில் ஒருவர். இவர் பனை ஓலைகளில் இருந்த பழைய தமிழ் ஏடுகள் சிலவற்றை வெளியிட்ட பெருமைக்குரியவர். இவர் நீதிபதியாக இருந்தவர். உதயதாரகை பத்திரிக்கைக்கும் ஆசிரியராக இருந்து தமிழத் தொண்டாற்றியவர்

### வி. கனகசபைப் பிள்ளை (1855 - 1906)

ஆங்கிலப் புலமை கொண்டவராகையால் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் இவர் 1800 ஆண்டுகட்கு முன் தமிழர் என்ற நூலை எழுதினார்.

### தி. க. கனகசபைப் பிள்ளை (1836 - 1922)

இலங்கை அளித்த வழக்கறிஞர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவர். இவர் வடமொழி வால்மீகி இராமயாணத்தின் கிஷ்கிந்தா காண்டத்தையும், சுந்தர காண்டத்தையும் தமிழில் மொழி பெயர்த்தார். கம்பராமாயண பால காண்டத்திற்கு உரை எழுதினார். கதிரை வேற்பிள்ளை என்னும் பெயரில் இரண்டு புலவர்கள் இருந்திருக்கிறார்கள். ஒருவர். நா. கதிரை வேற்பிள்ளை (1844-1907) மற்றொருவர் கு. கதிரை வேற்பிள்ளை (1829-1954)

நா. கதிரை வேற்பிள்ளை (1844-1907)

இவர் தமிழ் நாட்டிற்கு வந்து சைவ நூல்களையும், நாடகத்திற்கு உரையும் எழுதினார். கதிர்காமக் கலம்பகம் இயற்றினார். அகராதியைத் தொகுத்தார்.

### கு. கதிரை வேற்பிள்ளை (1829-1904)

இவர் யாழ்பாணத்திலேயே தங்கித் தமிழ்த் தொண்டு புரிந்தவர். தமிழ் அகராதி தொகுத்துள்ளார் இவர்.

### கன்னாகம் குமாரசாமிப் புலவர் (1854-1922)

சாணக்கிய நீதி, வெண்பா, இராமோதந்தம், மேக தூதக்காரிகை ஆகியவற்றை வடமொழியிலிருந்து மொழி பெயர்த்தவர். சிசுபாலவம் உரைநடையில் தந்தார். "தமிழ்ப் புலவர் சரித்திரம்" என்னும் வரலாற்று நூலும் தந்தவர் இவர். தண்டி, காரிகை, நீதிநெறி விளக்கம் போன்றவற்றிற்கு உரை எழுதியுள்ளார்.

### சுவாமி விபுலானந்தர் (1892-1947)

இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர் இவர். இயற்பெயர் மயில்வாகனர் நாடக நாட்டிய இலக்கண நூலாகிய "மதங்க சூளாமணியைப்" படைத்தவர் இவர். இசைக் கருவியாகிய யாழ் பற்றிய ஆய்வு நூலாக வந்த இவருடைய "யாழ் நூல்" தமிழிசைக்கு மறுபிறப்புத் தந்த நூலாகும். அவருடைய இறை வணக்கப் பாடலான "ஈசன் உவக்கும் இன்மலர்கள்" மூன்று என்பதை, உள்ளமாகிய தாமரை, கைகளாகிய காந்தள், கனிகளாகிய் நெய்தல் என்னும் மூன்று மலர்களே இறைவன்

விரும்புவது என்கிறார்.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ?
வெள்ளை நிறப் பூவும் அல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலம் அடி உத்தமனார் வேண்டுவது

## இலங்கை தந்த நாடகங்கள்

இலங்கயில் 18, 19ம் நூற்றாண்டுகளில் மிகுதியான நாடகங்கள் தோன்றின. ஆறுமுக நாவலரின் தந்தையாகிய கந்தப் பிள்ளை இராமவிலாசம் சந்திரகாரம் போன்ற இருபது நாடகங்களுக்கு மேல் இயற்றினார். இணுவிற் சின்னத்தம்பி என்பவர் "கோவலன் நாடகம்." எழுதினார்.

## நாவல் தந்த முன்னோடிகள்

"மோகனாங்கி" நாவலை எழுதிய திரிகோணமலை சரவண முத்துப்பிள்ளை, வீரசிங்கின் கதையை எழுதிய சி.வை. சின்னப்பா பிள்ளை, கொழுகொம்பு, முறைக்காரன் போன்ற நாவல்கள் எழுதிய வ. த. இராசரத்தினம் போன்றோர் நாவல் முன்னோடிகள் ஆவர்.

## சிறுகதை வளர்ச்சிக்கு உதவியவர்கள்

"கன்னிப் பெண்" "சிறுகதை தந்த நகுலன்" "கொட்டும்பனி" தந்த கதிர்காமநாதன், "தண்ணீரும் கண்ணீரும்" "பாதுகை" ஆகிய சிறுகதைகளைத் தந்த மொமினிக் ஜீவா, இருநூறு சிறுகதைகளுக்கு மேல் எழுதியுள்ள எஸ். பொன்னுத்துரை, "இலங்கையர் கோன்" என்னும் புனைபெயரில் சிறுகதைகளைத் தந்த சிவஞான சுந்தரம "வெண்சங்கு சிறுக்தைத் தொகுப்பு" தந்த கனக. செந்திநாதன் மற்றும் சிவபாத சுந்தரம், வைத்தியலிங்கம் ஆகிய சிறுகதை எழுத்தாளர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

## முதல் விஞ்ஞான நாவல்

இலங்கையில் தோன்றிய முதல் விஞ்ஞான நாவல் கே. எஸ். மகேசனின் "அந்தரத் தீவு" என்னும் நாவலாகும்.

## செ. கணேசலிங்கம்

புதுமையும், புரட்சியும் முற்போக்குச் சிந்தனைகளும் விரவி நிற்கும் படைப்புகளைத் தந்தவர் செ. கணேசலிங்கம். பொதுவுடைமைச் சமுதாயம், முதலாளி-தொழிலாளி போராட்டம், வாழ்வில் காணும் அவலங்கள் ஆகியவற்றை இவரது படைப்புக்கள் சித்தரித்துக் காட்டுகின்றன. செ. கணேசலிங்கம் "செவ்வானம்" என்ற நாவலில் ஒரு தொழிலாளியின் வாழ்க்கைப் போராட்டத்தை எடுத்துக் காட்டியுள்ளார். "நீண்ட பயணம்" நாவலில் தாழ்த்தப்பட்ட சாதியாரின் மனித உரிமைப் போராட்டம் நிண்ட பயணமாக உள்ளது. "சடங்கு" நாவலில் இலங்கைத் தமிரின் வாழ்வு மூடநம்பிக்கைகளுக்கும் கண்மூடி வழக்கங்களுக்கும் இரையாகி நலிவதைக் காட்டுகிறது.

## கவிதைகள்

மகாகவி என்ற கவிஞர் "வள்ளி" என்ற தொகுப்பில் பல் பாடல்களைப் பாடினார். அதற்குக் "குறும்பா" என்று பெயரிட்டார். இதில் ஐந்தடிகள் உள்ள பாடல்கள் நூறு அமைந்துள்ளன. சு. வேந்தனார் செல்வராசன் போன்ற கவிஞர்கள் தங்கள் கவிதைகளைப் படைத்துள்ளனர். "சிவானந்தன் கண்டறியாதது" என்னும் தலைப்பில் டைனமோ, கிராமபோன், போன்ற விஞ்ஞானப் பொருள் பற்றிய கவிதைகளைத் தந்தார் வேந்தனார் சிறுவர்களுக்கான,

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளி ஓடும் என்னைத் தூக்கித்
தோளில் போடும் அம்மா

என்பது போன்ற கவிதைகளைத் தந்துள்ளார்.

## மலேசியா சிங்கப்பூர் தந்த இலக்கியங்கள்

மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் எழுத்தைத் தொழிலாகத் கொள்ளாமல், பணத்துக்காக

எழுதாமல் பிற வேலைகளைப் பார்த்துக் கொண்டு எழுத்து தொண்டைத் தொடங்கியவர்கள். மலேசியா, சிங்கப்பூர் எழுத்தாளர்களின் தமிழ் வேறுபடவில்லை. இங்கு தமிழ் இலக்கியம் 1947 க்குப் பிறகு வளர்ச்சி பெற்றது. மலேசியா, சிங்கப்பூர் எழுத்தாளர்களுடைய படைப்புளில் ஒரு சிலவே நூல்களாக வெளிவந்துள்ளன.

## மலேசிய எழுத்தாளர்களின் சிறுகதைகள்

செ. குணசேகர் தந்தது "நினைவின் நிழல்" மு. துரைசாமி படைத்தது, "அன்பு அண்ணன்" புதிய படைப்பாளர்கள் தந்தது "அன்பு இதயம்."

## கவிதைகள்

சிங்கை முகிலனின் சிறுவர் பாடல்கள்
பரிதியின் வெண்ணிலா
சுவாமி இராமதாசரின் உரிமை முழக்கம்
மறைமுடி வல்லத்தரசுவின் இன்ப மலேசியா
உலகநாதனின் சந்தனக் கிண்ணம்

ஆகியவை குறிப்பிடத்தக்க கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

## குறுநாவல்

"செம்மண்ணும் நீல மலர்களும்", "நான் ஓர் இந்துப் பெண்", "நெஞ்சே நீ வாழ்க", ஆகிய குறுநாவல்கள் மலேசிய எழுத்தாளர்களால் படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வெளிநாடு தந்த இலக்கியங்கள் தமிழுக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

## பயிற்சி வினாக்கள்

1. இலங்கைத் தமிழ் தந்த இனிமைப் பெட்டகங்கள் யாவை?
2. இலங்கை நாட்டுப்புறப்பாடல்கள் பற்றி குறிப்பு வரைக
3. ஆறுமுகநாவலர், கதிரை வேற்பிள்ளை, விபுலானந்தர் பற்றிக் குறிப்பு எழுதுக
4. செ. கணேசலிங்கத்தின் தமிழ்த் தொண்டினை விளக்கு
5. மலேசிய, சிங்கப்பூர் எழுத்தாளர்கள் பற்றிக் குறிப்பிடுக

## கட்டுரை வினா

1. "வெளிநாடுகள் தந்த இலக்கியங்கள்" குறித்து ஒரு கட்டுரை எழுதுக
2. "அயல்நாடுகளில் தமிழ்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை தருக

# நாடக இலக்கியம்

## முன்னுரை

நாடகக் கலை என்பது பழங்காலத்திலிருந்தே இருந்து வந்துள்ள ஓர் அருமையான கலை. தொல்காப்பியர் மெய்ப்பாடுகளை விளக்குகையில், நாட்டியக் கலையைக் கொண்டே இலக்கியத்திற்குரிய மெய்ப்பாடுகளை விளக்கியுள்ளார். நாட்டியக் கலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வளர்ந்து வந்தது தான் நாடகக் கலை. பழந்தமிழ் நாட்டில் நாடகங்கள் பல இருந்திருக்க வேண்டும். ஆனால் நாடகநூல் ஒன்றும் கிடைக்காதது நமது துரதிருஷ்டமே. அவ்வப்போது நாடகங்களைக் கண்டு மகிழ்ந்த மக்கள் நாடக நூலைப் பாதுகாக்க தவறிவிட்டார்கள் சங்க அகப்பாடல்கள் நாடகப்பாங்கு கொண்டவைகளாக இருப்பதால் அவை ஒரு கூற்று நாடகங்கள் என்று கூறப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் ஆடல் பாடல் கலைகளில் வல்ல பாணர், கூத்தர், விறலியர், பொருநர், போன்றோர் இருந்ததை அறியமுடிகிறது.

## அடியார்க்கு நல்லார் கருத்து

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், சயந்தம், செயிற்றியம், முறுவல், மதிவாணர் நாடகத் தமிழ், குணநூல் கூத்தநூல் போன்ற நாடக நூல்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

**நாடகம் ஒரு விளக்கம்**

"நாடகம் என்பது கதை தழுவி வரும் கூத்து" என்கிறார் அடியார்க்கு நல்லலர். "கலைக்கு அரசு நாட்டின் நாகரிகக் கண்ணாடி பாமர மக்களின் பல்கலைக் கழகம், உணர்ச்சியை தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை" என்கிறார் அவ்வை சண்முகம். (நாடக கலை ப.14)

**சிலம்பில் நாடகம்**

கண்ணகி சிலைக்குக் கல் எடுத்துவந்து சேரன் செங்குட்டுவன் அயர்வைப் போக்கிக் கொள்ள கூத்தச் சாக்கையன் என்பவனது கூத்தைக் கண்டு மகிழ்ந்ததாகச் சிலமபில் குறிப்பிடப்படுகிறது. நாடக அரங்கருகளின் நீளம், அகலம், உயரம், தூண்களின் அமைப்பு, திரைச்சீலைகள் முதலியவை பற்றிய செய்திகளைச் சிலம்பில் காணமுடிகிறது. மாதவி தெய்வங்களின் கோலம் தாங்கி ஆடிய 11 வகையான ஆடல்களையும் சிலம்பு குறிப்பிடுகின்றது. 1. அல்லிக்கூத்து 2. கொடுகொட்டி 3. குடையாடல் 4 குடக்கூத்து 5. பாண்டரங்கம் 6. பல்லாடல் 7. துடிக்கூத்து 8. கடயம் 9. பேயடியாடல் 10. மரக்கால் ஆடல் 11. பாவையாடல் வேந்தர்களுக்குரிய வேத்தியல் கூத்து பொதுமக்கட்கு உரிய பொதுவியல் கூத்து ஆகியவை பற்றியும் சிலம்பு எடுத்துக் கூறியுள்ளது.

**பல்லவர் காலத்தில் நாடகம்**

பல்லவர் காலத்தில் நாடகக்கலை சிறந்து விளங்கியது. மகேந்தர வர்ம பல்லவன் "மத்த விலாசப் பிரகசனம்" என்னும் வடமொழி நாடகத்தை எழுதினான்.

"மகேந்திரவர்மனது சித்தன்னவாசல் ஓவியங்களால் கிபி 7ம் நூற்றாண்டில் பல்லவ நாட்டில் இருந்த நடனக் கலையைப் பற்றி நன்கு உணரலாம்" என்கிறார் மா. இராசமரிணக்கனார் (பல்லவர் வரலாறு ப. 285)

**சோழர் காலத்தில் நாடகம்**

முதலாம் இராச ராச சோழன் வைகாசி விழாவில் இராச ராசேசுவர நாடகம் நடத்த ஏற்பாடு செய்தான். விசய ராசேந்திர ஆச்சாரியனைத் தலைவனாகக் கொண்ட ஒரு நாடக குழு இருந்ததும், அவனுக்கு நெல் மானியம் வழங்கப்பட்டதும் கல்வெட்டு வழி அறிய முடிகிறது. இராசராச விஜயம் குலோத்துங்க சோழ நாடகம், பூம்புலியூர் நாடகம் போன்ற நாடகங்கள் பற்றியும் அறிய முடிகிறது.

**சரபோஜி மன்னர் காலத்தில்**

சரபோஜி மன்னர் காலத்தில் கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் எழுதிய சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் நடத்தப் பெற்றது. பள்ளு நாடகம் நடத்தப் பெற்றது. பள்ளு நாடகம் நொண்டி நாடகம் போன்றவை புகழ்பெற்ற நாடகங்களாகும்.

**பதினெட்டாம் நூற்றாண்டு நாடகம்**

அருணாசலக் கவிராயரின் இராம நாடகம், கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரம் ஆகியவை சிறப்புடைய நாடகங்கள். காசி விஸ்வநாத முதலியயார் டம்பாச்சாரி நாடகம், தாசில்தார் நாடகம் பிரம்ம சமாஜ நாடகம் போன்ற நாடகங்களை எழுதியுள்ளார். அப்பாவுப்பிள்ளை எழுதிய நாடகம் "அரிச்சந்திர விலாசம்" இராமச்சந்திரக் கவிராயர் சகுந்தலை விலாசம், தாருக விலாசம், பாரத விலாசம், போன்ற புராண நாடகங்களை எழுதினார். 18,19ம் நூற்றாண்டின் தொடக்கம் வரைப் பெண்கள் நாடகங்களில் பங்கு பெறவில்லை. ஆண்களே பெண் வேடமிட்டு நடித்தனர்.

**பிற்கால நாடகங்கள்**

19ம் நூற்றாண்டு 20ம் நூற்றாண்டுகளில் நாடகம் புத்துயிர் பெற்றது. சங்கரதாஸ் சுவாமிகள் நாற்பது நாடகங்கள் எழுதியுள்ளார். நாடகக் கலையில் அன்று மகாமேதை. நம் நாட்டில் தோன்றினார். அவர் தான் இன்று நமக்கெல்லாம் கலங்கரை விளக்கமாக விளங்கும் சங்கரதாஸ் சுவாமிகள் என்கிறார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் (தமிழ் நாடக மலர் ப. 12) 1867ல் தூத்துக்குடியில் பிறந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். "தமிழ் நாடகத் தந்தை" என்று போற்றப்பட்ட இவர், அபிமன்யு, சுந்தரி, சதி சுலோசனா, சதி அனுசூயா, பிரகலாதன், சிறுதொண்டர், அபிமன்யு என்ற நாடகத்தை ஒரே இரவில எழுதி முடித்த ஆற்றலுடையவர் இவர்.

### பம்மல் சம்பந்த முதலியார்

தமிழ் நாடக வளர்ச்சியில் பெருந்திருப்பத்தை ஏற்படுத்தியவர் இவர். பம்பல் சம்பந்த முதலியார் உரையாடலைப் பெருக்கிப் பாடல்களைக் குறைத்து, தெருக்கூத்து மரபைச் சுருக்கி, ஆங்கில மற்றும் மேனாட்டு மரபைப் பெரிதும் புகுத்தியதால் "தமிழ் நாடகப் பேராசிரியர்" எனப் போற்றப்பட்டார் என்கிறார் தமிழண்ணல். புதிய நோக்கில் (தமிழ் இலக்கிய வரலாறு ப.402) அவரே எழுதி நடித்த முதல் சமூக நாடகம் ஸ்ரீ புஷ்பவள்ளி. 90 நாடகங்களைப் படைத்துள்ளார் இவர். ரத்னாவளி, மனோகரா, கர்ணன், உத்தம பத்தினி, இரு நண்பர்கள், கள்வர் தலைவன் போன்ற நாடகங்களையும் சபாபதி என்கிற நகைச்சுவை நையாண்டி நாடகத்தையும் இவர் எழுதியுள்ளார். ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களாகிய மாக்பெத், ஹாம்லெட், வெனிஸ் வணிகன், விரும்பிய வண்ணமே போன்றவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். காளிதாசரின் வடமொழி நாடகங்களையும் தமிழாக்கம் செய்தார். 1891ல் "சுகுண விலாச சபை" என்ற நாடகச் சங்கத்தை ஏற்படுத்தி நாடகத்தை வளர்த்தவர் பம்மல் சம்பந்த முதலியார்

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், கலாவதி, ரூபாவதி, மனேவிஜயம் முதலிய நாடக நூல்களை இயற்றியதோடு, "நாடக இயல்" என்றும் நாடக இலக்கணம் பற்றிய நூலையும் எழுதியுள்ளார். மறைமலையடிகள். வடமொழி சாகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். விபுலானந்தரின் மதங்க சூளாமணியும் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணியம் நாடகம் லிட்டன் பிரபு எழுதிய ஆசிய வழியின் தழுவலாகும்.

### விடுதலைப் போராட்டக் கால நாடகங்கள்

விடுதலைப் போராட்ட காலக் கட்டத்தில் நாடகங்களுக்கு இடையிடையே சுதந்திர உணர்வை மக்களிடையே ஊட்டுகின்ற பாடல்களைப் பாடி நாடகங்கள் நடிக்கப்பெற்றன். தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலரின், "கதரின் வெற்றி", "பம்பாய் மெயில்", "சுதேசியக் கொடி" என்பது போன்ற நாடகங்கள அரங்கேற்றப்பட்டன.

### சமுதாயக் கொடுமைகளை விளக்கும் நாடகங்கள்

சமுதாயத்திலுள்ள சாதி வேறுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு முதலியவற்றின் கொடுமையை விளக்கம் நாடகங்கள் தோன்றின. அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, ஓர் இரவு, சந்திரமோகன், நல்ல தம்பி, நீதி தேவன் மயக்கம் முதலான நாடகங்கள் சமுதாயக் கொடுமைகளை விளக்கும் நாடகங்களாகும் வாழ்க்கையிலுள்ள ஊழல்கள் வெளிப்படுத்தி சிந்தனையைக் கிளறுகின்ற நாடகங்களை அரங்கேற்றியவர் அறிஞர் அண்ணா.

"பழமை தகர்த்துப் புதுமைகள் மணக்க ஒப்பற்ற சமத்துவ சமுதாயம் படைப்பதே இவர் நாடகங்களின் நோக்கு சொல்லழகு நம்மைச் சொக்கவைக்கும் பொருள் வளம நம்மைப் பூரிக்க வைக்கும்." என்றும் அண்ணாவின் நாடகங்களைப் பற்றி முது. ச. விமலானந்தம் குறிப்பிடுகிறார். (தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி ஐ. ப. 1130) கலைஞர் கருணாநிதி மந்திரிகுமாரி, மணி மகுடம், முதலிய நாடகங்களை எழுதியுள்ளார். பி. எஸ். ராமையா தேரோட்டி மகன், போலீஸ்காரன் மகள், பிரசிடெண்ட் பஞ்சாசரம், கைவிளக்கு போன்ற நாடகங்களைப் படைத்துள்ளனர்.

### கவிதை நாடகங்கள்

கவிஞர். சு. சுயம்புலிங்கம் எழுதிய "கலைமதி" புலவர் ஆ. பழனி, எழுதிய அணிச்ச அடிசாமி சிதம்பரனாரின் ஆபுத்திரன் அல்லது சமூக ஊழியன் த. அ. சுந்தர ராசனின் "வேங்கையின் மைந்தன்" போன்ற கவிதை நாடகங்கள் தமழில் வெளிவந்துள்ளன.

### நாடகக்கலையும் திரைப்படங்களும்

நல்ல நாடகங்கள் எழுதவல்ல எழுத்தாளர் பலரின் திறமைகளை எல்லாம் திரைப்படம் பயன்படுத்திக் கொண்டது. கலைஞர் கருணாநிதி, ஸ்ரீதர், பாண்டுரங்கன், முதலியவர்கள் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்தவர்கள் நல்ல பல நாவல்கள் திரைப்படத்துக்கு உரியவகையில அமைத்து நடிக்கப்படுகின்றன. திரைப்படம் இல்லையானால் அவைகள் எல்லாம் நாடகங்களாக எழுதப்பட்டிருக்கும்.

**நாடக வளர்ச்சியில் வானொலி**

நாடக வளர்ச்சியில் வானொலி நிலையம் ஆற்றி வரும் தொண்டு குறிப்பிடத்தக்கது. முழு நாடகங்கள் அவ்வப்போது ஒலிப்பரப்பட்டன. ஓரங்க நாடகங்கள் அரைமணி அளவில் வானொலியில் ஒலிப்பரப்புவதற்கு ஏற்றவனவாக அமைந்தன. ச.துக. யோகி, துறைவன், சுகி, நாணல் முதலானோர் ஓரங்க நாடகங்கள் பல இயற்றினார்கள். சுத்தானந்த பாரதி, பூரணம், விசுவநாதன், கோமல் சுவாமிநாதன், எஸ். டி சுந்தரம், பி. எஸ். ராமையா போன்றோரின் நாடகங்களும் குறிப்பிடத்தகுந்தவை.

மக்களின் மனநிலைக்கேற்ப நாடகங்கள் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சனைகளை மையக் கருவாகக் கொண்டுப் படைக்கப்படுகின்றன.

**தொலைக்காட்சி நாடகங்கள்**

வானொலி நாடகங்களைக் கேட்டு மகிழ்ந்த ரசிகர்கள் கூட்டமானது, நாடகங்களை நேரடியாகக் கண்டு களிக்கும் வண்ணம் ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்தது தொலைக்காட்சி. தொலைக்காட்சி வந்த பிறகு தொலைக்காட்சி நாடகங்கள் பல எழுதப் பெற்று அரங்கேற்றம் செய்யப்பட்டன. துப்பறியும் சாம்பு, சீமான் சுதர்சனம், போன்றோரின் புதினங்கள் தொலைக்காட்சி நாடகங்களாக வடிவம் பெற்றன. அகிலனின் சித்திரப்பாவை நா. பார்த்தசாரதியின் குறிஞ்சி மலர், ராஜம் கிரு'ணனின் கரிப்பு மணிகள் போன்ற புதினங்கள் தொலைக்காட்சி நாடகங்களாக மாறி, ரசிகர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தன.

இன்று இல்லத்தரசிகளையும் சிறு குழந்தைகளையும் கவர்ந்து விட்ட பெரிய தொடர்களாகிய (மெகா சீரியல்) சித்தி அண்ணாமலை, கோகுலம் வீடு, அன்புள்ள அப்பா, கேளுங்க மாமியாரே, மெட்டி ஒலி, என்பது போன்ற தொடர்கள் தொலைக்காட்சி நாடகங்களாக அமைந்து நாடக உலகிற்கு ஒரு புதுமை சேர்த்துக் கொண்டிருக்கின்றன. என்றால் அது மிகையாகாது வீதி நாடகங்கள் அரங்கில்லாமல், ஒப்பனை இல்லாமல், ஐந்து பத்து நிமிட தெரு நாடகங்களாக நடைப்பெற்று வருகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

1. பல்லவர் கால, சோழர் கால நாடகங்கள் பற்றி விளக்குக
2. பதினெட்டாம் நூற்றாண்டு நாடகங்கள் பற்றிக் குறிப்பு வரைக
3. சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் பற்றிக் குறிப்புகள் தருக

**கட்டுரை வினா**

1. தமிழ் நாடக இலக்கியம் பற்றி ஒரு கட்டுரை எழுதுக
2. நாடக நூலாசிரியர்கள் பற்றிக் கட்டுரை வரைக

## கதை இலக்கியம்

**முன்னுரை**

கதை என்பது யாவரும் விரும்பம் ஒரு வகை இலக்கியம். பாட்டிமார்களின் கதை, பழங்கதைகள் ஆகியவற்றிலிருந்து வளர்ந்து வந்த சிறப்புடையது கதை இலக்கியம். "கதை மனித சமுதாயத்திற்கு மிகப் பழமையான சொத்து. பழந்தமிழர்க்கும் கதைச் செல்வம் உண்டு. சிறிய கதைகள் சில பழந்தமிழ்க் காப்பியங்களிடையே காணப்படுகின்றன" என்கிறார் டாக்டர் மு. வரதராசனார். (தமிழ் இலக்கிய வரலாறு பக். 295-296) பின்னர். வீரமாமுனிவரின் "பரமார்த்த குரு கதைகளும், விநோத ரசமஞ்சரி, ஷகதா சிந்தாமணி என்னும் கதைத் தொகுப்புகளும் வெளிவந்தன.

**சிறுகதை**

பழங்கதைகள் எல்லாம் ஒருவன் அல்லது ஒருத்தி பிறந்தது முதல் செய்த செயல்கசை சொல்லி ஒரு ஊர்ல. என்று தொடங்கி - மங்கலமான முடிவைச் சொல்லி, வாழ்க்கை வரலாறு போல் அமைந்தவை. சிறுகதை என்ற இந்தப் புதிய இலக்கிய வகையை, எட்கார் ஆலன்போ, ஓ. ஹென்றி போன்றோரின் சிறுகதைகளையொட்டித் தமிழில் தோற்றுவித்த பெருமைக்குரியவர் வ. வே. சு. ஐயர் "மங்கையர்கரசியின் காதல்" முதலிய கதைகள் என்ற தலைப்பில் அவர் படைத்த சிறுகதைகள்

முதலில் தோன்றின 1927 ல் "குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை" என்னும் அவருடைய சிறுகதை நெஞ்சை உருக்கும் துயரக் கதையாகும்.

**சிறுகதையின் இலக்கணம்**

ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாக இருப்பது சிறுகதை.

"சிறுகதை என்பது வாழ்க்கையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை, ஓர் உணர்ச்சியைக் கருவாகக் கொண்டு பின்னப்படுவதாகும். ஒரு பாத்திரம், ஒரு மனவுணர்ச்சி, ஒரு நிகழ்ச்சி என் ஏதேனும் ஒன்றை மட்டுமே நிலைக்களனாக வைத்துக் கொண்டு அதன் மீது புனையப்படுவதே சிறுகதையாகும். கதையின் குறிக்கோள் அல்லது பயனும் ஒன்றாக இருக்க வேண்டும்." என்கிறார் தமிழண்ணல். (புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு ப. 387)

சிறுகதையில் வருணனைகளுக்கு இடமில்லை. சொற்சொட்டுதான் மிக முக்கியம். தொடக்கம், வளர்ச்சி, முடிவு, எல்லாமே கட்டுக் கோப்பாக அமைய வேண்டும். கதையைப் படித்து முடிக்கும் போது அதில் ஒரு முழுமையும், நிறைவும் இருத்தல் வேண்டும்.

**புதுமைப்பித்தனின் பங்கு**

சொ. விருத்தாச்சலம் என்ற இயற்பெயரைக் கொண்டவர் புதுமைப்பித்தன். அவருடைய புதிய கருக்கள், அவற்றிற்குப் புதிய வடிவங்கள் அவற்றை எழுதுவதற்கு அவர் மேற்கொண்ட புதுப்புது உத்திகள், புதுவகையான நடை எல்லாம் ஒருங்கமைந்திருக்கும் கதைகளைப் படைத்த அவருக்குப் புதுமைப்பித்தன் என்ற பெயர் நன்கு பொருந்தும்.

"வழக்கு இழந்த பழைய தமிழ்ச் சொற்களை விலக்கி வழக்கில் உள்ள சொற்களைக் கையாண்டு தமிழ் நடைக்குப் புதிய விறு விறுப்பைத் தந்தவர் புதுமைப்பித்தன். நகைச்சுவையும், நையாண்டியும், அவர்க்கு குற்றவேல் செய்தன என்று சொல்லத்தக்கவாறு அவருடைய கவிதைகளில் இயல்பாக வந்து அமைந்தன." என்கிறார் டாக்டர் மு. வரதராசனார். (தமிழ் இலக்கிய வரலாறு பக் 297-298)

"வாழ்க்கையை நேரே பார்த்து எழுதியன என்று மெய்ப்பித்து, உயிருடன் துள்ளிக் குதிப்பன போன்றவை புதுமைப்பித்தன் கதைகள். அவரைச் சிறுகதை மன்னன் என்றே போற்றுவர்-" என்கிறார் தமிழண்ணல் (புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு பக்.389)

"புதுமைப்பித்தன் கதைகளில் வறுமையின் விளைவான இன்னல்களும் இடம் பெறும். பலவகைச் சமூகச் சிக்கல்களும் விளக்கப்படும். மக்களின் மூடநம்பிக்கைகளும் சாடப்படும்." என்கிறார் டாக்டர். மு. வரதராசன், (தமிழ் இலக்கிய வரலாறு ப.299) பொன்னகரம், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் சாபவிமோசனம், தெருவிளக்கு, போன்ற புதுமைப்பித்தன் கதைகள் வாசகர்களிடையே மிகுந்த பாராட்டைப் பெற்றவை.

**ராஜாஜி**

சமுதாய முன்னேற்றச் சிந்தனையுள்ள சிறுகதைகளைப் படைத்தவர் ராஜாஜி. அன்னையும் பிதாவும் தேவானை போன்ற கதைகளை இவர் எளிய நடையில் எழுதியுள்ளார்.

**கு. ப. ராசகோபாலன்**

குடும்ப வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும், உள்ளத்து உணர்ச்சிகளையும் சித்தரித்துக் காட்டுவதில் வல்லவர் இவர். விடியுமா? என்ற சிறு கதையில் மனைவிக்குப் பொழுது விடிவதையும் வாழ்க்கை விடியாத நிலையையும் சொல்லி முடிக்கிறார் கு.ப.ரா. ஆண், பெண், உறவை எடுத்துக்காட்டும் கதைகளிலும் பண்பாட்டின் எல்லைக்குள் நின்று பாத்திரங்களின் மனநிலைகளையும், செயல்களையும் விளக்குகிறார்.

**பி. எஸ். ராமையா**

300க்கும் மேற்பட்ட சிறுகதைகளைத் தந்த பி. எஸ். ராமையாவின் "நட்சத்திரக் குழந்தைகள்" புகழ் பெற்ற சிறுகதையாகும்.

## கல்கி

கல்கி என்ற புனைப்பெயர் கொண்ட ரா. கிருருஷ்ணமூர்த்தி படைத்த சிறுகதைகளில் கேதாரியின் தாயார் என்னும் கதை மூட நம்பிக்கைகளை எதிர்க்கும் மனநிலையை எடுத்துக் காட்டியுள்ளார். பிராமண விதவைப் பெண்கள் படும் அல்லல்களையும் எதிர்க்கும் புரட்சிகரமான நோக்கு உடைய கதைமாந்தர்களையும் இவருடைய கதைகளில் காண முடிகிறது.

வீணை பவானி, கணையாழியின் கனவு, திருவழுந்தூர் சிவக்கொழுந்து முதலிய சிறுகதைகளும் பலருடைய நெஞ்சைக் கவர்ந்தவை.

## மௌனி

மௌனியின் எழுதும் போக்கும், கதைக் கருக்களும் வேறுபட்ட போக்கினை உடையவை. அழியாச்சுடல், மனக்கோலம், சாவில் பிறந்த சிருஷ்டி, பிரபஞ்சகானம் முதலிய கதைகளை அவர் ஆழ்ந்த உணர்வோடு படைத்துள்ளனர். ந. பிச்சமூர்த்தி, நீதிமன்ற அனுபவங்களையும், சட்ட அறிவையும் கொண்டு சிறந்த கதைகளைப் படைத்தவர் ந. பிச்சமூர்த்தி நீதிமன்ற அனுபவங்களையும், சட்ட அறிவையும் கொண்டு சிறந்த கதைகளைப் படைத்தவர் ந. பிச்சமூர்த்தி. இவருடைய முள்ளும் ரோஜாவும் கொலு பொம்மை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## தி. ஜானகிராமன்

தஞ்சை மாவட்ட கிராமப் பேச்சுமொழியைத் தம்முடைய சிறுகதைகளில் பயன்படுத்தியுள்ளார். தி. ஜானகிராமன் "அவலும் உமியும்", "சிவப்பு ரிக்ஷா", "தேவர் குதிரை", "கோபுர விளக்கு" போன்ற சிறுகதைகளைப் படைத்துள்ள இவருடைய பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு அக்பர் சாஸ்திரி என்பது. இவருடைய கதைகள் யாவும் திட்பமான கலை வடிவில் அமைந்துள்ளன.

## ஜெயகாந்தன்

ஜெயகாந்தன் எழுதிய சிறுகதைகள் சில நோக்கங்களுக்காக எழுதப்பட்டவை போல் தோன்றினாலும், அவருடைய படைப்புகள் சிறுகதையின் இலக்கணம் வழுவாமல் அழகிய கலை வடிவம் பெற்றுத் திகழ்கின்றன. "தேவன் வருவாரா?" "பிரம்மோபதேசம்", "பகல்நேரப் பாசஞ்சர்" போன்ற கதைகளை ஜெயகாந்தன் படைத்துள்ளார். எனது கதைகள் பொதுவாகப் பிரச்சனைகளின் பிரச்சனை என்கிறார் ஜெயகாந்தன்.

## பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்

பெண்களின் வாழ்வியல் சிக்கல்களையும், மனப்போராட்டங்களையும், குடும்பங்களில் பாசத்துக்கும் பந்தத்துக்குமிடையில் போராடும் நிலைகளையும் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் பிரபலித்துக் காட்டுகின்றன.

புதுமைக் கலையார்வத்துடன் சிறுகதைப் படைப்புகளைத் தந்தவர் கோமகள் (ராஜலட்சுமி) கானல்நீர் என்பது அவருடைய சிறந்த படைப்பாகும். மேலும் லட்சுமி, அம்பை, தமயந்தி, அனுராதா ரமணன், ஆர். சூடாமணி போன்ற பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் சமுதாயத்தில் நிலவும் சிக்கல்களைச் சித்தரிப்பவனாக அமைந்துளன.

## சு. சமுத்திரம்

மனிதாபிமானம், சமுதாய முன்னேற்றச் சிந்தனைகள் ஆகியவற்றைக் கொண்டு சிறுகதைகளை உருவாக்கியவர் சு. சமுத்திரம், சாக்கம்மா, தலைப்பாகை போன்ற சிறுகதைத் தொகுப்புக்களை அவர் வெளியிட்டுள்ளார்.

## முற்போக்கு எழுத்தாளர்கள்

மேலாண் மறைநாடு என்ற ஊரில் பிறந்த மேலாண்மை பொன்னுசாமி 1992 முதல் தம்முடைய எழுத்துப் பணியினைச் செய்து வருகின்றார். இவருடைய எட்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இவருடைய சிறுகதைத் தொகுப்பு நூலான "மானுட பிரவாகம்" திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இளங்கலை மாணவர்க்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்தது. நானே ஒரு பாத்திரமாக வந்திருப்பது சில கதைகளில் உண்டு. குறிப்பாகத் தாய்மதி என்னும் சிறுகதைத் தொகுப்பில் "காட்டு ருசி" என்னும் கதையில் வரும் சீனிவாசன் முழுக்க நான்தான் என்று ஆசிரியர் பொன்னுசாமி குறிப்பிடுகிறார்.

வண்ண நிலவன், வண்ணதாசன், பூமணி, பொன்னீலன், பா. செய்ப்பிரகாசம் போன்ற சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புக்கள் தமிழ்ச் சிறுகதை உலகிற்குப் பெருமை சேர்க்கும் படைப்புகளாகும்.

## முடிவுரை

பல்வேறு நிலைகளில் சிறுகதையின் வளர்ச்சியானது ஏற்பட்டிருப்பதை நாம் அறிய முடிகிறது. மக்களின் மன உணர்வு போக்கினையும், பேச்சு வழக்கினையும் வட்டாரப் பண்புகளின் தாக்கத்தையும் வளர்ந்து வருகிற சிறுகதைகளில் நாம் காண முடிகிறது.

## புதின இலக்கியம்

உரைநடை வளரத் தொடங்கிய பொழுது, புதுமையானதொரு இலக்கிய வடிவமான புதினம் என்பது தோன்றலாயிற்று. புதினம் என்னும் தமிழ்ச்சொல் நாவல் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையானது. நாவல் என்னும் சொல்லானது Novella என்னும் இலத்தீன் மொழிச் சொல்லிருந்து தோன்றியது. என்பர். ஆங்கில மொழியில் 1740 ஆம் ஆண்டு தோன்றிய "பாமெலா" என்பதே முதல் புதினமாகக் கருதப்படுகிறது. அப்புதினத்தை இயற்றியவர் ரிச்சட்சன். அவரைத் தொடர்ந்து சர்வால்டர் ஸ்காட், தேக்கரே, மெரிடித், சார்லஸ், டிக்கன்ஸ் போன்றவர்கள் புகழ்பெற்ற புதினங்கள் இயற்றினார்கள். இந்தியாவில் கவிஞர் தாகூரும் மராட்டிய எழுத்தாளர் காண்டேகரும் புகழ்மிக்கப் புதினங்களைப் படைத்தனர். என்கிறார் பேராசிரியர் யோ. துரைராசன் (தமிழ் இலக்கிய வரலாறு ப. 165) சிறந்த புதினமானது பொதுமக்களுக்கு வெறும் கதையாகவும், அறிஞர்க்கு கருத்து விளக்கக் கதையாகவும் கற்று ஆழ்ந்துணர வல்லவருக்கு அனுபவத்தால் தெளியும் உண்மை விளக்கமாகவும் அமைய வேண்டும் என்பர்.

## தமிழில் முதல் நாவல்

1876ல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை முதல் 'முதலாகத் தமிழுக்கு நாவல் இலக்கியத்தை தந்தார். அவருடைய "பிரதாப முதலியார் சரித்திரம்" என்பது தமிழில் முதல் நாவலாகத் திகழ்கிறது. 1887ல் இவரே 'சுகுண சுந்தரி என்ற நாவலையும் படைத்தார். இவரை தொடர்ந்து 1896ல் ராஜம் அய்யர், "கமலாம்பாள் சரித்திரக்கதை" என்னும் நாவலையும் படைத்தார். இது நடப்பியல் பாங்கில் அமைந்துள்ளது. வாழ்க்கையை உள்ளவாறு உணர்த்தும் மாதவையா 1898ல் "பத்மாவதி சரித்திரம்" என்னும் நாவலைத் தந்தார். இதில் அவருடைய சீர்திருத்த தாக்கம் வெளிப்படுகிறது. ஆரணி குப்புசாமி முதலியார், வை. மு. கோதை நாயகி அம்மையார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் போன்றவர்கள் திகைப்பூட்டும் நிகழ்ச்சிகளைக் கொண்ட துப்பறியும் புதினங்களை எழுதினார். மறைமலையடிகள் "கோகிலாம்பாள் கடிதங்கள்", "குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி" என்னும் புதினங்களைப் படைத்தார்.

## கல்கி (1899-1954)

கல்கி என்ற புனை பெயர் கொண்டவர் ரா. கிருஷ்ணமூர்த்தி. புதினன உலகில், புதிய பாணியைக் கையாண்டு கதையை நகர்த்திச் செல்லும் போக்குடையவராகக் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி திகழ்ந்தார். கல்கி வார இதழ் வழியாக புதின இலக்கியத் தென்றலை மக்கள் மத்தியில் மெல்லத் தவழ்ந்திடும் வண்ணம் செய்த பெருமைக்குரியவர் கல்கி. வரலாற்றையும் கற்பனையையும் ஒருங்கிணைந்து வரலாற்றுப் புதினங்கள் பலவற்றை உருவாக்கிய பெருமை கல்கிக்கு உண்டு. வரலாற்றுக் காலத்திற்கே வாசகர்களை அழைத்துச் சென்று, அந்த நிகழ்வுகளை வாசகர்கள் மனக்கண்ணில் கண்டு, அதனோடு ஒன்றி விடுகின்ற அளவுக்கு அருமையாக நாவலைப் படைத்தவர் கல்கி. இவருடைய சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், போன்ற நாவல்கள் கல்கியினுடைய சிறந்த படைப்புக்களாகும். சிவகாமி என்ற கலையரசி - சிற்பியின் மகள் - ஒருத்தியின் வளர்ச்சியும் போராட்டமும் இன்னலும் குறிக்கோளும் நாவலின் தரத்தை உயர்த்தப் போதுமானதான உள்ளன. என்கிறார் டாக்டர் மு. வரதராசன் (தமிழ் இலக்கிய வரலாறு பக். 290) தியாகபூமியும், அலை ஓசையும், 20ம் நூற்றாண்டுத் தமிழகத்தை படம் பிடித்துக் காட்டுபவை.

## விடுதலைப் போராட்ட கால நாவல்கள்

சுதந்திரப் போராட்டத்தைச் சித்தரிக்கின்ற நாவல்களைப் படைத்த எழுத்தாளர்கள பலர். நாராயணத் துரைக் கண்ணனின் "தியாகக் கொழுந்து", அகிலனின் "நெஞ்சின் அலைகள்"

நா. பார்த்தசாரதியின் "ஆத்மாவின் ராகங்கள்", ர. சு. நல்ல பெருமாளின் "கல்லுக்குள் ஈரம்' ஆகியவை விடுதலைப் போராட்டக் கால நாவல்களாகும்.

**அகிலனின் நாவல்கள்**

மனிதப் பண்புகளையும் எழுத்தாளர்களின் போராட்டங்களின் உணர்ச்சி கலந்த நடையில அகிலன் படைத்துத் தந்த நாவல் "பாவை விளக்கு", சித்திரப்பாவை, சிநேகதி, போன்ற நாவல்களையும் அகிலன் எழுதியுள்ளார். கயல்விழி, வேங்கையின் மைந்தன், வெற்றித் திருநகர், போன்ற வரலாற்று நாவல்களையும் அகிலன் தமிழ் இலக்கிய உலகினுக்கு தந்திருக்கிறார். விடுதலை இயக்கத்தைப் பின்னனியாக வைத்து எழுதப் பெற்ற அகிலனின் புதினம், நெஞ்சின் அலைகள், சித்திரப்பாவை என்ற புதினத்திற்குத் தமிழில் ஞானபீட விருது கிடைத்தது.

**கோ. வி. மணிசேகரன்**

அக்கினிக் கோபம், பீலிவிளை, செம்பியன் செல்வி ஆகிய வரலாற்று நாவல்களைத் தந்தவர். கோ. வி. மணிசேகரன். இவருடைய நடையில் ஒரு மிடுக்கு அமைந்திருக்கம்.

**தேவன்**

தேவன் என்னும் புனைப்பெயருடைய மகாதேவன் எட்டுச் சமுதாய நாவல்களை எழுதினார். "துப்பறியும் சாம்பு", "மிஸ்டர் வேதாந்தம்", போன்ற நாவல்கள் தேவனின் படைப்புக்களாகும்.

**டாக்டர் மு. வரதராசனார்.**

வாழ்க்கையில் நடைபெறுகின்ற யாதார்த்தமான நிகழ்ச்சிகளைக் கொண்டு நாவல்களைப் படைத்து வாசகர் மத்தில் புதிய உணர்ச்சிகளை ஊட்டும் வண்ணம் நாவல்களைப் படைத்தவர் மு. வரதராசனார். தமக்கெனத் தனி வழியை வகுத்துக் கொண்டவர் மு. வரதராசனார். அறக் கருத்துக்களையும், சமுதாயக் கயமைப் பண்புகளையும் இவர் எடுத்துக்காட்டினார். கள்ளோ காவியமோ, "அகல்விளக்கு", "கரித்துண்டு", "கயமை", "மலர்விழி", "மண்குடிசை", "அல்லி", "நெஞ்சில் ஒரு முள்", போன்ற 14 நாவல்களை டாக்டர் மு. வ. படைத்துள்ளார்.

சிதம்பர சுப்பிரமணியன் இதயராம் க. நா. சுப்பிரமணியத்தின் ஒரு நாள், பொய்த் தேவு, போன்ற நாவல்களும், விக்கிரமனின் நந்திபுரத்து நாயகி, ஆவலாய் அழகன், நந்தி வர்மன் காதலி, அருள்மொழி நங்கை, ஆகிய நாவல்களும் குறிப்பிடத்தக்கவை.

**சாண்டியல்யன்**

சாண்டியல்யன் சரித்திரப் புதினங்கள் என்ற பெயரில் பல எழுதியுள்ளார். இவருடைய ராஜ பேரிகை வங்க மாநிலத்தின் பரிசு பெற்றது. வாசகர்களின் ஆர்வத்தை வளர்த்துச் சிருங்காரச் சுவை கூட்டி வரலாற்றையும் சிறிது சுட்டிக் காட்டி நாவல்களைப் படைத்தவர் சாண்டியல்யன். யவனராணி, கடல்புறா, மன்னன் மகள், மலையரசன், ஜீவ பூமி, கன்னி மாடம், பல்லவ திலகம்., போன்ற நாவல்கள் இவருடய படைப்புகளாகும்.

**வட்டார வழக்கு நாவல்கள்**

தென் திருவாங்கூரில் தமிழர்கள பேசும் பேச்சு மொழியில் நாவல்களைப் படைத்து வருபவர் ஹெப்சியா ஜேசுதாசன். புத்தம் வீடு, டாக்டர் செல்லப்பா, அனாதை போன்ற அவருடைய நாவல்கள், தமிழ் இலக்கிய உலகிற்குக் கிடைத்த பெருமைக்குரிய நாவல்களாகும். கொங்குநாட்டுப் பேச்சு மொழியைக் கையாண்டு ஆர். சண்முக சுந்தரம், நாகம்மாள், அழியாக் கோலம்., ஆகியவற்றைப் படைத்துள்ளார். நீலபத்மநாபனின் தலைமுறைகள் கி. ராஜநாராயணின் கோபல்ல கிராமம், பொன்னீலனின், கரிசல் கொள்ளைக்காரர்கள் ஆகியவை வட்டார வழக்குப் புதினங்களாகும்.

**ஜெயகாந்தன்**

சமுதாயப் பிரச்சனைகைளைத் தம்முடைய நாவல்களில் கதைப் பொருளாகக் கொண்டு பல நாவல்களைப் படைத்துள்ளார். சமுதாயத்தில் காணும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்ற இவருடைய எழுத்து வன்மை நிகரற்றது. சில நேரங்களில் சில மனிதர்கள், பாரீசுகட்குப் போ, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம், ரிஷிமூலம் போன்ற நாவல்களைத் தந்தவர் ஜெயகாந்தன்.

### தி. ஜானகி ராமன்

தஞ்சை வட்டார மண்ணின் மணம் கமழும் விதத்தில் அந்த வட்டாரத்து மக்களின் வாழ்வியலைச் சித்தரிக்கும் நாவலகளைப் படைத்தவர் இவர். அம்மா வந்தாள், செம்பருத்தி, மரப்பசு, அன்பே ஆரமுதே போன்ற இவருடைய நாவல்கள் குறிப்பிடத்தக்கவை.

### இந்திரா பார்த்தசாரதி

டில்லி வாழ் மக்களின் வாழ்வைப் பிரபலிக்கும் வகையில் இந்திரா பார்த்தசாரதி தம்முடைய நாவல்களைப் படைத்துள்ளார். தந்தரபூமி, குருதிப்புனல், மாயமான் வேட்டை தீவுகள் போன்ற நாவல்களை இந்திரா பார்த்த சாரதி எழுதியுள்ளார்.

### அறிஞர் அண்ணா

தமக்கே உரிய தனிப் பாணியில் நாவல்களைப் படைத்தவர் அறிஞர் அண்ணாதுரை. ரங்கோன் ராதா, பார்வதி பி.ஏ., போன்ற நாவல்களில் பெண்களையே தலைப்பாக்கி பெண்மையின் ஏற்றத்தைச் சமுதாயத்திற்கு உணர்த்திக் காட்டியவர் அறிஞர் அண்ணா.

### கலைஞர் மு. கருணாநிதி

கருணாநிதி எழுதிய வெள்ளிக்கிழமை, ரோமாப்புரிப் பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர் போன்ற புதினங்கள் தமிழக இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளன.

### மொழிபெயர்ப்புப் புதினங்கள்

தாகூர், சரத்சந்திரார், காண்டேகர், மறைமலையடிகள், கே.எம். முனி போன்றோரின் புதினங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ரெயின்ரங்கு எழுதிய நூலை தழுவித் தமிழில் குமுதவல்லி என்ற புதினத்தைப் படைத்தார். மாக்சிம் கார்க்கியின் தாய் என்ற புதினத்தை இரகுநாதன் தமிழில் மொழிபெயர்த்தார். தகழி சிவசங்கரனின் புகழ்பெற்ற புதினமான செம்மீன் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. டால்ஸ்டாயின் போரும் அமைதியும் பேர்ல்ஸ் பர்க்கின் நல்ல நிலம், வால்டர்ஸ்காட்டின் ஐவன்கோ போன்றவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இன்னும் புதிய புதிய புதினங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. மாத வெளியீடாக வரும் புதினங்கள் எண்ணிக்கை கணக்கிலடங்கா

### இன்றைய காலச்சூழலைப் பிரதிபலிக்கும் புதின ஆசிரியர்கள்

பாலகுமாரன், இந்திரா பார்த்தசாரதி, ரமணிச்சந்திரன், திலகவதி, ஜெயமோகன், தோப்பில் முகம்மது மீரான், மேலாண்மை பொன்னுச்சாமி, நாஞ்சில் நாடன், பூமணி பாவண்ணன் செயோகநாதன், பெருமாள் முருகன் போன்றவர்கள் காலச்சூழலைப் பிரதிபலிக்கும் வண்ணம் எழுதி வருகின்றனர். புதினங்கள் நிலைத்து வாழும் என்பதில் ஐயமில்லை

### பெண் புதின ஆசிரியர்கள்

பெண் புதின ஆசிரியர்களுள் மிக முந்தியவர் வை. மு. கோதைநாயகி அம்மையார், சண்பகவிஜயம், கடமையின் எல்லை, ஆகியவை இவருடைய படைப்புக்கள், லட்சுமி என்ற திரிபுரசுந்தரி கட்டுக்கோப்பான குடும்பப் புதினங்களை எழுதினார். காஞ்சனையின் கனவு, மிதிலா விலாஸ், பவானி, அடுத்த வீடு போன்றவை குறிப்பிடத்தக்க இவருடைய புதினங்கள் ஆகும்.

ராஷம் கிருஷ்ணன் ஆழமாக வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கிச் சிறந்த புதினங்களைப் படைத்துள்ளார். குறிஞ்சித் தேன், வளைக்கரம், கரிப்பு மணிகள், வேருக்கு நீர் போன்ற புதினங்களை எழுதியுள்ளார் இவர். ஆர். சூடாமணி மனதுக்கு இனியவள், சோதனையின் முடிவு ஆகியவற்றைப் பெண் எழுத்தாளர்களின் புதினங்கள் தமிழ் இலக்கிய உலகிற்குக் கிடைத்துள்ளன.

### தமிழ் உரைநடை இலக்கியம்

தமிழில் செய்யுள் நூல்களே பெரும்பான்மையாக இடம் பெற்றிருந்தன. மக்கள் வாழ்வியல், மருத்துவம், சோதிடம், அறிவியல் பற்றிய செய்திகள் எல்லாம் செய்யுள்களிலேயே இருந்தன.

பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியமானது நான்கு வகை உரைநடைத்

தமிழில் இருந்ததாகக் கூறுகிறது.

1. பாடல்களுக்கு எழுதும் உரைநடை
2. பாடல்களின் இடையே அமையும் உரைநடை
3. கற்பனைக் கதைகளுக்கான உரைநடை
4. நகைச்சுவைக் கதைகளுக்கான உரைநடை

என்ற நால்வகை உரைநடைகள் இருந்தன

சிலம்பினை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று கூறுவர். உரைநடைத் தொடக்கம் இது. பின்பு இறையனார் களவியல் உரை, உரையாசிரியர்களின் இலக்கண, இலக்கிய உரைகள், இடைக்காலத்தில் மணிப்பிரவாள நடை.

### பத்தொன்பதாம் நூற்றாண்டு ஏற்பட்ட வளர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியில் தான் தமிழில் உரைநடை நூல்கள் தோன்றின. அவை கட்டுரைகளாக, சிறுகதைகளாக, நெடுங்கதைகளாக, நாடகங்களாக, வளர்ந்து பெருகின.

### ஐரோப்பியர் வருகையால் ஏற்பட்ட வளர்ச்சி

ஐரோப்பியர் வருகையும், செல்வாக்கும், ஏற்பட்ட பின்பே உரைநடை தனக்கேயுரிய பண்புடன் வளரக் காண்கிறோம். வீரமாமுனிவர், வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குரு கதை போன்ற பலவற்றை எழுதித் தமிழ் உரைநடையின் தந்தை என்று அழைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் சிறந்த உரைநடையை எழுதித் தமிழுக்கு வளமும் வலுவும் சேர்த்தார்.

### இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை

இருபதாம் நூற்றாண்டு, தமிழ் உரைநடையின் பொற்காலமாகும். பரிதிமாற் கலைஞர், கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தரம் போன்ற உரைநடை வல்லாளர்கள் பலர் இருந்தனர். பரிதிமாற் கலைஞர் தமிழ் மொழி வரலாறு, தமிழ்ப் புலவர் சரித்திரம், போன்ற நூல்களை எழுதினார்.

### உரைநடைச் செல்வர் திரு. வி. க.

தமிழ் உரைநடை என்றால் திரு.வி.க.வைச் சுட்டாமல் இருக்க முடியாது என்கிற அளவுக்குத் தனித்துவம் கண்டார் அவர். கருத்துக்களை வரைமுறைப்படுத்தித் தகுந்த தலைப்புகள் தந்து இனிய தமிழில் எழுதுவார். அவருடைய உரைநடை நூல்களில் தூய்மையும், செம்மையும், உயிரோட்டமும் கலந்து செல்லும் தமிழ் நடையைக் காண முடியும். மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை முதலிய தமிழ் நூல்களை எழுதினார்.

### மறைமலையடிகளின் தனித்தமிழ் உரைநடை

சுவாமி வேதாச்சலம் என்ற பெயரைத் தமிழ்ப்படுத்தி மறைமலையடிகள் என்று மாற்றிக் கொண்டவர் இவர். இவருடைய உரைநடையில் நீண்ட சொற்றொடர்கள் அமைந்தாலும், திருத்தமாகவும் தெளிவாகவும் அவை அமையும். வடமொழிச் சொற்கள் நீங்கிய செறிவுள்ள, செழுமையான உரைநடையில் இவர் எழுதினார். முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, குமுதவல்லி, கோகிலாம்மாள் கடிதங்கள், தமிழர் மதம், தமிழ்த்தாய் ஆகிய உரைநடைச் செல்வங்களை ஆக்கித் தந்தவர் இவர். தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை இவர்.

### ரா. பி. சேதுப்பிள்ளை

சொல்லின் செல்வர் என்று அழைக்கப்பெற்ற இவர், மிகச் சிறந்த பேச்சாளர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் இவர். இவருடைய பேச்சிலும், எழுத்திலும், எதுகை மோனைகளும் இலக்கியத் தொடர்களும் அடுக்கு மொழிகளும் வந்து அழகு படுத்தும் ஊரும் பேரும், தமிழின்பம், வீரமாநகர், தமிழ் விருந்து, தமிழர் வீரம், வேலும் வில்லும், போன்ற நூல்களைத் தந்தவர் இவர்.

### எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இவர் தமிழ்க் கட்டுரைகள், மருத்துவன் மகள், தப்பிலி, கதையும் கற்பனையும் முதலான உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**கா. சுப்பிரமணியப்பிள்ளை**

இவர் ஆ. டு. பிள்ளை என்று அழைக்கப்பட்டவர். இவர் தமிழ் இலக்கிய வரலாறு எழுதியுள்ளார். சைவ சமயச் சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் இவர். திருவாசகத்திற்கு உரை எழுதியுள்ளார்.

**ந. மு. வேங்கடசாமி நாட்டார்**

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணி ஆற்றியவர், நக்கீரர், கபிலர், அகத்தியர், கள்ளர் சரித்திரம், வேளிர் வரலாறு முதலிய உரைநடை நூல்களைத் தந்தவர் இவர். பழஞ்சொற்களைக் கையாண்டு, பழந்தமிழ் இலக்கிய நடையில் அவருடைய நூல்கள உள்ளன.

**மு. கதிரேசச் செட்டியார்**

"மருச்ச கடிகம்" என்னும் வடமொழி நாடகத்தைத் தமிழில் "மண்ணியல சிறுதேர்" என மொழிபெயர்த்துத் தந்தவர் இவர். உரைநடைக் கோவை ஒன்ற படைத்துள்ளார். இதிலுள்ள கட்டுரைகளின் பழந்தமிழ் இலக்கிய மணத்தை நுகரலாம்.

**சோமசுந்தரப் பாரதியார்**

நாவலர் என்ற சிறப்பினைப் பெற்றவர். தசரதன் குறையும், கைகேயி நிறையும், என்றும் ஆய்வு நூலை இவர் எழுதினார். சேராதாயமுறை திருவள்ளுவர் போன்ற நூல்களைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார்.

**அ. சிதம்பரநாதன் செட்டியார்**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தார். இவர் பல உரைநடைக் கட்டுரைகள் எழுதியுள்ளார். முன்பனிக்காலம், தமிழோசை, தமிழ் காட்டும் உலகு போன்ற நூல்களைத் தந்தவர் இவர்.

**தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.**

இவருடைய "கானல்வரி" என்ற நூல் சிலம்பின் பெருமையைச் சுட்டுகிற நூல். சமணத் தமிழ் இலக்கியம் குலசேகரர், குடிமக்கள் காப்பியம் போன்றவை இவருடைய நூல்களாகும்.

**தேவநாயப் பாவாணர்**

ஆழமான சொல்லாராய்ச்சித்திறன் உடையவர். முதல் தாய்மொழி, ஒப்பியன் மொழி நூல், மொழி வரலாறு தமிழர் திருமணம், தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றைப் படைத்தவர். மு. வரதராசனார், மா. இராசமாணிக்கனார், வ.சு.ப. மாணிக்கனார், ரசிகமணி, ந. சுப்புரெட்டியார், போன்றவர்கள் தமிழுக்குச் சீரிய தொண்டாற்றித் தமிழை வளர்த்த பெருமைக்குரியவர்கள்.

**பயிற்சி வினாக்கள்**

1. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஒரு கட்டுரை வரைக
2. புதின இலக்கியத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியினையும் விவரி
3. உரைநடை இலக்கிய வளர்ச்சியுனை விளக்கு

## அலகு 5

## இக்காலக் கவிதை இலக்கியம் (பாரதியார் முதல் வைரமுத்து வரை)

**முன்னுரை**

கவிதை கலைகளின் அரசி என்பார் தாமஸ் ஸ்பார்ட். கவிதை உள்ளத்து உணர்ச்சிகளுக்கு உருக்கொடுத்து, எளிய இனிய நடையில் கருத்துக்களை வெளிப்படுத்துவது. நினைத்து நினைத்துப் பார்த்து நெஞ்சமெல்லாம் மகிழும்படி நம் கவனத்தை ஈர்த்து பிடித்து இழுத்து நிற்பது கவிதை. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதும் கவிதையே.

**பாரதியார் (1882-1921)**

"பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்ற குறிக்கோளோடு "நமக்குத் தொழில கவிதை நாட்டுக்குழைத்தல்" என்று தொழிலையேற்றுக் கவிதையைப் போர்ப்படையாகக் கொண்டு புறப்பட்ட முண்டாசுக் கவிஞன் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்று போற்றப் பெற்ற எட்டயபுரத்துச் சுப்பையா

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வாசையென்னாற் கழிந்த தன்றே
சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புதிது சோதி மிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மகா கவிதை

யாத்துத் தமிழ்நாட்டுக்குப் புகழ் சேர்த்த, காடுமணக்கவந்த கற்பூரச் சொற்கோ பாரதி

காக்கை குருவி எங்கள் சாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

என்று அஃறிணை உயிர்களையும் பொருட்களையும் தம் சாதி, தம் கூட்டமென்று கொண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டாளன் அருளாளன் நம் பாரதி

மண்மீதுள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும் தேவதேவா (ப. 89)

என்று இறைவனை இறைஞ்சும் இதயங் கொண்டவர் பாரதி

**பாரதியின் இளமைக்காலம்**

பாட்டுக்கொரு புலவனைத் தந்த நிலம் எட்டயபுரம் ஆகும். 1882 ம் ஆண்டு டிசம்பர் 11ம் நாள் தமிழுக்கும், தமிழர்க்கும் பெருமை சேர்க்கப் பாரதி பிறந்தார். ஐந்தாவது வயதில் 1887 ம் ஆண்டு தாயார் இலட்சுமியம்மாளை இழந்தார். பாரதிக்குப் பதினாறு வயதில் அவருடைய தந்தை சின்னச்சாமி ஐயர் மரணமடைந்தார். சுப்பையாவின் பதினொன்றாவது வயதில் "பாரதி" (கலைமகள்) என்ற பட்டம் வழங்கப்பெற்றது. "கருவிலே திருவுடையார்" என்னும் சொற்றொடருக்கு, நடமாடும் திருவுருவமானார். இயற்பெயர் சுப்பையா, சுப்பிரமணியன் என்பவை மறைந்து "பாரதி" நடைமுறைப் பெயராயிற்று.

**பன்மொழி படித்த பண்டிதன் பாரதி**

பாரதியார் ஐந்தாம் படிவம் வரை திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் படித்தார். பாரதியின் பதினைந்தாம் வயதில் ஏழு வயதுள்ள செல்லம்மாவை மணந்தார். செல்லம்மாவை அவரின் பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு காசியிலுள்ள பாரதியின் அத்தையின் ஆதரவால், காசியில் படிப்பைத் தொடர்ந்தார். 1898 முதல் 1902 முடிய உள்ள காலத்தில் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் ஆரியம் இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்.

என்று பிற மொழிகளை ஒப்பிட்டுத் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர் இவர். பன்மொழிப் பயிற்சி பாரதிக்கு மொழியியல் அறிவெல்லையின் பரப்பைப் பெருக்கியதெனலாம்.

**தமிழகம் திரும்பிய பாரதி**

எட்டயபுரம் சமீன்தார் வெங்கடேசு ரெட்டப்ப பூபதி அழைத்ததால் எட்டயபுரம் வந்து வாழ்ந்தார் பாரதி. சமீன்தார் வாழ்க்கையில் ஈடுபாடின்மையால் பாரதி சமீனை விட்டு விலகினார்.

**பாரதியின் கல்விப் பணியும் எழுத்துப் பணியும்**

1904ம் ஆண்டு பாரதியின் இருபத்திரெண்டாம் அகவையில் "தனிமை இரக்கம்" என்னும் முதல் கவிதை "விவேகபானு" என்ற இதழில் அச்சேறியது.

1904ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நவம்பர் மாதம் முடிய நான்கு மாதங்கள் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இப்பணியை நீத்து "சுதேசமித்திரன்"

இதழில் உதவியாசிரியராகப் பணிபுரிந்தார். பின்பு சக்கரவர்த்தினி என்ற பத்திரிக்கையின் ஆசிரியரானார். பத்திரிகைத் தொடர்பு பாரதியின் அரசியல் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்ததெனலாம்.

**விடுதலை வேள்வியில் பாரதி**

1906ல் **''இந்தியா''** என்னும் புர்ட்சி ஏட்டின் பொறுப்பாசிரியர் ஆனார் பாரதியார். திலகர் அரவிந்தர் போன்ற பெருந்தலைவர்களுடன் தொடர்பு கொண்டதால் பாரதியார் திலகருடைய தீவிரவாதக் கொள்கையில் ஒன்றிணைந்தார். வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா போன்றோரின் தொடர்பு சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை என்று முழங்க வைத்தது. எழுதத் தூண்டியது.. இந்நிலையில் சுதேச கீதங்கள் எனும் பாரதியாரின் முதல் கவிதைத் தொகுப்பு நூல் 1908ம் ஆண்டு வெளிவந்தது. அடுத்த ஆண்டு ஜன்ம பூமி என்னும் இரண்டாவது கவிதைத் தொகுப்பு 1910ம் ஆண்டு மாதா மாணிவாசகம், பாரதியின் சுயசரிதை போன்ற கவிதைத் தொகுப்பு நூல்களும் வெளிவந்தன.

அவதாரங்கள் எடுத்த ஆண்டவன் கண்ணனைப் பாரதி தன் கண்ணன் பாட்டு என்னும் கவிதை நூலில் தோழன், தாய், சேவகன், ஆசான், சீடன், சற்குரு, விளையாட்டுப்பிள்ளை, காதலன், கண்ணம்மா என் குழந்தை காதலி என் குல தெய்வம் என்று பல்வேறு உறவு நிலைகளில் பாடல்கள் புனைந்தான். கண்ணன் பாட்டு ஓர் உளவியல் அணுகுமுறைப் பாடல்களின் தொகுப்பெனின் மிகையாகாது.

**பாஞ்சாலி சபதம்**

பாரதியின் பாஞ்சாலி சபதம் உரிமையின் வேட்கையை உணர்ச்சியோடு பாடிய பாடல் பாரத் தாயின் அடிமை நிலையை உணர்த்திக் காட்டப் பாஞ்சாலியைப் பாரதத் தாயாக உருவகம் செய்து எழுதிய காப்பியம் பாஞ்சாலி சபதம்.

பாஞ்சாலி சபத நூலின் முகவுரையில், "பாஞ்சாலி சபதம்" பற்றிய பாரதியாரின் கருத்து எண்ணிப் பார்க்கத்தக்கது. பாஞ்சாலி சபதம் எனது சித்திரம், வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக இந்நூலை வியாச பாரதத்தின் மொழிபெயாப்பென்றே கருதிவிடலாம். அதாவது கற்பனை திருஷ்டாந்திரங்களில் எனது சொந்தச் சரக்கு அதிகில்லை. தமிழ்நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி. தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கும். எண்ணத்தால் இந்நூலை எழுதினேன் என்று பாரதி கூறுகின்றார்.

பாண்டவர்கள் சூதில் தோற்று திரௌபதியை இழந்து நிற்கக் காரணமாக அமைந்தவன் தருமன் என்பதால் அண்ணன் தருமன் மீது கோபங்கொண்டு வீமன், "இது பொறுப்பதில்லை. தம்பி எரிதழல் கொண்டுவா கதிரை வைத்திழந்தான். அண்ணன் கையை எரித்திடுவோம்" என்கிறான். இவ்வாறு கூறும் துணிவைப் பாரதியிடம் மட்டும் தான் காண்கிறோம்.

ஏழ்மையும் வறுமையும்

பாட்டுக்கொரு புலவன் பாரதிக்கும் பசி, பட்டினி, கடன் வழங்குதல் பழகிப் போன நடைமுறைகளே. அந்த மாக்கவிஞன் அந்நிலையிலும்

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா"

என்று பாடினான். அப்படி இசைபாட அவனால் தான் முடியும். அவன் மகாகவி. உலக மகாகவி பாரதியின் சமுதாயச் சிந்தனைகள் சில,

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் "
"எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை"
"பேரோசைக் காரனடா பார்ப்பன்
பார்ப்பனை ஐயரென்ற காலமும் போச்சே....."
"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று கூறி
அலையும் அறிவிலிகாள் ...."
"கற்பு நிலை என்று சொல்ல வந்தால் - இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்பன போன்ற பாடல்களைப் பாடி மூடக் கொள்ளைக முடை நாற்றம் வீசுகின்ற சமுதாயத்தையும் பாரதி ஒட்டு மொத்தமாகச் சாடுகிறார்.

**கூற்ற கவிஞனின் இறுதி நாட்கள்**

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை துதிக்கையால் பாரதியைத் தள்ளியது. யானையின் கொடுஞ் செயலிலிருந்து அன்றைக்கு பாரதியைக் காப்பாற்றியவர் குவளையூர் கண்ணன் பாரதியார் அதிர்ச்சியில் நோயுற்றுக் குணம் அடைந்தார். பின்னர் வயிற்றுக் கடுப்பு நோய் அவரைத் தீவிரமாகத் தாக்கியது.

1882ம் ஆண்டு டிசம்பர் 11ம் நாள் புகழொடு தோன்றிய பாரதி 1921 செப்டம்பர் 11ம் நாள் மறைந்தார். முப்பத்தொன்பதாண்டு முடியுமுன்னே மறைந்தாலும், பாரதி தம் படைப்பால் உலகமகா மேதைகளின் கவிஞர்களின் வரிசையில் சிறப்பிடம் பெறுகின்றார்.

குறுகிய காலம் வாழ்ந்தாலும், நெடிய புகழ் சேர்த்தார். இறவாநிலை பெறுகின்றனர் என்பதைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

தமிழுக்குத் தொண்டுசெய்தோன் சாவதில்லை
தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ

எனும் வைர வரிகளால் குறிப்பிடுகின்றார்.

**விடுதலைப் பண் இசைத்த பாரதி**

நாடு அடிமைப்பட்டுக் கிடந்த சூழ்நலையில் பாரதி, விடுதலை பண்ணிசைத்தார்.

"விட்டுவிடுதலை யாகிநிற் பாய்இந்தச்
சிட்டுக் குருவியைப் போல....."

என்று உவமை காட்டிப் பாடினார் பாரதி

நாடு விடுதலை பெறும் முன்பே

விடுதலை விடுதலை விடுதலை
பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை

என்று தீர்க்கதரிசன வெற்றி முழக்கமிட்டவர் பாரதி

ரஷ்யாவின் ஜார்மன்னன் வீழ்ச்சியை நம் நாட்டு விடுதலை உணர்வுக்கு எழுச்சிப் பண்ணாகிப் பூபாளம் பாடினார்.

"நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் - இந்தப்
பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் - பரி
பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்."

என்று இந்திய மக்கள் கொள்ள வேண்டிய உணர்வைப் பாட்டால் தீட்டினார் பாரதி

"தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடுமிலேச்சரை
மாய்த்திட விரும்பார் வாழ்வுமோர் வாழ்வுகொல்"

என்று பேடிகளை எள்ளி நகையாடினான் பாரதி. பேதைமையையும் பேடிமையும் அகன்றால்

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று

ஆடிப்பாடலாம் என்பதை 1921க்கு முன்பே பாடிக் குறிப்பால் உணர்த்தினான். உரிமை பெற்ற நாட்டில் தான்

"எல்லோரும் ஓர்நிலை எல்லோரும் ஓர் விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்."

என்னும் ஒப்பில்லாச் சமுதாயம் காணலாம் என்றவர் பாரதி

"முப்பது கோடியும் வாழ்வோம் - வீழின்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்."

என்ற பாரத தேசத்தின் அரசியல் எழுச்சிக்குப் பாட்டு யாத்தார் பாரதி. அதில் பாரதி தேசத்தின்

ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு ஒட்டுமொத்த இந்திய உணர்வு, ஆகியவை அடித்தளமாக அமைந்திருந்தன.

**பாரதியின் பாடல்கள்**

பாரதி பாரதம் பற்றிப் பாடினான். தான் பிறந்த தமிழகத்தைப் பாடினான். செந்தமிழின் சிறப்பைப் பாடினான். தாயின் மணிக்கொடியைப் போற்றிப் புகழ்ந்தான். கீதை மொழி பெயர்ப்பு, உபநிஷத்துத்துக்களைத் தமிழாக்கம் செய்தான். தமிழ்ச் சாதியைப் பாடினான். தேசியத் தலைவர்களைப் பாடினான். நடிப்பு சுதேசிகளையும் பாடினான். தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள் பாடினான். கந்தனைப் பாடினான். கண்ணனைப் பாடினான். காளியைப் பாடினான். கர்த்தரைப் பாடினான். அல்லாவைப் பாடினான். அவன் சமரச சன்மார்க்க நெறி கெண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டாளன். வள்ளலாரின் வாரிசு அவன் என்பதைப் பாரதியின் பாடல்கள் உணர்த்துகின்றன.

தமிழ்நாட்டின் புகழ்பாடும் தலைசிறந்த கவிஞன் பாரதி

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே" என்றும்
"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்றும்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும்சிலப் பதிகாரம் என்றோர் - மணி
ஆரம்படைத்த தமிழ்நாடு"

என்றும் தமிழ்நாட்டைப் போற்றுகின்றார் பரதி

தமிழ் வளர வழி சொல்லும் பாரதி

"சேம முற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்"
"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

என்று தமிழ் வாழ, வளர வழியும் சொல்கிறார் பாரதி

வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் பாரதி

குற்றம், குறைகளை மட்டும் சுட்டிக் காட்டுவதோடு அமைவது சிறந்த திறனாய்வாகாது குறைகளைப் போக்குமுறைகளையும் கூறுவதே சிறப்பான அணுகுமுறையாகும். அனைத்துக்கும் பொருந்தும் இம்முறை constructive crtiticism என்று போற்றப் பெறுகின்றது.

பாரத சமுதாயத்தின் தாழ்வு நிலை கண்டு 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்று உளம் வெதும்பிய பாரதி "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே" என்றால் பாரதியின் அடிப்படையான எண்ணம்

"ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மமித் தேசத்தில் எய்தின் ராயி ன்"
என்ற பேதமற்ற பிரிவில்லா மனம் வேண்டுமென்றார்.
"பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு"

என்று நாட்டுப்பற்றுடன், பாரத நாட்டை போற்றுகிறார். உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்யும் உள்ளம் உருவாக வேண்டும். தன்னலம் பேணி இழிதொழில் புரியா நிலை வேண்டும் என்கிறார் பாரதி. இளைய பாரதத்திற்கு அறிவுரை தரும் பாரதி

"ஒளியடைந்த கண்கள், உறுதி கொண்ட நெஞ்சம்
களி படைத்த மொழி, கடுமை கொண்ட தோள்:

தெளிவு பெற்ற மதி, சிறுமை கண்டு பொங்கி
எளிமை கண்டு இரங்கும் உள்ளத்தோடு
ஏறுபோல் நடக்கும் நடை கொண்ட இளையப் பாரதம்
உருவாக வேண்டும்
ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும்
உதய ஞாயி றொப்ப"

இளைய பாரதத்தார் உருவாக வேண்டும் என்பது பாரதியின் எண்ணமும் அறிவுரையுமாகும்.

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை"

என்ற உள்ள உறுதி வேண்டும் என்கிறார் பாரதி.

"தலையிலடி விழுந்தால் சஞ்சலப் படாதே
கவலைப் படுதே? கருநாடு
கவலையற் றிருத்தலே முத்தி"

என்று முத்தி நிலைக்கும் நரகத்துக்கும் முழுமையான அறிவு விளக்கம் தந்து, கவலை கொள்ளாத மனத்திற்கு வழி வகுக்கிறார் பாரதி.

பாரதி பிறப்பால் தமிழன் நாட்டுப் பற்றில் இந்தியன், உலக அமைப்பில் உலகக் குடிமகன், ஆன்மீக உணர்வில் அருள் உள்ளங்கொண்டு பேராளன் என்றே உரைக்கலாம்.

### கட்டுரை வினாக்கள்

1. பாரதியாரின் இளமைக்காலம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக
2. பாரதியின் எழுத்துப்பணி பற்றி எழுதுக
3. பாரதியின் இறுதி நாட்கள் பற்றி குறிப்பு எழுதுக
4. பாரதியின் பாடல்கள் பற்றி குறிப்பு எழுதுக
5. பாரதியின் கண்ணன் பாட்டின் சிறப்பை விளக்குக
6. தமிழும் தமிழரும் உயர்வுற பாரதி காட்டும் வழிகளைத் தொகுத்தெழுதுக

## பாவேந்தர் பாரதிதாசன்

### பாவேந்தரின் வாழ்க்கை குறிப்புகள்

கனக சுப்புரத்தினம் என்ற இயற்பெயர் கொண்ட பாவேந்தர் பாரதிதாசன் 1891 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் புதுச்சேரியில் பிறந்தார். ஃபிரஞ்சுப் பள்ளியில் சில ஆண்டுகளும் தமிழ்ப் பள்ளியில் பல ஆண்டுகளும் கல்வி பயின்றார். மகாகவி பாரதியுடன் பத்தாண்டுகளுக்கு மேல் மிக நெருக்கமாகப் பழகியவர், பாரதிதாசன் 1964ஆம் ஆண்டு தம்முடைய 73ம் வயதில் சென்னையில் இயற்கை எய்தினார்.

### பாரதிக்கு தாசன் ஆனவர்

பாவேந்தரை நோக்கிப் பாரதியார் பாடு என்று சொன்னார். உடனே பாவேந்தர் "எங்கெங்குக் காணினும் சத்தியா" எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். பாரதியார் பாவேந்தரைக் கவிஞன் என்று பாராட்டினார். "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம்" எழுதியது என அடிக்குறிப்பெழுதிய பாரதியார், அப்பாடலைச் சுதேசமித்திரனுக்கு அனுப்பினார். கவிதை அச்சேறியது. இதுவே பாரதிதாசன் முதற் கவிதையாகும். பாரதியின் உயர்பண்புகளால் கவரப்பட்ட கனகசுப்புரத்தினம் பாரதிக்கு தாசன் ஆனார்.

### பாரதிதாசனின் நூல்கள்

பாரதிதாசனின் முதல் நூல் "சுப்பிரமணியர் துதியமுது" என்பது. அழகின் சிரிப்பு இசையமுது, இரணியன் அல்லது இணையற்ற வீரன், இருண்ட வீடு, இளைஞர் இலக்கியம், எதிர்பாராத முத்தம், கடல்மேல் குமிழிகள், கண்ணகி வெண்பா, காதல் நினைவுகள், காதலா கடமையா? குடும்ப விளக்கு, குறிஞ்சித்தட்டு, சேரத்தாண்டவம், தமிழச்சியின் கத்தி, தமிழியக்கம், நல்ல முத்துவின் கதை, பாண்டியன் பரிசு, பாரதிதாசன் கவிதைகள், பாரதிதாசன் நாடகங்கள் மணிமேகலை வெண்பா போன்ற பல நூல்களை பாரதிதாசன் இயற்றியுள்ளார்.

**பாவேந்தரின் பாடல்களின் பண்பு**

பாவேந்தரின் நூல்கள், வாழ்வியலின் அனைத்துப் பக்கங்களையும் தொட்டுச் செல்கின்றன. பாவேந்தரின் கருத்து முத்திரைகளைப் பதித்துச் செல்கின்றன. தாம் கொண்ட அறிவுக் கொள்கைகளுக்கும் தன்மானக் கோட்பாடுகளுக்கும் இணைந்து வராதனவற்றைக் கூரிய சொல்லம்புகளால் துளைக்கும் ஆற்றல் அவருடைய கவிதைகளில் மிளிர்கின்றன.

"கொலை வாளினை எடடா - மிகு
கொடியோர் செயல் அறவே"

என்பது போன்ற பாடல்கள் புரட்சிக் கவிஞரின் கட்டளைகளாகவே அமைகின்றன.

**பாவேந்தரின் பாடல்களில் பா அமைப்பு**

பாவேந்தரின் பாடல்களில் ப◌ஃறொடை வெண்பா, நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா இணைக்குறள் ஆசிரியப்பா, எண்சீர் அறுசீர் வித்தங்கள் சிந்து வகைகளை கண்ணிகள் இடம் பெற்றுள்ளன.

**இயற்கை எழிலைச் சொல்லோவியமாக எடுத்துக்காட்டிய கவிஞன்**

மலையும் மலை சார்ந்த இடமுமாகிய சஞ்சீவி பர்வதத்தின் அழகைச் சொல்லோவியமாகத் தீட்டுகிறார் கருப்பொள், உரிப்பொருள் அனைத்தையும் பத்து வரிகளுக்குள் பளிச்சிடச் செய்கிறார் பாவேந்தர்.

"குயில் கூவிக்கொண்டிருக்கும் கோலம் மிகுந்த
மயில் ஆடிக்கொண்டிருக்கும் வாசம் உடையநற்
காற்றுக்குளிர்ந்தடிக்கும் கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுக்கள் உண்டு"

என்கிறார் பாரதிதாசன். நெஞ்சில் நிறுத்தங்கள் இந்த இடத்தைத்தான் சஞ்சீவி பர்வதத்தின் சாரலென்று சொல்லிடுவார். இயற்கையின் எழிலையும் எழிலின் பயனையும் இணைத்துப் பாடிய கவிஞன்.

அழகு, அழகுக்காக, கலை, கலைக்காக (Art is for artrsake) என்ற நிலை கடந்து அழகு, பயனும் தர வேண்டும் என்ற கருத்தோடு அழகின் பயனையும் ஒரு சேரத் தருகிறார் பாரதிதாசன். அழகின் சிரிப்பு எனும் 16 பாடல்களின் தொகுப்பு நூல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

"காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புணலில் கண்டேன் அந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப் பட்டாள்"

என்று இயற்கை அழகை நன்கு படைத்துக் காட்டியுள்ளார்.

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்
திருவிளக்கில் சிரிக்கின்றாள் நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள் அடடே செந்தோட்
புறத்தினிலே கலக்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள் விளைந்த நன்செய்
நிலத்தினிலே என்விழியை நிறுத்தி னாள்என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்
பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள் காண்
பழமையினால் சாகாத இளையவள்காண்
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்
நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை.

என்னும் பாடல் அழகுப் பொருட்களைப் பட்டியலிடுவதுடன் "அந்த அழகென்பாள் கவிதை தந்தாள். என் நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள். நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை". என்று அழகின் பயனையும் நிரல்படத் தொகுத் தருகிறது பாரதிதாசனின் பாடல்.

கல்வியே வாழ்வெனக் கருதுபவர் பாவேந்தர்

இருண்ட வீட்டின் இலக்கணம் தந்து கல்வியில்லாமையால் நேரிடும் அவலத்தை விளக்குகிறார்.

எல்லா நலமும் ஈந்திடுங் கல்வி
இல்லா வீட்டை இருண்டவீ டென்க
படிப்பிலார் நிறைந்த குடித்தனம் நரம்பில்
துடிப்பிலார் நிறைந்த சுடுகாடென்க

கல்வியால் வரும் நன்மையை விளக்காமல், கல்லாமையால் வரும் தீமையை விளக்கும் முறை எதிர்மனை அணுகுமுறை (Negative Approach) என்பர்.

குடும்ப விளக்கில், பாவேந்தர் பெண்கல்வியின் இன்றியமையாமையை நான்கே அடிகளில்

" கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைவதில்லை"

என்று விளக்குகிறார்.

உயர்ந்த உருவகமும் ஒப்புயர்வற்ற உவமையும் கையாண்டவர்

அணியிலக்கணத்தில் "உவமையணி, அணிகளுக்கெல்லாம் தாயணி ஆகும்" என்பர். பாவேந்தரின் உருவகங்களும் உவமைகளும் கவிதைகளுக்கு எழில் ஊட்டுவதுடன், படிப்போர்க்கு நனி சிறந்த இலக்கிய இன்பமும் நல்குகின்றன.

" நீலவான் ஆடைக்குள் உடல் மறைந்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை
கோல முழுதுங் காட்டிவிட்டால் - காதற்
கொள்ளையிலே இவ் வுலகம் சாமோ? - வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ - நீதான்
சொக்கவெள்ளிப் பாற்குடமோ! அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ"

என்றும் " புரட்சிக்கவியின்" பாடல் வான் நிலவை வருணிப்பது போல் மன்னன்மகள் அமுதவல்லியின் அழகுக்கும் பொருந்துகிற வருணனையை அமைத்துள்ளார் புரட்சிக் கவிஞர்.

சமத்துவ சமுதாயம் அமைய

"ஓடப்பரா யிருக்கும ஏழையப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவிவார் உணரப்பா நீ "

என்னும் பாரதிதாசனின் பாடல், பொருளாதார மேடுபள்ளங்களை மாற்றும் ஒரு சமத்துவ சமுதாயம் அமைந்திட வேண்டும் ஏன்பதை எடுத்துக்காட்டுகிறது.

## இளமை மணம், விதவை மணம் பற்றிப் பாவேந்தர்

பாவேந்தர் இளமை மணத்தை வெறுத்தார். இளமை மணக் கொடுமையின் அவல விளைவுகளைக் கண்கலங்க வைக்கும் முறையில் பாட்டிசைத்தார்.

" ஏழுவயதே எழிற் கருங்கண்மலர்
ஒரு தாமரை முகம்
சுவைத்தறியாத சுவைதரும் கனிவாய்
.....கூவத் தெரியாத குயிலின் குஞ்சு
தாவாச் சிறுமான் மோவா அரும்பு"

என்கிறார் பாரதிதாசன்.

கனவனை இழந்த பெண் மறுமணம் செய்துகொள்ள வேண்டுமென்பதற்கு ஆதரவாகிப் பண்ணிசைத்தார் பாரதிதாசன்.

"ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்றம் உண்டோ
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செய்யப் பெண் கேட்கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தாற்பின் மணத்தால் தீதோ
பாடாத தேனீக்கள் உலாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ"

என்னும் பாடல் ஆணுக்கோர் நீதி, பெண்ணுக்கோர் நீதி கூறும் சமுதாயம் அநீதியை இடித்துரைப்பதாக அமைகிறது. பாவேந்தரும் தமிழும்

"தமிழுக்கு அமுதென்று பேர்: நிலவென்று பேர்
மணம் என்று பேர்: மது என்று பேர் "

என்கிறார் பாரதிதாசன்.

" கனியிடை ஏறிய சுளையும் முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சிப்
பாகிடை ஏறிய சுவையும் நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர் "

என்று தாய்த் தமிழைத் தன் உயிர் என்று பாரதிதாசன் கூறக் காண்கிறோம்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு".

என்று தமிழைத் தம் வாழ்வாகவும் வாழ்வின் வளமாகவும் கருதினார் பாவேந்தர். தமிழ் மக்கள் தமிழை உயிராகக் கருதிச் செயல்படவேண்டுமென்று உள்ளுறையாக உணர்த்துகின்றார் பாரதிதாசன் எனலாம்.

**கட்டுரை வினாக்கள் : ஒரு பக்க அளவில் எழுதுக**

1. பாவேந்தரின் வாழ்க்கை பற்றிய சிறுகுறிப்பு வரைக
2. பாவேந்தரின் நூல்கள் பற்றிய குறிப்பு தருக
3. பாவேந்தாரின் பொது உடைமைக் கருத்துக்கள், தற்கால உலகுக்கு ஒத்து வருமா என்பது குறித்தெழுதுக

**மூன்று பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக**

1. "பாவேந்தர் இயற்கையின் எழிலை விளக்குவதுடன் பயனையும் இணைத்துப் பாடுபவர்" விளக்குக.
2. பாவேந்தர் கையாண்ட உருவகம், உவமைகளின் சிறப்பு பற்றி ஒரு கட்டுரை எழுதுக
3. பாவேந்தர் காண விரும்பிய புதிய உலகம் பற்றித் திறனாய்வு முறையில் கருத்து தருக
4. தமிழ்: தமிழகம் குறித்த பாவேந்தரின் நிலையும், நினைப்பும் பற்றி விரிவான கட்டுரை தருக

**கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை (1876-1954)**

மரபுக் கவிதைகளையும், புதிய முறைகளின் படி வந்த கவிதைகளையும் எளிமையும், இனிமையும், தெளிவாகப் புரியும் தன்மையும் கொண்டு அமையும் வண்ணம் யாத்தவர் தேசிக விநாயகம் பிள்ளை

கவிமணி கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் தோன்றியவர், இனிமை, எளிமை, ஆழமுடைமை, பெண்மை, மென்மை, தண்மை, ஆகிய பண்புகளின் கலவைக் கூட்டு அவருடைய கவிதைகள். இவருடைய "கோயில் வழிபாடு" என்கிற கவிதை கற்பாரின் மனத்தில் இடம் பிடித்து விடுகின்ற கவிதை.

"கோவில் முழுதும் கண்டேன் - உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்"

என்று தொடங்கி இறைவன் எங்கே இருக்கிறான் தெரியுமா ப்ரியமான தோழி என்று கேட்டு

"உள்ளத்தில் உள்ளான் அடி - அது நீ
உணர வேண்டும் அடி
உள்ளத்தில் காண்பாய் எனில் - கோவில்
உள்ளேயும் காண்பாய் அடி"

என்கிறார் கவிஞர் கவிமணி

**ஆசிய ஜோதி தந்த அருமைக் கவிஞர்**

ஆங்கில அறிஞர் எட்வின் ஆர்னால்டு எழுதிய Light of Asia என்ற நூலைத் தழுவி ஆசிய ஜோதி என்ற நூலைத் தமிழில் தந்துள்ளார் கவிமணி. அந்நூலில் புத்தரிடம் வந்து, தன்னுடைய இறந்த குழந்தையை உயிர்ப்பித்துத் தருமாறு கேட்கிற தாயாரின் வேதனைகளைக் கவிஞர் கவிமணி,

"பெற்ற வயிறு துடிக்குதையா - ஒரு
பிள்ளையும் வேறு எனக்கு இல்லை ஐயா
உற்ற உறவினர் இல்லை ஐயா - என்மீது
உள்ளமிரங்கிட வேணும் ஐயா"

என்று நெஞ்சை உருக்கு வார்த்தைகளில் தருகின்றார்.

**பயிற்சி வினாக்கள்**

கட்டுரை அளவில் விடை தருக

1. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை ஆற்றிய தமிழ்த்தொண்டினை விள்குக
2. கவிமணியின் கவிதைச் சிறப்பினை விவரி

**நாமக்கல் கவிஞர் (1888-1972)**

நாமக்கல்லை அடுத்த மோகனூரில் தோன்றியவர். காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்பட்டவர் இவர். எளிமையும், சந்த இனிமையும் நிறைந்த பாடல்களைப் பாடியவர் இவர். தமிழின் இதயம் என்கிற தலைப்பில் நாமக்கல் கவிஞர் தமிழரிடையே இனஉணர்ச்சியை ஊட்டும் பாடல்களைப் பாடியுள்ளார். "அவனும் அவளும்" என்னும் காப்பியத்தைப் படைத்துள்ளார். இவருடைய "காந்தி அஞ்சலி" இவர் காந்தி மீது கொண்டுள்ள பற்றினை எடுத்துக்காட்டுகிறது.

"கத்தியின்றி இரத்தம் இன்றி
யுத்தம் ஒன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர் "

என்று பாடிய பாடலால் தமிழ் மக்களை அஹிம்சை வழியில் போராடத் தூண்டியவர் இவர்.

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்"

என்று தமிழினத்தின் பெருமையைச் சொல்லுகின்ற எழுச்சிப் பாடல்களைத் தந்தவர் இவர். ஏறத்தாழ முப்பது நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

**பயிற்சி வினா**

1. நாமக்கல் கவிஞரைப் பற்றி சிறுகுறிப்பு தருக

**சுரதா (1921)**

பாரதியாருக்கு ஒரு தாசன் அமைந்தது போல, கண்ணனுக்குத் தன்னை தாசனாகக் கண்ணதாசன் அமைத்துக் கொண்டதைப் போல, பாரதிதாசனுக்கு ஒரு தாசன் என்று தன்னை அழைத்துக் கொண்டவர் கவிஞர் சுரதா. சுப்புரத்தினதாசன் என்பதன் சுருக்கமே சுரதா என்பது. இவரது இயற்பெயர் இராசகோபால். இவருடைய பாடல்களில் உவமைகளைப் பயன்படுத்தி இலக்கியச் சுவை அள்ளித் தரும் இவருடைய இயல்பினால் இவர் "உவமைக் கவிஞர்" என அழைக்கப்பட்டார். சுரதா தஞ்சை மாவட்டம் பழையனூரில்

1921ம் ஆண்டு பிறந்தார்.

தேன் மழை என்பது அவருடைய சிறந்த கவிதைகளின் தொகுப்பு. சிரிப்பின் நிழல், பட்டதாரி, உதட்டில் உதடு, சுவரும் சுண்ணாம்பும், சாவின் முத்தம், துறைமுகமம் போன்ற படைப்புக்களைத் தந்தவர் இவர்.

"ஆடிக் களிக்கும் அழகிய மயிலே
உன் விழி நீலம்: உன் தோகை நீளம்
உன்னுடல் மரகதம்: உச்சிக் கொண்டையோ
கண்ணைக் கவர்ந்திடும் காயாமலர்கள்"

என்று மயிலை வருணிக்கிறார் சுரதா.

**கண்ணதாசன் (1927-1981)**

தமிழ் இலக்கிய உலகில் மட்டுமன்றி, பட்டி தொட்டிகளிலெல்லாம் எளிமையும் இனிமையும் நிறைந்த கவிதைகளைப் பரப்பிப் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் படியான கவிதைகளைத் தந்தவர் கவியரசுக் கண்ணதாசன். இவரது இயற்பெயர் முத்தையா. இராமநாதபுரம் மாவட்டம் சிறுகூடர் பட்டியில் 1927 ம் ஆண்டு பிறந்தவர் கண்ணதாசன். திரைப்பட உலகின் மூலம் ஏராளமான பாடல்களைத் தந்தவர் இவர்.

அவருடைய திரை இசைப் பாடல்கள் பல தொகுதிகளாக வந்துள்ளன. தைப்பாவை, கவிதாஞ்சலி மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி ஆகிய சிறுகாப்பியங்களும் இவர் பாடியவை. இவருடைய இயேசு காவியம் காலத்தை வென்ற படைப்பாகும். தென்றல், கண்ணதாசன் ஆகிய திங்கள் இதழ்களை இவர் நடத்தினார். "சேரமான் காதலி" என்னும் இவருடைய நாவலுக்குச் சாகித்திய அகாடமிப் பரிசு கிடைத்துள்ளது.

மாங்கனியில் வருகிற

" விரிக்காத தோகை மயிலே வண்டு
மடக்காத வெள்ளை மலர் நிலவு கண்டு
சிரிக்காத அல்லிமுகம் செகத்தில் யாரும்
தீண்டாத இளமை நலம்: பருவ ஞானம்"

என்னும் கவிதை வரிகள் மூலம் மாங்கனியை இவர் அறிமுகம் செய்யும் அழகே தனி அழகுதான். "காதற்ற ஊசியுடன் வாராது காண் கடை வழிக்கே" என்ற பட்டினத்தார் கருத்தை "வீடுவரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரைப் பிள்ளை, கடைசி வரை யாரோ?" என்று எளிய நடையில் தந்தவர் கண்ணதாசன்.

"கண்ணிலே நீரெதற்கு, காலமெல்லாம் அழுவதற்கு"
"போனால் போகட்டும் போடா"
"மலர்ந்தும் மலராத பாதி மலர் போல"
"வளரும் விழி வண்ணமே"

போன்ற இவருடைய பாடல்கள் மறக்க முடியாதவை

**முடியரசன் (1920-1998)**

1920 ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் பெரிய குளத்தில் பிறந்தவர். இயற்பெயர் துரைராசு. வீரகாவியம், பூங்கொடி என்பன இவர் எழுதிய காப்பியங்கள். முடியரசன் கவிதைகள், கவியரங்கில் முடியரசன் என்பன இவருடைய தொகுப்புகள். ஊன்றுகோல் எனப் பண்டிதமணியைப் பற்றி ஒரு காப்பியம் பாடியுள்ளார்.

**வாணிதாசன் (1915-1974)**

இவர் பாரதிதாசன் பரம்பரையில் தோன்றியவர். புதுவையை அடுத்த வில்லியனூரில் பிறந்தவர். இயற்பெயர் எதிராஜ் அரங்கசாமி. தமிழச்சி, கொடிமுல்லை, எழிலோவியம், இன்ப இலக்கியம், பொங்கல் பரிசு, தொடுவானம், வாணிதாசன் கவிதைகள் எழில் விருத்தம் ஆகியவை இவருடைய படைப்புக்களாகும்.

**அழ. வள்ளியப்பா 1922-1987)**

செந்தமிழ் நாட்டுச் சிறு குழந்தைகளுக்கென்றே பாடல்களை எழுதி வருபவர் இவர். குழந்தை

எழுத்தாளர் சங்கம் நிறுவி அதைப் போற்றி வருபவர். மலரும் உள்ளம், பாட்டிலே காந்தி, பாப்பாவுக்குப் பாட்டு, போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைக் குழந்தைகளுக்காக எழுதியுள்ளார்.

**பெருஞ்சித்தரனார் (1933-1996)**

இவருடைய இயற்பெயர் துரை மாணிக்கம். தேவநேயப் பாவாணரைப் போல் தனித்தமிழ்ப் பற்று கொண்டவர். 1933ல் தோன்றியவர் பெருஞ்சித்திரனார்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு போன்ற தூய தனித்தமிழ் இதழ்களை நடத்தி வந்தார். தமிழை வணங்கி,

" அன்னை மொழியே
அழகார்ந்த செந்தமிழே
முன்னைக்கும் முன்னே
முகிழ்ந்த நறுங்கனியே"

என்று இவர் வாழ்த்துவதைக் காணமுடிகிறது.

கற்பனைக்கும் சொல் விளையாட்டிற்கும் எடுத்துக்காட்டாக இனிமையாக அமைகின்ற கவிதைகளைத் தருபவர் கலைஞர் மு. கருணாநிதி. நாணல் என்னும் புனைபெயரில் கவிதை தந்த அ. சீனிவாச ராகவன், "வெள்ளைப் பறவைக்குச்" சாகித்ய அகாடமி பரிசினைப் பெற்றார். தமிழ் ஒளி கா. மு. ஷெரிப், மீ. ப. சோமு, பெரிய சாமித்தூரன், புத்தனேரி, ரா. சுப்பிரமணியன், தூத்துக்குடி ஜெகதீசன், கவிஞர் தியாகு போன்ற புகழ்மிக்க கவிஞர்களும் கவிதை இலக்கிய உலகில் இடம் பெற்றுத் திகழும் சிறந்த கவிஞர்களாவர்.

**பயிற்சி வினாக்கள்**

1. "உவமைக் கவிஞர்" என்று சுரதா அழைக்கப்படக் காரணம் என்ன?
2. சுரதா பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக
3. கண்ணதாசன், முடியரசன், அழ. வள்ளியப்பா, பெருஞ்சித்தரனார் ஆகியோரின் கவிதைகள் குறித்து எழுதுக

**வைரமுத்து (1953)**

கவியரசு வைரமுத்து 12.7.1953ம் ஆண்டு மேட்டூரில் உள்ள தாமரைக்குளத்தில் இராமசாமித் தேவருக்கும், அங்கம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். தாமரைக்குளத்தில் இவர் ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்னர் வடுகப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலைக் கல்வியையும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை முதுகலைப் பட்டங்களையும் பெற்றார். இவருடைய 17வது வயதில் "வைகறை மேகங்கள்" என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டார். 1981 ல் திரையுலகில் பாரதிராசாவின் மூலம் அறிமுகமாகி திரைப்படப் பாடல்களை எழுதத் தொடங்கினார். என் பழைய பனை ஓலைகள், "பெய்யெனப் பெய்யும் மழை", "திருத்தி எழுதிய தீர்ப்புகள்", "இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல", இன்னொரு தேசிய கீதம், கவிராஜன் கதை போன்ற கவிதைத் தொகுதிகளை இவர் படைத்துள்ளார்.

அடியே காதலி
என் சம்யுக்தா
நம்மைக்
கல்யாண தேசத்திற்குச்
சுமந்து செல்ல
சமூக லாயத்தின எந்தக் குதிரையும்
சம்மதிக்காத போது
உன்
அரண்மனையிலிருந்து
நடந்தே வந்தோம்
நாமிருவரும்
வர்க்கங்களின் அர்த்தத்தை
நாம் கணிதத்தை விடவும்
காதலில்தான் புரிந்து கொண்டோம்.

என்று தம்முடைய திருமண நிகழ்ச்சி பற்றிக் கவியரசு குறிப்பிடுகிறார்.

வைரமுத்துவை ஆதரித்த அவருடைய அத்தை இறந்தபோது

என்தண்ணீர்ப் பந்தலே
தீப்பற்றி விட்டது
இனி
கண்ணீர்க்குடமா வந்து
அணைக்கப் போகிறது
அறுந்து விழுந்த
ஆரம்ப நிலவே
உன் புதை குழியில்
என் கனவுகளுமல்லவா
அடக்கம் செய்யப்பட்டு விட்டன.

என்று அவருடைய சோகத்தினைக் கவிதையாகத் தந்திருக்கிறார்.

**பயிற்சி வினா**

1. கவியரசு வைரமுத்து பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக

**புதுக்கவிதை**

மரபின் மடியில் தவழ்ந்து கொண்டிருந்த கவிதை யாப்பிலக்கணத்திற்குட்பட்டிருந்தது. பழங்காலப் பாவடிவங்களையும், எதுகை, மோனைகளையும், பற்றிக் கவலைப்படாமல் கருத்துக்கும் வெளியீட்டுக்கும் மட்டுமே முக்கியத்துவம் தருகின்ற கவிதைதான் புதுக்கவிதை. மரபிலக்கணத்தை உடைத்துக் கொண்டு சுதந்திர வானில் பறந்து திரியும் புதுமைக் கவிதைகள் புதுக்கவிதை. "சித்திரக் கதைகளை ஒப்பது: சிலேடையில் மீண்டும் ஈடுபடுவது: ஒளிவீச்சுப் போல அறிவு வீச்சாக அமைவது: உணர்வில் தைக்குமாறு உரைப்பது புதுக்கவிதை" என்கிறார் தமிழண்ணல் (தமிழ் இலக்கிய வரலாறு ப. 385)

புதுக்கவிதையின் தோற்றத்தைப் பிரான்சு நாட்டின் Beudelaire, Rimbaud, Mallarme போன்ற புரட்சிக் கவிகள் உருவாக்கியதாகக் கூறுவர். அமெரிக்காவில் வாழ்ந்த வால்ட் விட்மன் வசன கவிதையைத் தோற்றுவித்ததாகவும் கூறுவர். நம் நாட்டில் வாழ்ந்த தாகூர் கீதாஞ்சலியை இலக்கணம் நீங்கிய புதுக்கவிதையில் படைத்தார். இதனை Verse Libre அல்லது free verse என்று கூறுவர். தமிழில் முதன்முதலில் தோற்றுவித்தவர் பாரதியார் தான் என்கிறார் ச. வே. சுப்பிரமணியன் (தமிழ் இலக்கிய வரலாறு ப. 367) பாரதியார், ஞாயிறு சக்தி, காற்று, கடல் ஆகியவற்றைப் பற்றிப் பாடியுள்ளார்.

**புதுக்கவிதையின் இலக்கணம்**

இலக்கணச் செங்கோல்
யாப்பு சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்
பண்டித பவனி - இவை
எதுவுமேயில்லாத

என்று புதுக்கவிதைக்கு இலக்கணம் காட்டுகிறார். மு. மேத்தா

"புதுக்கவிதை என்பது சொற்கள் கொண்டாடும் சுதந்திரத் தினவிழா" என்கிறார் ஈரோடு தமிழன்பன்.

**புதுக்கவிதை இயக்கத்தை வளர்த்தவர்கள்**

ந. பிச்சமூர்த்தி, "காட்டு வாத்து", "வழித்துணை", போன்ற புதுக்கவிதைகள் மூலம் புதுக்கவிதை இயக்கத்தை வளர்த்தார். "மயன்" என்ற பெயரில் க. நா. சுப்பிரமணியம், புதுமைபித்தன், கு. ப. ராசகோபாலன், சி. சு. செல்லப்பா "நாணல்" என்ற பெயரில் அ. சீனிவாச ராகவன், வல்லிகண்ணன், சிவசங்கரன், ஞானக் கூத்தன் போன்றவர்கள் புதுக்கவிதையை வளர்த்தனர்.

**சிற்பி. பாலசுப்பிரமணியம்**

1996ல் "சிற்பியின் கவிதை வானம்" என்ற தலைப்பில் 670 பக்கங்கள் கொண்ட இவரது

கவிதை நூல்களின் பெரிய தொகுதியானது மரபு, புதுமை ஆகிய இரண்டையும் இணைத்துத் தருகிறது.

மௌனம் என்ற தலைப்பில்

"அகன்ற உலகு நான் என்றது அகல்
அழுகிய உடல் நான் என்றது திரி
அசையும் உயிர் நான் என்றது சுடர்
உழைப்பு வடித்த உதிரத் துளிகளாய்த்
தேங்கிய எண்ணெய் வாய்திறக்கவே இல்லை"

என்று கவிதை பாடியுள்ளார் சிற்பி

குழந்தைகள் என்ற தலைப்பில்

"இல்லறப் பள்ளியறை
வெளியிடும் ஆண்டுமலர்"

என்கிறார் சிற்பி

தியாகிகள் என்ற தலைப்பில்

"வேலியைப் பாதுகாக்க
மடிகின்ற பயிர்கள்"

என்கிறார் சிற்பி

நா. காமராசன்

குறள் என்னும் தலைப்பில்

"சொல்லில் கனலாகி
சோதி வடிவாகிப்
பல்கதிர் ஞாயிறாகிப்
பவனிவந்த குறள்நூலே"

என்று குறிப்பிடுகிறார் நா. காமராசன்

மு. மேத்தா

கவலைகளைத் தூக்கிக் கொண்டு
திரியாதே
அவை
கைக்குழந்தைகளல்ல

என்கிறார் மு. மேத்தா. கண்ணீர் பூக்கள், அவர்கள் வருகிறார்கள், ஊர்வலம் போன்ற கவிதைத் தொகுப்புக்களைத் தந்தவர் மு. மேத்தா

வள்ளுவரின் இரு நோக்கு இவளின் கண் உள: ஒன்று நோய் நோக்கு: மற்றொன்று அந்நோய்கku மருந்து என்கிற கருத்தை

நீ முதல்முறை என்னைத் தலைசாய்த்துக்
கடைக் கண்ணால் பார்த்த போது
என் உள்ளத்தில் முள் பாய்ந்தது
அதை இன்னும் எடுக்கவில்லை
முள்ளை முள்ளால் தானே எடுக்க வேண்டும்?
எங்கே, இன்னொரு முறை பார்

என்று புதுக்கவிதை வடிவில் தருகிறார் மு. மேத்தா.

தேசப்பிராவே என்று அழைத்து, சேரிகளில் மட்டுமே நீ யாத்திரை செய்வாய் என்பதைத் தெரிந்து கொண்டால் உன்னை நேசித்தவர்கள் தேசத்தையே சேரியாக மாற்றிவிட்டார்கள் என்கிற கவிதை மூலம் அங்கதச் சுவையை எடுத்துக் காட்டுகிறார் மு. மேத்தா.

அப்துல் ரகுமான்

ஆழமான சமுதாயச் சிந்தனைகளையும், கேலி, கிண்டல், போன்றவற்றையும், வெளிப்படுத்துகின்ற சொற்சித்திரங்களாக அப்துல் ரகுமானின் புதுக்கவிதைகள் அமைந்துள்ளன.

"உடல் தூர்கைகள்
கண்ணீர், வியர்வை, ரத்த வண்ணங்கள் தோய்ந்து
தியாகத் திரைச் சீலையில் தீட்டிய
சித்திரம் இந்தச் சுதந்திரம்
ஈரோடு தமிழன்பன்
தெருக்குப்பைத் தொட்டிகள்
மாவட்டு உண்ணாமலே, மழலைகள்
பெறுகின்றன"

என்று சமுதாய நிலையை ஈரோடு தமிழன்பன் சுட்டிக் காட்டுகிறார்.

**கலைஞர் கருணாநிதி**

கருணாநிதி கவிதைகளில் சொற்சிலம்பமும், கருத்துப் கோவையும் நம்மைத் திகைக்க வைக்கின்றன. குன்றக்குடி அடிகளார் அழைத்த கவியரங்கைப் பற்றி

"எனக்கிருக்கும் எத்தனையோ வேலைக்கிடை இதுதான் கவிதை
எனக்கிருக்கும் எனை அழைத்தது என்பால்
தனக்கிருக்கும் பேரன்பை வெளிப்படுத்தப் பெருந்
தவக்கிருக்கர் அடிகளார் அழைத்திட்டார்."

என்கிறார் கலைஞர்.

**வைரமுத்து**

மரபுக் கவிதைளைப் பாடிய வைரமுத்து புதுக்கவிதைகளையும், வாய் இனிக்க, நெஞ்சு மகிழப் பாடியுள்ளார் இவருடைய "சலவைக்கும் போடாத ஜனநாயகம்" என்னும் கவிதையில்.

இந்திய வாக்காளர்களுக்கு
உரிமை தந்தீர்களே
உயிர் தந்தீர்களா?

என்று கேட்கிறார் வைரமுத்து

"தேர்ந்தெடுப்பது மனிதரை என்றால்
வாக்குமட்டும் ஏன் சிங்கம் புலி குரங்குகளுக்கு"

என நகையாடுகிறார் வைரமுத்து.

**கவிஞர் மீரா**

கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், ஊசிகள் போன்ற கவிதை நூல்களைத் தந்தவர் மீரா என்கிற மீ. ராசேந்திரன். சிவகங்கை சண்மக மன்னர் இறந்த போது இரங்கற்பா பாடியவர் இவர். இன்குலாப், இரா. வேலுச்சாமி, அமுதபாரதி, அரசு மணிமேகலை, அறிவுமதி, போன்றவர்கள்தம் புதுக்கவிதையால் தமிழுக்கு எழில் நலம் சேர்க்கின்றார். கவிஞர் வாலி இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றைப் புதுக்கவிதையில் தந்து புது மெருகு ஊட்டுகின்றார். இன்னும் வைத்தீஸ்வரன், சண்முக சுப்பையா, கல்யாண்ஜி, கங்கை கொண்டான், நீல்மணி போன்ற புதுக்கவிஞர்கள் தங்களுடைய படைப்புகளைத் தந்து இக்காலக் கவிதை இலக்கியம் ஏற்றமும் சிறப்பும் பெறத் தங்களின் பங்களிப்பினைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## பயிற்சி வினாக்கள்

1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை எழுதுக.
2. புதுக்கவிதையின் வளர்ச்சியும் தேக்கமும் பற்றி ஒரு கட்டுரை வடிவில் விளக்குக.

## தாள் – IV
## இலக்கிய வரலாறு

அலகு- 1 தமிழின் பெருமை - தமிழின் தொன்மை - தமிழ் இலக்கிய வடிவங்கள் - வகைகள் - தமிழ் இலக்கிய வரலாற்றுக் கல்வி - தொல்காப்பியம் - சங்க இலக்கிய உண்மை - எட்டுத்தொகை - பத்துப்பாட்டு

அலகு- 2 அற இலக்கியம் - திருக்குறள் முதலாகப் பதினெண்கீழ்க்கணக்கு - ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற நீதி நூற்கள்.
காப்பிய இலக்கியம் - சிலப்பதிகாரம் முதல் இயேசு காவியம் வரை - பக்தி இலக்கியம் - நாயன்மார் - ஆழ்வார் - தாயுமானவர் - இராமலிங்க சுவாமிகள் - சித்தர்கள்.

அலகு- 3 சிற்றிலக்கியம் - வகைகள் - சமயம் வளர்த்த தமிழ் - சமணம் - பௌத்தம் - சைவம் - வைணவம் - இசுலாம் - கிறிஸ்தவம்

அலகு- 4 வெளிநாடுகள் தந்த இலக்கியம் - நாடக இலக்கியம் - சிலம்பு முதல் வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் வரை - கதை இலக்கியம் - சிறுகதை, புதினம் - உரைநடை இலக்கியம்.

அலகு- 5 இக்காலக் கவிதை இலக்கியம் - பாரதியார் முதல் வைரமுத்து வரை - புதுக்கவிதை

பாடநூல் : தமிழ் இலக்கிய வரலாறு -முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
மணிவாசகர் பதிப்பகம், சென்னை

## B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2005

## Part III - Tamil - Main

### தாள் - IV இலக்கிய வரலாறு

(For those who joined in July 2004 onwards)

**Time : Three Hours** **Maximum : 100 marks**

பகுதி அ - (10x1 = 10 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. கடைச்சங்கம் நிறுவப்பட்டிருந்த இடம்
   (அ) மதுரை (ஆ) தென்மதுரை
   (இ) கபாடபுரம் (ஈ) குமரி
2. சீவகனைக் காப்பியத் தலைவனாகக் கொண்ட காப்பியம்
   (அ) சிலப்பதியாரம் (ஆ) மணிமேகலை
   (இ) சீவகசிந்தாமணி (ஈ) பெருங்கரை

3. தேவாரப் பாடல்களை பாடியவர்

(அ) அப்பர் (ஆ) கம்பர்

(இ) பரணர் (ஈ) கபிலர்

4. கலிங்கத்துப் பரணியைப் பாடியவர்

(அ) கம்பர் (ஆ) ஜெயங்கொண்டார்

(இ) நக்கீரர் (ஈ) ஔவை

5. அகிலன் படைத்த புதினம்

(அ) பாவை விளக்கு (ஆ) தம்பி

(இ) பெற்ற மனம் (ஈ) கரித்துண்டு

6. தமிழ்ச் சிறுகதையின் தந்தை என அழைக்கப்பட்டவர்

(அ) புதுமைப்பித்தன் (ஆ) ஜெயகாந்தன்

(இ) விந்தன் (ஈ) அண்ணா

7. தமிழ்த்தென்றல் என அழைக்கப்பட்டவர்

(அ) திரு வி.க. (ஆ) விந்தன்

(இ) கண்ணதாசன் (ஈ) மறை மலையடிகள்

8. தொல்காப்பியம் எத்தனை பிரிவுகளைக் கொண்டது ?

(அ) 3 (ஆ) 4

(இ) 5 (ஈ) 6.

9. 'பாஞ்சாலிச் சபதம்' என்ற நூலை எழுதியவர்

(அ) பாரதிதாசன் (ஆ) பாரதியார்

(இ) கண்ணதாசன் (ஈ) கவிமணி

10. தொல்காப்பியம் எந்த நூற்றாண்டில் இயற்றப்பட்டது ?

(அ) கி.பி. 2 (ஆ) கி.பி. 3

(இ) கி.பி. 4 (ஈ) கி.பி.5

பகுதி ஆ- (5 x 6 = 30 மதிப்பெண்கள்)

250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக

11. (அ) மணிமேகலை உணர்த்தும் அறக் கருத்துக்களை கூறுக.

(அல்லது)

(ஆ) வைணவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டினை குறிப்பிடுக.

12. (அ) தேவாரப் பதிகங்களின் தனித் தன்மையைச் சுட்டுக

(அல்லது)

(ஆ) புதுக்கவிதைகளின் உத்திகளை எடுத்துக்காட்டுக.

13. (அ) தமிழ்ச் சிறு கதையின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ)திரு வி.க - சிறு குறிப்பு வரைக

14. (அ) பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் குறித்து கட்டுரைக்க

(அல்லது)

(ஆ) எட்டுத்தொகையில் அகப்பொருள் நூல்கள் பற்றி கூறுக.

15. (அ) பெரிய புராணம் சிறப்பை விளக்குக

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தின் சிறப்பை விளக்குக.

பகுதி இ - (5 x 12 = 60 மதிப்பெண்கள்)

600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக

16. (அ) கலம்பகம் குறித்து நீவிர் அறிவன யாவை ?

(அல்லது)

(ஆ) உலா இலக்கியம் குறித்து நீவிர் அறிவன யாவை ?

17. (அ) 'சங்க காலம் ஒரு பொற்காலம்' என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்க.

18. (அ) 'திருக்குறள் அறிவுறுத்தும் இலக்கியம்' - இக்கருத்துப் பொருந்துமா ?

(அல்லது)

(ஆ) திருக்குறளில் காணப்படும் இலக்கிய நயத்தை எடுத்துக்காட்டுக.

19. (அ) தமிழில் காணப்படும் புதினங்கள் வகைப்படுத்தி மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தமிழ் உரைநடை வளர்ச்சியைக் குறிப்பிடுக.

20. (அ) இலக்கிய வளர்ச்சியில் திரைப்படத்தின் பங்கு பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் இலக்கியப் படைப்புகளைப் பாராட்டுக.

-------